★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
E Paper

மின்னிதழ்
2024 ஓகஸ்ட் 24 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN 92 தினகரன்
1932–2024 ANNIVERSARY

வரு. 92 இல. 202 | Saturday 24, August, 2024 | 13 பக்கங்கள் | 50/-

## ஜனாதிபதி தேர்தல் கண்காணிப்பு; 12 நாடுகளின் பிரதிநிதிகள் வருகை

ஜனாதிபதி தேர்தலை கண்காணிப்பதற்காக பன்னிரண்டு நாடுகளின் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

இந்தியா, நேபாளம், வங்கதேசம், பாகிஸ்தான், மாலைதீவு உள்ளிட்ட 12 நாடுகளுக்கு இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது. இதேவேளை ஜனாதிபதி தேர்தலை கண்காணிப்பதற்காக 06

# புதிய நீர் கட்டண திருத்தம்; அரச வர்த்தமானி வெளியீடு

## ஓகஸ்ட் 21 முதல் புதிய நீர் கட்டணம் நடைமுறைக்கு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

புதிய நீர் கட்டண திருத்தம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி நீர் கட்டண திருத்தம் இம்மாதம் 21ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாக நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்தது.

புதிய நீர் கட்டண திருத்தத்தின் கீழ் சமுர்த்தி உதவி பெறுவோர் மற்றும் தோட்டப்புற குடியிருப்புகள் தவிர்ந்த வீட்டுப்பிரிவு, அரசாங்க பாடசாலைகள், அரச அனுசரணை பாடசாலைகள், அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்கள், அரசாங்க வைத்தியசாலைகள் நன்மையடையவுள்ளன.

நீர் கட்டண விலைச் சூத்திரத்தின் அடிப்படையில் வீட்டுப் பாவனையாளர்களின் குடிநீர் கட்டணத்தை 7 சதவீதத்தாலும் அரசாங்க வைத்தியசாலைகளின் நீர் கட்டணம் 4.5 சதவீதத்தாலும் விகாரைகள் மற்றும் வழிபாட்டு தலங்களுக்கான நீர் கட்டணம் 6.3 சதவீதத்தாலும் குறைப்பதற்கு தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்நிலையில் மொத்த நீர் கட்டணத்தையும் 5.94 சதவீதத்தால் குறைப்பதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியிருந்தது.

வீட்டுப்பாவனை நீர் கட்டணத்தில் 0 முதல் 5 அலகுகளுக்கான கட்டணம் 60 ரூபாவிலிருந்து 50 ரூபாவாக 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. 76 முதல் 100 அலகுகளுக்கு இடைப்பட்ட அலகுகளுக்கு அறவிடப்படும் குடிநீர் கட்டணம்



270 ரூபாவிலிருந்து 250 ரூபாவாக 20 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அரச மற்றும் அரச அனுசரணை பாடசாலைகள், அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்கள், அரச வைத்தியசாலைகள் பிரிவின் கீழுள்ள அனைத்து பிரிவுகளுக்கும் 60 ரூபாவாக இருந்த கட்டணம் 5 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய கட்டணம் 55 ரூபாவாகும்.

இதேவேளை அரசாங்க வைத்தியசாலைகளுக்கு 100 ரூபாவாக இருந்த ஒரு அலகு நீரின் கட்டணம் 5 ரூபாவால் குறைக்கப்பட்டு, அதன் புதிய கட்டணம் 95 ரூபாவாகும்.

எனினும் இந்த குடிநீர் கட்டண திருத்தத்தின் கீழ் தற்போது நடைமுறையிலுள்ள மாதாந்த சேவை கட்டணத்தில் எந்தவித திருத்தமும் செய்யப்படவில்லையென தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை மேலும் தெரிவித்தது.



03 தேர்தல் முறையை விரைவில் டிஜிட்டல் மயமாக்குவோம்

## ஸ்ரீல.சுகவை பிரதிநிதித்துவப்படுத்தும்
# அங்கஜன், துஷ்மந்த எம்.பிக்கள் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு



ஜனாதிபதி தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவரும் யாழ். மாவட்ட சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பதில் பொதுச் செயலாளர் சாரதி துஷ்மந்தவும் உறுதியளித்துள்ளனர். கொழும்பு, பிளவர் வீதியிலுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அலுவலகத்தில் நேற்று (23) காலை ஜனாதிபதியை சந்தித்து இது தொடர்பாக உறுதியளித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர்கள், பொருளாதார நெருக்கடிக்கு நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளை வழங்கக்கூடிய ஒரு தலைவரே நாட்டுக்கு தேவையென சுட்டிக்காட்டினர்.

தற்போதைய நிலையில் பரீட்சார்த்தம் செய்து 06

# ஜனாதிபதி ரணிலுக்கு சிறிடெலோ ஆதரவு



ஜனாதிபதி தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக களமிறங்கியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க சிறிடெலோ அமைப்பின் தலைவர் பரராஜசிங்கம் உதயராசா மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் விளம்பர செயலாளர் யூ.எல்.எம்.என்.முபீன் ஆகியோர் தீர்மானித்துள்ளனர். 06

## புதுப்பிக்கப்படாத சாரதி அனுமதிப்பத்திரங்களை
# இரத்து செய்ய எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை

**அது தொடர்பில் வெளியான செய்திகள் முற்றிலும் தவறு;**
**2025 முதல் 6 மாதங்களில் e– சாரதி அனுமதிப்பத்திரங்கள் அறிமுகம்**

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர், பொறியியலாளர் ரஞ்சித் ரூபசிங்க தெரிவிப்பு**



புதுப்பிக்கப்படாத அனைத்து சாரதி அனுமதிப்பத்திரங்களை இரத்து செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளதாக வெளியான செய்திகள் முற்றிலும் தவறானவையென்றும் அவ்வாறு எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லையென்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர், பொறியியலாளர் ரஞ்சித் ரூபசிங்க தெரிவித்தார். 06

## டிஜிட்டல் ரயில் பயணச்சீட்டு விநியோகம் ஆரம்பம்

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள டிஜிட்டல் ரயில் பயணச்சீட்டு விநியோக நடவடிக்கை நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய ரயில் திணைக்களத்தின் www.pravesha.lk எனும் இணையத்தளத்தினூடாக பயண விபரத்தை உள்ளிட்டு பற்று அட்டை அல்லது கடன் அட்டை மூலம் பணத்தை செலுத்தி பயணச்சீட்டை பெற்றுக்கொள்ள முடியும். இந்நிலையில் பணம் செலுத்திய பின்னர் 06

## ஆசியாவின் முதலாவது குரங்கம்மை நோயாளி தாய்லாந்தில் கண்டறியப்பட்டுள்ளதாக தகவல்

**ஆசியாவின் முதலாவது குரங்கு அம்மை நோயாளி தாய்லாந்தில் கண்டறியப்பட்டுள்ளார். ஆபிரிக்காவிலிருந்து தாய்லாந்துக்கு வந்த போதே இவ்வாறு இவர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.**

**66 வயதான இவர், இந்த நோய் தொடர்பான ஆய்வக சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது குரங்கு அம்மை**



**நோயால் பாதிக்கப்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக தாய்லாந்து சுகாதார நோய்** 06

## ‘சிறிகொத்த’ தலைமையகத்தில் நாளை ஐ.தே.கவின் விசேட மாநாடு

**ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட மாநாடு அக்கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் நாளை ஞாயிற்றுக்கிழமை (25) பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது.**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சுயேச்சை வேட்பாளராக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கான யோசனைக்கும் இந்த விசேட மாநாட்டில் அங்கீகாரம் வழங்கப்படவுள்ளது.**

**ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இந்த மாநாடு நடைபெறவுள்ளதாக கட்சியின் தலைமையகம் தெரிவித்துள்ளது.** 06

# மக்கள் என்னுடன் அணிதிரள்வார்களாயின் சகல பிரச்சினைகளுக்கும் விரைவில் தீர்வு

## அமைச்சர் டக்ளஸ் நம்பிக்கை

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**



"நடக்கவிருக்கும் பாராளுமன்ற, மகாணசபை, உள்ளூராட்சிமன்ற தேர்தல்களில் மக்கள் என்னோடு அணிதிரண்டு பயணிப்பார்களேயானால், தமிழ் பேசும் மக்கள் எதிர்கொள்ளும் 06

# ஹக்கீமிடம் ரூ. 200 கோடி கோரி அநுரகுமார திஸாநாயக்க கடிதம்



முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியதாக கூறி தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க 200 கோடி ரூபாவை மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் வழங்க வேண்டுமென கோரி கோரிக்கை கடிதம் அனுப்பியுள்ளார்.

காத்தான்குடியில் கடந்த ஓகஸ்ட் மாதம் பாராளுமன்ற 06

# தோட்டப்புற மக்களுக்கு தரமற்ற மது விநியோகமா?

## மஞ்சுளவின் கூற்றுக்கு அமைச்சர் ஜீவன் கடும் கண்டனம்



சீர்திருத்தம் மற்றும் தேர்தல் ஆய்வுகள் அலுவலகத்தின் நிர்வாக பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்கவால் தோட்டத் தொழிற்சங்கங்கள் தொடர்பாக தொலைக்காட்சியொன்றில் வெளியிட்டுள்ள கருத்துக்கு நீர்வழங்கல், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரும் இ.தொ.கா. பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் தனது கண்டனத்தை தெரிவித்துள்ளார். 06

## வெற்றிடமாகவுள்ள தேசியப்பட்டியல் MP பதவியை
# இரத்தினபுரி தமிழருக்கு சஜித் வழங்குவாரா?

## வேலுகுமார் MP கேள்வி



முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவின் தேசியப்பட்டியல் வெற்றிடமாக உள்ளதுடன், கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு வழங்கப்பட்ட வாக்குறுதியின்படி தேசியப்பட்டியல் எம்.பி. ஒன்று வழங்கப்படவில்லை. இதனால் தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு வாக்களித்த மக்கள் பெரும் ஏமாற்றத்துக்கு 06

## தமிழர் தரப்பு பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவதாக சிறிதரன் எம்.பி. அறிவிப்பு



ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கியுள்ள தமிழர் தரப்பு பொது வேட்பாளர் பா.அரியநேத்திரனுக்கு பூரண ஆதரவை வழங்குவதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் உறுதியளித்துள்ளார்.

சிவஞானம் சிறிதரன் எம்.பி.யை யாழ்ப்பாணத்திலுள்ள அவரது 06

# தமிழ் தரப்பு பொது வேட்பாளருக்கு நாங்கள் ஆதரவு வழங்கவில்லை

## நாம் தீர்மானிப்பவருக்கே மக்கள் வாக்களிப்பர்




"ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கியுள்ள தமிழர் தரப்பு பொது வேட்பாளரை நாங்கள் ஆதரிக்கவில்லை. நாம் அறிவிக்கும் வேட்பாளருக்கே எம்மக்கள் வாக்களிப்பார்கள்" என தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இச்சந்திப்பில் மேலும் 06

# ஜனாதிபதி வேட்பாளர் டொக்டர் இல்யாஸ் காலமானார்

**கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்**



ஜனாதிபதி வேட்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான டொக்டர் ஐதுரூஸ் முஹம்மது இல்யாஸ் நேற்று முன்தினம் இரவு (22) தனது 79ஆவது வயதில் காலமானார்.

வைத்தியர் இன்திகாப், புத்தளம் நகர சபையின் முன்னாள் உறுப்பினர்களான ஜமீனா கமருதீன் மற்றும் பஸ்மியா 06

# விவாதத்தில் பங்கேற்க தயார் திகதி, நேரத்தை அறிவிக்கவும்

## பெ:.ப்ரல் அமைப்புக்கு நாமல் எம்.பி. கடிதம்



ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களின் கொள்கைகள் குறித்து விவாதத்தில் கலந்துகொள்ள தயாரென பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பெ:ப்ரல் அமைப்பின் பணிப்பாளர் ரோஹன 06

# பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் திட்டத்தில் ஒவ்வொரு மணித்தியாலமும் பெறுமதி வாய்ந்தது

* மக்களின் வாக்களிக்கும் உரிமையை போலவே அவர்களின் வாழ்வுரிமைக்கும் மதிப்பளிக்க வேண்டும்
* உள்ளூராட்சிசபை தேர்தலை நடத்துவதற்கு காலம் செலவிடப்பட்டிருந்தால், நாட்டின் பொருளாதாரத்தை மீட்டிருக்க முடியாது
* ஜனாதிபதி தேர்தலின் பின்னர் பொதுத் தேர்தலும் அதனை தொடர்ந்து மாகாணசபை, உள்ளூராட்சிசபை தேர்தல்களும் நடத்தப்படும்
* பொருளாதாரத்தை இயல்பு நிலைக்கு கொண்டுவர ஏன் வழக்கு தொடரவில்லை?



## புதிய மக்கள் முன்னணியின் தேசிய மாநாட்டில் ஜனாதிபதி தெரிவிப்பு

உள்ளூராட்சிமன்ற தேர்தலை பிற்போடுவது மக்களின் அடிப்படை உரிமை மீறல் என சுட்டிக்காட்டிய போதிலும், மக்களின் வாழ்வுரிமையை பாதுகாப்பதற்காக அந்த தேர்தலை நடத்த முடியாமல் போனதற்கு வருந்தவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் வேலைத்திட்டத்தில் ஒவ்வொரு மணித்தியாலமும் பெறுமதி வாய்ந்தது என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, உள்ளூராட்சிமன்ற தேர்தலை நடத்துவதற்கு அந்த நேரத்தை செலவிட்டிருந்தால் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டிருக்க முடியாது போயிருக்கும் எனவும் தெரிவித்தார். மஹரகம இளைஞர் சேவை மன்ற கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (22) பிற்பகல் நடைபெற்ற புதிய மக்கள் முன்னணியின் தேசிய மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனை குறிப்பிட்டார். உணவு, மருந்து, எரிவாயு, எரிபொருள் இன்றி மக்களின் அன்றாட வாழ்க்கையை தொடர முடியாது என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, கடந்த இரண்டு வருடங்களில் மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாக்க தன்னை அர்ப்பணித்துள்ளதாகவும் கூறினார்.

அத்துடன் ஜனாதிபதி தேர்தலின் பின்னர் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அதற்கு தேவையான பணம் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அதன் பின்னர் மாகாணசபை தேர்தலையும் உள்ளூராட்சிசபை தேர்தலையும் நடத்த எதிர்பார்த்துள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

இங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"அரசியல் ரீதியாக நாம் இப்போது புதிய சகாப்தத்தில் நுழைந்துள்ளோம். அந்த சகாப்தம் எங்கள் அணியால் உருவாக்கப்பட்டது. இந்த நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த போது பாரம்பரிய தலைவர்கள் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முன்வரவில்லை. ஆனால் எமது குழு ஓரணியில் திரண்டு அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. அப்போது எங்கள் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருந்தது. ரூபாயின் பெறுமதி




சரிந்திருந்தது. ஆனால் பொருளாதாரத்தை மறுசீரமைத்து, ரூபாயை பலப்படுத்தி, நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தியுள்ளோம்.

கடந்த இரண்டு வருடங்களில் நாட்டின் பொருளாதாரம் வலுவாக உள்ளது. வரும் ஆண்டிலும் அது வலுவாக இருக்கும் என நம்புகிறோம். பொருளாதார வளர்ச்சியை இலக்காக கொண்டு நாம் முன்னேற வேண்டும். சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை மீறினால் பணம் கிடைக்காது. அந்த நிபந்தனைகளை மறுபரிசீலனை செய்வது என்பது தற்போதைய நிலைமைகளை விட்டு விலக நேரிடும். நாங்கள் இன்னும் மென்மையான விதிமுறைகளை கேட்டோம். ஆனால் கிடைக்கவில்லை. இந்த சலுகைகள் மூலம் பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு செல்லும் திறன் நம்மிடம் உள்ளது. ஆனால் இவற்றை மாற்ற முயற்சித்தால் கிடைக்க வேண்டிய பணத்தை இழக்க நேரிடும். பின்னர் நாம் வரிசையில் நிற்கும் யுகத்துக்கு செல்ல நேரிடும். மிகவும் சிரமப்பட்டு நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுத்துள்ளோம்.

நான் நாட்டை பொறுப்பேற்ற போது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 89 பில்லியன் டொலரிலிருந்து 76 பில்லியன் டொலர்வரை குறைந்திருந்தது. இதை மீண்டும் 84 பில்லியன் டொலராக கொண்டு வந்துள்ளோம். இரண்டு வருடங்களில் இந்தப் பணியை முடித்தோம். ஏனைய நாடுகளுக்கு இதுபோன்ற நிலையிலிருந்து மீண்டுவர 5 10 ஆண்டுகளானது. நாம் சரியான பொருளாதார வேலைத்திட்டத்தை முன்னெடுத்ததால், இந்த வெற்றியை பெற முடிந்தது. இதையெல்லாம் தவிர்த்துவிட்டு உள்ளூராட்சிமன்ற, மாநகரசபை தேர்தல்களை நடத்தியிருந்தால் என்ன நடக்கும் என்று கேட்க விரும்புகிறேன். உள்ளூராட்சி தேர்தலை நடத்த குறைந்தது இரண்டரை மாதங்கள் தேவைப்படும். அந்த இரண்டரை மாதங்களை நாம் இழந்திருந்தால் இன்று நமது மொத்த உள்நாட்டு உற்பத்தியை 84 பில்லியன்

சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடினோம். உலகின் பல்வேறு நாடுகளுக்கு சென்று தலைவர்களை சந்தித்து கலந்துரையாடினோம். இந்த நேரத்தை உள்ளூராட்சிசபை தேர்தலுக்கு பயன்படுத்தியிருந்தால் இந்த நாட்டின் பொருளாதாரத்தை மீட்டிருக்க முடியுமா என்று கேட்க வேண்டும். ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணி நேரமும் நாட்டை முன்னேற்றுவதிலேயே முக்கியமாக இருந்தது. இரண்டு வருடங்களில் உலகில் எந்த நாடும் இத்தகைய வெற்றியை பெற்றிருக்காது. சர்வதேச சமூகம் எங்களை பாராட்டுகிறது. இவ்வாறு பணியாற்றியிருக்கா விட்டால் இந்த நாடு அழிந்திருக்கும். ஆனால் எதிர்க்கட்சிகள் வழக்கு தொடர்ந்தன.

2022இல் பொருளாதாரத்தை இயல்பு நிலைக்கு கொண்டுவர ஏன் அவர்களுக்கு உயர் நீதிமன்றத்துக்கு சென்று வழக்கு தொடர முடியவில்லை? அதனால் இந்தத் தேர்தலை ஒத்திவைத்ததில் எனக்கு எந்த வருத்தமும் இல்லை. ஆனால் நாட்டில் ஜனாதிபதி தேர்தலையும் பொதுத் தேர்தலையும் ஒத்திவைக்க முடியாது. அது மக்களின் உரிமை. அந்த வாக்களிக்கும் உரிமையை நான் மதிக்கிறேன்.

அதேபோல் மக்களின் வாழ்வுரிமையையும் நான் மிகவும் மதிக்கிறேன். எரிவாயு, மருந்து, எரிபொருள் இல்லாமல் மக்கள் வாழ முடியாது. அந்த அடிப்படை உரிமைகளை பாதுகாத்தேன். தேர்தலை எப்போது நடத்துவது என்பதை தேர்தல் ஆணையகமே முடிவு செய்ய வேண்டும் என உயர் நீதிமன்றம் இன்று தெரிவித்துள்ளது. ஜனாதிபதி தேர்தலின் பின்னர் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு நாம் அனைவரும் தீர்மானித்துள்ளோம். அதற்கான நிதி ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் மாகாணசபை தேர்தல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மாகாணசபை தேர்தல் அவசியம் என்று பலர் கூறுகின்றனர். இதனை நாம் ஏற்றுக்கொள்கிறோம். அதற்கு தேவையான பணத்தையும் ஒதுக்க வேண்டும். இது குறித்த புதிய சட்டங்களை கொண்டுவர வேண்டும். இளைஞர் பிரதிநிதித்துவம் கொண்டுவரப்பட வேண்டும். இரண்டு வருடங்கள் என்ற குறுகிய காலத்தில் இந்த நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த முடிந்ததையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

எனவே நாம் எடுக்கும் முடிவு சரியா தவறா என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.



# 2025 ஜனவரி முதல் அரச ஊழியர்களின் அடிப்படை சம்பளம் அதிகரிக்கப்படும்



* 2025 ஜனவரி முதல் மூன்று ஆண்டுகளுக்கு வாழ்க்கை செலவு கொடுப்பனவு நிலையாக ரூ. 25,000 வழங்கப்படும்
* அரச சேவையில் கனிஷ்ட ஊழியரின் சம்பளம் ரூ. 55,000
* அடுத்த ஆண்டு ஜனவரி முதல் ஓய்வூதியம் பெறுவோருக்கு ரூ.12,500 வாழ்க்கை செலவு கொடுப்பனவு

## சம்பள முரண்பாடுகள் தொடர்பான ஜனாதிபதி நிபுணர் குழுவின் தலைவர் உதய ஆர். செனவிரத்ன

2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அரச சேவையின் அடிப்படை சம்பளம் கனிஷ்ட தரத்தினருக்கு 24% இலிருந்து 50% வரை அதிகரிக்கப்படும் என சம்பள முரண்பாடுகள் தொடர்பான ஜனாதிபதி நிபுணர் குழுவின் தலைவர் உதய ஆர். செனவிரத்ன தெரிவித்தார்.

மேலும் நிலவும் பணவீக்கம் மற்றும் பொருளாதார காரணிகளை கருத்திற்கொண்டு 2025 ஜனவரி முதல் மூன்று வருடங்களுக்கு நிலையாக ரூ.25,000 வாழ்க்கை செலவு கொடுப்பனவை அனைத்து அரச ஊழியர்களுக்கும் வழங்க சம்பள முரண்பாடுகள் தொடர்பான ஜனாதிபதி நிபுணர் குழு முன்மொழிந்துள்ளது. இந்த முன்மொழிவுகளுக்கு அமைச்சரவை மற்றும் திறைசேரியின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக குறிப்பிட்ட அவர், புதிய திருத்தத்தின் மூலம் அரச சேவையில் உள்ள மிகக் குறைந்த ஊழியர்களின் அடிப்படை சம்பளம் ரூ.30,000 ஆகவும் வாழ்வாதார கொடுப்பனவுடன் கூடிய மொத்த சம்பளம் ரூ.55,000 ஆகவும் அதிகரிக்கும் எனத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் (22) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தை அதிகரிக்க வேண்டிய தேவை இருப்பதாகவும், கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட அரச சேவை தொழிற்சங்க நடவடிக்கைகளை கருத்திற்கொண்டு சம்பள முரண்பாடுகளை தீர்க்கவே இந்த முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டதாகவும் உதய ஆர்.செனவிரத்ன சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் அபிவிருத்தியில் அரச சேவை முக்கிய பங்கு வகிப்பதுடன், அது அபிவிருத்திக்கான உந்து சக்தியாகும். தற்போது அரச சேவையில் உள்ள அனைத்து சவால்களையும் வெற்றிகொள்வதற்கு மேற்கொள்ள வேண்டிய மறுசீரமைப்புகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் அரச ஊழியர்களுக்கான திருப்திகரமான பணிச்சூழலை உருவாக்கும் சிபாரிசுகளையும் பொதுமக்களுக்கு சிறந்த சேவை மற்றும் பொருளாதார அபிவிருத்தியில் முக்கிய பங்கு வகிக்கும் உந்து சக்தியாக மாற்றுவதற்கான விரிவான வேலைத்திட்டத்தையும் ஜனாதிபதி சம்பள முரண்பாடுகள் தொடர்பான விசேட குழு முன்வைத்துள்ளது. ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு 2025 ஜனவரி முதல், வாழ்க்கை செலவு கொடுப்பனவு தலா ரூ.12,500 வழங்குவதற்கும் 2020ஆம் ஆண்டுக்கு முன் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கு இதுவரை வழங்கப்படாத ஊதிய உயர்வை வழங்கவும் அதற்கேற்ப அவர்களின் ஓய்வூதியத்தை திருத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் தற்போதுள்ள நிதி சாத்தியத்தின் அடிப்படையில் படிப்படியாக பொருத்தமாக பலன்களை வழங்க 2025 வரவு, செலவுத் திட்டத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும். அரச சேவையின் வினைத்திறனையும் செயற்திறனையும் விருத்தி செய்து மக்களுக்கு சிறந்த அரச சேவையை வழங்கும் நோக்கில் 2025ஆம் ஆண்டு அரச சேவையில் விஞ்ஞான ரீதியில் வேலை ஆய்வு (Work Study) நடத்தப்பட்டு உரிய வகையில் அரச சேவையை மறுசீரமைப்பதற்கான விஞ்ஞான ரீதியான வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இதன் மூலம் தேவைக்கேற்ப அரச சேவையில் உள்ள ஊழியர்களின் எண்ணிக்கை சரியான முறையில் மதிப்பீடு செய்யப்படும். அரச ஊழியர்களுக்கு பொருத்தமான செயல்திறன் குறிகாட்டிகளை (KPI) அறிமுகப்படுத்தி அந்த செயல்திறன் முன்னேற்றத்தின் அடிப்படையில் வருடாந்த சம்பள உயர்வு வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்படும்.

மேலும் அவர்களின் செயல்திறன் முன்னேற்றத்தின் அடிப்படையில் ஊக்கத்தொகை மற்றும் பிற நிதி அல்லாத பலன்களை வழங்கும் முறையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அரச வரிக் கொள்கைக்குள் வரி செலுத்துவோருக்கு சிறந்த அரச சேவையை வழங்கும் தரமான அரச சேவைக்கான உகந்த அளவிலான அரசாங்க பொறிமுறையை தயார் செய்வதற்கு, இலங்கை தகுதி வழிகாட்டி (SLQF) மற்றும் தேசிய தொழில் தகுதிகள் (NVQ) அடிப்படையில் போட்டித்தன்மையுடைய ஆட்சேர்ப்பு முறையின் கீழ் அரச சேவையில் ஊழியர்களை ஆட்சேர்க்கும் முறை நிறுவப்படும். இது தகுதியானவர்களுக்கு உரிய இடம் அளிக்கும் யுகத்தை உருவாக்கும். குறிப்பாக 2025 முதல் அடுத்த மூன்று ஆண்டுகளில், டிஜிட்டல் மயமாக்கல் (Digitalization) மற்றும் தன்னியக்கமாக்கலுக்கு (Automation) முன்னுரிமை அளித்து, சாத்தியமான அனைத்து துறைகளிலும் தொழில்நுட்பத்தை அரச சேவையில் அறிமுகப்படுத்துவதன் மூலம் இ அரச சேவைக்கு (EGovernance) அரசாங்கத்தின் மூலதன முதலீட்டு திட்டத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படும். குறிப்பாக, அரச வருமானம் ஈட்டும் நிறுவனங்கள் மற்றும் பொது சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் செயல்திறனுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் கிராம உத்தியோகத்தர் அலுவலகம் முதல் அரச அமைச்சுகள் மற்றும் அனைத்து அரச நிறுவனங்கள் வரை, டிஜிட்டல் அரச சேவையை செயல்படுத்துவதன் மூலம் சிறந்த அரச சேவையை வழங்க முன்னுரிமை அளிக்கப்படும். பல ஆண்டுகளாக அரச திறைசேரியை நம்பியிருக்கும், அதேபோன்று, பாரம்பரிய திணைக்கள மாதிரியிலிருந்து விடுபட்டு, நவீனமயப்படுத்தப்பட்ட தொழில் முயற்சியாளர் மாதிரியாக மாற்றி, அனைவருக்கும் பயனளிக்கும் நிறுவனங்களாக இனங்காணப்பட்ட அரச நிறுவனங்களை மாற்றவும் அடுத்த மூன்று வருடங்களில் நடவடிக்கை எடுக்கப்படும். அந்த நிறுவனங்களின் பங்கு உரிமையில் 30% அரசாங்கத்திடமும், 30% முதலீட்டாளர்களிடமும், 30% பங்குச் சந்தையில் பட்டியலிடுவதன் மூலமும் பொது மக்களிடமும், 10% நிறுவன ஊழியர்களுக்கு உரிமையாகும். மிகவும் ஜனநாயக நிர்வாக கட்டமைப்பை கொண்ட பொது மக்கள் நிறுவனங்களாக (Public Quoted Company) அமைக்கப்பட்ட நிறுவன குழுமங்களாக உருவாக்கப்படும். அந்த நிறுவனங்களின் சேவைக்கு பணியமர்த்தப்படும், ஓய்வூதிய உரிமையுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் தற்போதைய ஓய்வூதியத்தை தள்ளிப் போட்டு, அவர்களின் வயது 60ஐ எட்டிய பிறகு, ஓய்வூதிய உரிமை பெறுவதோடு, அந்த நிறுவனங்களில் பணிபுரியும் காலத்தில் ஏனைய சலுகைகளை பெற உரிமை உண்டு. அரசாங்க செலவினங்களை குறைத்து தனியார் துறையை ஊக்குவிப்பதன் மூலம் சில அரச சேவைகளை வெளிப்புற சேவை வழங்குநர்களிடமிருந்து பெறுவதன் மூலம் உகந்த செயல்திறன் முறைகள் அறிமுகப்படுத்தப்படும். இது தேவையற்ற பணியாளர்களை அரச சேவையில் சேர்ப்பதை மந்தப்படுத்துவதோடு, மிகவும் பயனுள்ள சேவைகளை மேம்படுத்த அனுமதிக்கிறது. இது பொருளாதார சேவைகளை மேலும் விரிவுபடுத்தும். அரச ஊழியர்களின் வாழ்க்கை சுமையை குறைக்கும் வகையிலும், அரச ஊழியர்களின் சுகாதார செலவுகளை குறைக்கும் வகையிலும் அக்ரஹார மருத்துவக் காப்புறுதித் திட்டம் மறுசீரமைக்கப்படும். அதன்படி ஓய்வூதியம் பெறுவோர் உட்பட ஒவ்வொரு அரச ஊழியர்களுக்கும், மாதந்தோறும் ரூ.1,000 பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் மருத்துவப் பலன்கள் காப்புறுதித் திட்டத்தின் மூலம் அதிகபட்ச பலன்களை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், அக்ரஹார திட்டத்தை செயல்படுத்தும் தேசிய காப்புறுதி நிதியத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட அரச மருத்துவமனைகளில் அரச ஊழியர்களுக்கான சிறப்பு வசதிகளுடன் கூடிய மருத்துவமனை வசதிகளை கட்டம் கட்டமாக மேம்படுத்துவதன் மூலம் தேசிய மருத்துவமனை கட்டமைப்பை நவீனமயமாக்குவதன் மூலம் அரசாங்க ஊழியர்களுக்கு சிறந்த மருத்துவ சேவை வசதிகளை வழங்கும் திட்டமும் ஊக்குவிக்கப்படும்.

இலவசக் கல்வியில் இலங்கை பெற்றுள்ள நற்பெயர் மற்றும் சிறந்த மனித வளம் காரணமாக தற்போது வெளிநாடுகளில் இலங்கையர்களுக்கு உள்ள கேள்வி காரணமாக தற்போது இலங்கையர்கள் தொழிலுக்காகவும் உயர் கல்விக்காகவும் வெளிநாடுகளுக்கு இடம்பெயர்வது வழமையாக உள்ளது.

இப்பிரச்சினைகளுக்கு தீர்வாக இலவச உயர் கல்வியை பாதுகாத்து, பல்கலைக்கழகங்களுக்கு சட்ட மற்றும் நிர்வாக சுதந்திரத்தை வழங்கவும், அவற்றின் பௌதிக மற்றும் மனித வளங்களை திறம்பட பயன்படுத்தி நியாயமான அடிப்படை கொண்ட பொருளாதார செலவுகளுடன் கற்கைகளை நடத்த இடமளிக்கவும் முன்மொழியப்பட்டுள்ளது. அதன் மூலம் மேலதிக வருமான வழிகள் அதிகரிப்பதோடு, அனைத்து தரப்பினரும் நன்மைகளை பெறுவார்கள். இந்த முறையை மிகவும் திறம்பட உருவாக்கி வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பதன் மூலம் சர்வதேச மாணவர்கள் இலங்கையில் உயர்கல்வி பெறுவதற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்துவதன் மூலம் இலங்கையை அறிவு மையமாக மாற்ற முடியும். இலங்கைக்கு அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் முன்னணித் துறையாகவும் இதனை உருவாக்க முடியும்.

இலங்கையில் இலவச சுகாதார சேவைகள் நிறுவப்பட்டதன் காரணமாக சுகாதார குறிகாட்டிகளில் இலங்கை சிறந்த நிலையை அடைந்துள்ளது. எனவே, இலங்கையின் சுகாதார மற்றும் சுகாதார நிபுணர்களுக்கான சர்வதேச அங்கீகாரமும் அதிகரித்துள்ளது. ஆனால் தற்போதைய சவால்களுக்கு மத்தியில் இலங்கை சுகாதார நிபுணர்களுக்கான சர்வதேச கேள்வி அதிகரித்துள்ளதுடன், அதன்படி அவர்கள் வெளிநாடு செல்வதும் அதிகரித்து வருகிறது. இந்த நிலைமையை மாற்றுவதன் மூலம், இலங்கையில் இலவச சுகாதார சேவையை மேலும் சிறப்பானதாக்கி, சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சுகாதார சேவையை வழங்கும் மத்திய நிலையமாக மாறுவதற்கு இலங்கைக்கு வாய்ப்பு உள்ளது. எனவே, இலவச சுகாதாரப் பராமரிப்பு வசதிகள் பாதுகாக்கப்படும் வகையில் முகாமைத்துவம் செய்து பொருளாதாரச் செலவின் அடிப்படையில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களுக்கு சுகாதாரப் பாதுகாப்பு வழங்குவதற்கான உத்திகள் தொடங்கப்படலாம்.

ஏற்கனவே சுகாதாரப் பாதுகாப்பு கட்டமைப்பில் உள்ள பௌதிக மற்றும் மனித வளங்களை திறம்பட பயன்படுத்தி அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் சுகாதார சேவையை மீள் உருவாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதேமுறையைப் பயன்படுத்தி, ஆயுர்வேத மருத்துவச் சேவைகளையும் பொருளாதாரப் பலன்களை மேம்படுத்தக்கூடிய ஒரு பகுதியாக மாற்ற முடியும். குறிப்பாக சுகாதாரத் துறை சார்ந்த சுற்றுலாத்துறையில் முன்னணி மையமாக விளங்கும் இலங்கையின் ஆற்றலை சரியான முறையில் பயன்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது" எனத் தெரிவித்துள்ளார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஓகஸ்ட் 24 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

தொழுகை நேரம்

10 முதல் 13 வரை

சுபஹ் - 05.04
லுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்

சுபகிருது வருடம் ஆவணி 08

ராகுகாலம் : காலை : 9.05 -10.35வரை
சுபநேரம் : மாலை : 3.05 - 4.35வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



பிரியசாத் டெப் ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைக்கமைய

# தேர்தல் முறையை விரைவில் டிஜிட்டல் மயமாக்குவோம்

## தகவல் தொழில்நுட்ப வல்லுநர் மாநாட்டில் ஜனாதிபதி தெரிவிப்பு

தேர்தல் முறையை டிஜிட்டல் மயமாக்குவதற்காக முன்னாள் பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் தலைமையிலான ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளுக்கமைய செயற்படுவதற்கு எதிர்பார்ப்பதாக தெரிவித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்வரும் உள்ளூராட்சிசபை தேர்தலில் டிஜிட்டல் தேர்தல் முறையை பரீட்சிக்க முடியுமெனவும் தெரிவித்தார்.

பத்தரமுல்லையிலுள்ள வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நேற்று முன்தினம் (22) நடைபெற்ற தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

'நாட்டின் எதிர்கால குறியீடு' என்ற தொனிப்பொருளில் இம்மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டதுடன், மாநாட்டுக்கு வருகை தந்த ஜனாதிபதியை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தால் உருவாக்கப்பட்ட 'பெப்பர்' என்ற ரோபோ வரவேற்றமை சிறப்பம்சமாகும்.

இங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி,

"இலங்கையில் ஏற்றுமதி பொருளாதாரத்தை உருவாக்குவதே எமது இலக்காகும். எவ்வாறாயினும் 21ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் முதல் நடுப்பகுதிவரை இந்த இலக்கை அடைய தொழில்நுட்பம் தேவைப்படும்.




இன்றைய உலகில் தொழில் அல்லது நாட்டின் வளர்ச்சிக்கு தொழில்நுட்பம் இன்றியமையாதது. அது உறுதியாகிவிட்டது. அதன்படி ஆசியாவிலேயே தலைசிறந்து விளங்கும் நோக்கில் தொழில்நுட்பத்தை நமது பொருளாதாரத்தின் அடிப்படை அங்கமாக இணைக்க முடிவு செய்துள்ளோம். விவசாயம் போன்று நவீனமயமாக்கல் செய்யப்பட வேண்டிய துறைகளையும் அடையாளம் கண்டிருக்கிறோம். தற்போது நாட்டில் மில்லியன் கணக்கான ஏக்கரில் வாழ்வாதார விவசாயம் செய்யப்படுகிறது. மேலும் 300,000 ஏக்கரில் விவசாயம் செய்வதற்கான சாத்தியமும் உள்ளது. விவசாயத்தை நவீனமயமாக்கி தொழில்நுட்பத்தை பயன்படுத்தினால், உணவு ஏற்றுமதி செய்யும் நாடாக நாம் மாறலாம். சுற்றுலா, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் நமது பரந்த டிஜிட்டல் பொருளாதாரத்திலும் தொழில்நுட்பம் முக்கிய பங்கு வகிக்கிறது.

நமது தற்போதைய பொருளாதார கட்டமைப்பில் டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் பசுமை பொருளாதாரம் என்ற இரண்டு முக்கிய அம்சங்கள் உள்ளன. இதற்கான மாற்றத்தை

06

# தினகரன் 92

THINAKARAN தினகரன்

வருடங்களுக்கு முன்

## தினகரன்

இன்று 24 ஓகஸ்ட் 1932


ஆப்பிள் பழ உற்பத்தி

வருடம் 1500 ரூபாய்க்கு மேல் ஏக்கருக்கு லாபம்

சில விவரங்கள்

இலங்கையில் ஆப்பிள் மரங்களைக் கஷ்டமின்றிவளர்க்கமுடியும் என்றும் ஆப்பிள் தோட்டங்களை வைத்து நடத்துவதினுல் நல்லலாபம் பெறக்கூடுமென்றும் ஆஸ்திரேலியா வாசியும் தற்பொழுது கொழும்பில் இருப்பவருமான திரு. டெயிலர் என்பவர் நமது பிரதிநிதி ஒருவரிடம் கூறியிருக்கிறுர். திரு. டெயிலர் பழ மரங்களை வளர்க்கும் முறைகளை நன்கு அறிந்தவர்.

### ஆப்பிள் பழ உற்பத்தி

வருடம் 1500 ரூபாய்க்கு மேல் ஏக்கருக்கு இலாபம்

### சில விவரங்கள்

இலங்கையில் ஆப்பிள் மரங்களைக் கஷ்டமின்றி வளர்க்க முடியும் என்றும் ஆப்பிள் தோட்டங்களை வைத்து நடத்துவதினால் நல்ல இலாபம் பெறக்கூடுமென்றும் ஆஸ்திரேலியா வாசியும் தற்பொழுது கொழும்பில் இருப்பவருமான திரு. டெயிலர் என்பவர் நமது பிரதிநிதி ஒருவரிடம் கூறியிருக்கிறார். திரு. டெயிலர் பழ மரங்களை வளர்க்கும் முறைகைள நன்கு அறிந்தவர்.

(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)

'வரலாற்று சிறப்புமிக்க முத்தரப்பு ஒப்பந்தம்'

# பிரியந்த பிரதீப் ரணசிங்கவின் நூல் பிரதமர் தினேஷிடம் கையளிப்பு





சிரேஷ்ட ஊடகவியலாளர் பிரியந்த பிரதீப் ரணசிங்கவின் '3.5 மில்லியன் பேருக்கு வேலைவாய்ப்பை' பெற்றுத் தந்த முத்தரப்பு ஒப்பந்தம்' என்ற நூல் பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் கையளித்து வைக்கப்பட்டது.

கொரோனா தொற்றின் போது (2020 - 2022) தனியார் துறையில் 3.5 மில்லியன் ஊழியர்களுக்கு வேலைவாய்ப்பை பெற்றுத் தந்த தொழிற்சங்கங்கள், முதலாளிமார் மற்றும் தொழில் அமைச்சுக்கிடையிலான வரலாற்று சிறப்புமிக்க முத்தரப்பு ஒப்பந்தம் தொடர்பாக சிரேஷ்ட ஊடகவியலாளர் பிரியந்த பிரதீப் ரணசிங்கவால் எழுதப்பட்டு 'தெசரெச' வெளியிட்ட '3.5 மில்லியன் பேருக்கு வேலைவாய்ப்பை பெற்றுத் தந்த முத்தரப்பு ஒப்பந்தம்' என்ற நூல் அப்போதைய தொழில் அமைச்சரான பிரதமர் தினேஷ் குணவர்தனவின் தலைமையில் பத்தரமுல்லையிலுள்ள இலங்கை புத்தக வெளியீட்டாளர் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் (21) வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதன்போது தொழில் அமைச்சின் முன்னாள் செயலாளர் மஹிந்த மடிஹேவா பிரதான உரையாற்றியதுடன், தொழில் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ், சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி, பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எச்.எம். பௌசி, யதாமினி குணவர்தன, டபிள்யூ.எச்.பியதாஸ உள்ளிட்ட தொழிற்சங்க தலைவர்கள், தொழில் அமைச்சரின் அதிகாரிகள், கூட்டு ஆடை சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் யொஹான் லோரன்ஸ், இலங்கை முதலாளிமார் சம்மேளன அதிகாரிகள், சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட ஊடக நிறுவன பிரதிநிதிகள் மற்றும் 'சனச' நிறுவன ஸ்தாபகர் கலாநிதி பி.ஏ.கிருவந்தெனிய, பேராசிரியர் நந்த தர்மரத்ன, கல்விமான்களாகிய பெருந்திரளானோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

தலதாவின் இராஜினாமாவை அடுத்து

# பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் வெற்றிடம்

## தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிப்பு

இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தலதா அதுகோரள கடந்த 21ஆம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ததால்



ஒன்பதாவது பாராளுமன்றத்தில் உறுப்பினர் ஒருவருக்கான வெற்றிடம் ஏற்பட்டிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர அறிவித்துள்ளார்.

06

# நாட்டின் தலைவரை தெரிவுசெய்யும் தேர்தலை இனவாத சாயல் பூச வேண்டாம்

"நாட்டின் தலைவரை, ஜனாதிபதியை தெரிவு செய்யும் தேர்தலை தயவுசெய்து இனவாத சாயல் பூச வேண்டாமெனவும் நாம் இலங்கையர் எனும் எண்ணம் கொள்ளுங்கள்" என தமிழ் தேசிய பணி சபையின் தலைவரும் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் பிரதி தலைவருமான கலாநிதி என். குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

இனவாத கருத்துகளை நாட்டின் ஜனாதிபதியை தெரிவு செய்யும் தேர்தலிலும் தமக்கிடையேயான போட்டிக்கும் பயன்படுத்துவது அவர் தம் அரசியலின் அநாகரிகம் மற்றும் வங்குரோத்து தனமான நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதாக அமையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



சரத் வீரசேகரா தனது ஊடகத்துக்கான கருத்தில் சஜித், ரணில் மற்றும் அனுரகுமாரவும் 13ஆவது திருத்தத்தை ஆதரிப்பதாகவும் ஏதோ இவர்கள் தமிழர்களுக்கு தலை சாய்ப்பது போல் தவறிழைப்பதாகவும் தெரிவித்திருக்கின்றார். ஆயினும் 13ஆவது திருத்தம் ஒன்றுதான் ஒன்றுபட்ட இலங்கைக்குள் இன சௌஜன்யத்துக்கு வழி வகுக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மகாவிலச்சிய சுகாதார பிரிவில் சட்டவிரோத வைத்தியசாலை

## திடீர் சுற்றிவளைப்பில் சீல் வைப்பு

அநுராதபுரம், ரம்பாவ பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் மேற்கத்தேய வைத்திய நிலையத்தை நடத்தி வந்த குற்றச்சாட்டில் ஆயுர்வேத வைத்தியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஓயாமடுவ பொலிஸார் தெரிவித்தனர்.



இதனை அடுத்து அவ்வைத்தியசாலைக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதாக அநுராதபுரம் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகம் தெரிவித்தது.

இது தொடர்பாக அநுராதபுரம் மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் ஓயாமடுவ பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இவ்வைத்தியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சந்தேக நபரானவர் மகாவிலச்சிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட மானிங்கமுவ பிரதேசத்தில் சட்டவிரோதமாக மேற்கத்தேய வைத்திய நிலையத்தை நடத்தி வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# 'கதிர்காம திருமுருகன்' நூல் முதல் பிரதி வெளியீடு

'கதிர்காம திருமுருகன்' எனும் நூலின் முதல் பிரதி அருள்மிகு பழனி ஸ்ரீதண்டாயுத பாணி திருக்கோயிலில் நேற்று வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

தண்டாயுத பாணி திருக்கோயிலில் ராஜ அலங்காரத்திலிருந்த மூலவர் திருப்பாதங்களில் சமர்பித்து விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் தேவஸ்தான கண்ணன் சிவாச்சாரியார், எச்.எச்.விக்ரமசிங்கவிடம் இந்நூல் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அறநிலையத்துறை உதவி ஆணையர் கு.தங்கம், ஆலயத்தின் பேஷ்கார் இரா.நரசிம்மன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

'கதிர்காம திருமுருகன்' எனும் இந்த நூல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (25) பழனியில் நடைபெறும் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டிலும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் இந்நூலை வெளியிட்டு வைக்க, அறநிலையத்துறை ஆணையாளர் பி.என்.ஸ்ரீதர் உட்பட மடாதிபதிகளுக்கும் விசேட விருந்தினர்களுக்கும் விக்கிரமசிங்க பிரதிகளை வழங்கி வைக்கவுள்ளார்.



பேராதனை பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி செல்லதுரை சுதர்சன் 8ஆவது செம்பதிப்பாக பதிப்பித்திருக்கும் பதுளை வ.ஞானபண்டிதன் 84 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதி (1940) யாழ்ப்பாண சைவப்பிரகாச சபை பழனி ஆர்.எம்.கே அச்சகம் பதிப்பித்திருந்த கதிர்காம திருமுருகன் எனும் வரலாற்று ஆவணத்தை கலைஒளி முத்தையாபிள்ளை அறக்கட்டளையின் சார்பில் எச்.எச்.விக்ரமசிங்க பதிப்பித்துள்ளார் .

# யாழ். நகருக்கு திராவிடர் கழக தலைவர் வீரமணி விஜயம்



திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தலைவர் மாவை சேனாதிராசா மற்றும் அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளையினர் சந்தித்துக் கலந்துரையாடியதுடன், அவருக்கு

06

# ஜனாதிபதி தேர்தலில் எமது வாக்கு உரிமையை பயன்படுத்த வேண்டும்

"ஜனாதிபதி தேர்தலுக்கு மக்களாகிய நாங்கள் எமது வாக்குரிமையை பயன்படுத்தி நமது உரிமையை பெற்றுக்கொள்ளும் பலமான வாக்குச்சீட்டாக பயன்படுத்த வேண்டும்" இந்து மத பீடத்தின் செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ள அவர்,

"இலங்கை நாட்டின் ஒவ்வொரு குடிமகனினதும் அடிப்படை உரிமை வாக்களிப்பு உரிமை ஆகும். இந்த வாக்கு உரிமையே ஜனநாயக ரீதியானது. ஜனநாயக ரீதியாகவே எமது அடிப்படை உரிமைகளை வென்றெடுக்க வேண்டும். வாக்குரிமையை சரியாக பயன்படுத்த வேண்டும்.

ஜனநாயக ரீதியான போராட்டமாக இருக்கட்டும் அல்லது ஜனநாயக ரீதியாக தலைவரை தேர்வு செய்வதாக இருக்கட்டும். நமது வாக்கு சுதந்திரத்தை பயன்படுத்தி அந்த வாக்குரிமையின் மூலம் நமது அடிப்படை உரிமைகளை பெறுவதற்கான அறப் போராட்டங்களில் இதுவுமொன்று என்பதை மக்கள் மறந்துவிடக்கூடாது.



எனவே உங்கள் வாக்குரிமையை வீணடிக்காது உங்கள் உரிமையை பயன்படுத்தி உங்கள் உரிமைகளை தரக்கூடிய தகுந்த தலைவரை தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு உங்களது கரங்களில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. அதனை கவனமாகவும் புத்திசாதுரியமாகவும் பயன்படுத்தி ஜனநாயக ரீதியான தலைவரை தேர்வு செய்வதற்கு பார்த்துக் கொண்டிராமல் பங்காளிகளாக இருந்து உங்கள் எண்ணங்களை நிறைவேற்ற இந்த தேர்தல் வழியை பயன்படுத்துவது சிறந்தது" எனத் தெரிவித்துள்ளார்.

# துருக்கியின் புதிய தூதுவருடன் மு.கா. பணிப்பாளர் சந்திப்பு

இலங்கைக்கான துருக்கி தூதுவராக புதிதாக கடமையேற்றுள்ள செமி லூத்வூ ரேக்ற் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப்புக்கு இடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள துருக்கிய தூதுவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

சுமார் இரண்டு மணித்தியாலங்களாக நடைபெற்ற இந்த நீண்ட சந்திப்பின் போது இலங்கை மக்களின் கல்வி, அரசியல், சமூக, கலாசாரம் போன்ற இன்னோரன்ன விடயங்கள் பலவும் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது கலாநிதி சிராஸ் மீராசாஹிபின் இணைப்பு செயலாளர் ஏ.எல்.எம்.இன்சாட்டும் கலந்து கொண்டார்.

எதிர்காலத்தில் கிழக்கிலங்கை மக்களுக்கு தன்னால் இயன்ற உதவி ஒத்தாசைகளை வழங்குவதாக துருக்கி தூதுவர் இதன்போது உறுதியளித்துள்ளார்.

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆவணி மாதம் 07ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ஸபர் பிறை 17

## குறள் தரும் சிந்தனை



கெடுவாக வையாது உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு

நடுவுநிலைமை தவறாமல் அறவழியில் வாழ்கிற ஒருவருக்கு அதன் காரணமாகச் செல்வம் குவியாமல் வறுமை நிலை ஏற்படுமேயானால் அவரை உலகம் போற்றுமே தவிரத் தாழ்வாகக் கருதாது.

# எச்.ஐ.வி பரவுவதைக் கட்டுப்படுத்த விழிப்புணர்வு நடவடிக்கை அவசியம்

இலங்கையில் சமீப காலமாக எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தொற்று நோய்கள் தொடர்பான மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்திருப்பதாக ஊடகங்கள் தகவல்களை வெளியிட்டுள்ளன. ஆகவே எய்ட்ஸ் தொற்று பரவுவதைக் கட்டுப்படுத்தும் விதத்தில் விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சினாலோ அல்லது பொலிசாராலோ மாத்திரம் சாத்தியமாகக் கூடிய பணியல்ல இது. சுகாதாரப் பிரிவினர் ஆலோசனைகளை மாத்திரமே வழங்க முடியும். ஆலோசனைகளைப் பின்பற்றி நடந்து கொள்ள வேண்டியவர்கள் மக்களாவர்.

அதேசமயம் ஒவ்வொரு மனிதனின் தனிப்பட்ட அந்தரங்க செயற்பாடுகளையும் பின்தொடர்ந்து சென்று கட்டுப்படுத்துவது பொலிசாரால் இயலாத காரியம். எனவே எச்.ஐ.வி விடயத்தில் மக்கள் மத்தியில் போதுமான விழிப்புணர்வும், எச்சரிக்கை உணர்வும் ஏற்பட வேண்டியது அவசியமாகின்றது.

எச்.ஐ.வி தொற்றின் பேராபத்தை முழுமையாகப் புரிந்து கொண்டு, அதற்கேற்றவாறு அவதானமாக நடந்து கொள்வது பொதுமக்கள் ஒவ்வொருவரினதும் பொறுப்பாகின்றது. அப்போதுதான் எச்.ஐ.வி தொற்றில் இருந்து ஒவ்வொருவரும் முழுமையான பாதுகாப்பைப் பெற முடியும்.

இந்நிலையில் எய்ட்ஸ் தொற்று சம்பந்தமான போதிய அறிவையும், அதுபற்றிய விழிப்புணர்வையும் எமது நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் நன்றாக அறிந்திருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

இந்நோய் முதன் முதலில் 1981 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஐரோப்பா, ஆபிரிக்கா, ஆசியா ஆகிய கண்டங்களில் இத்தொற்று பரவி வருகிறது. ஆரம்பத்தைப் பார்க்கிலும் தற்காலத்தில் இத்தொற்று பரவுகின்ற வீதம் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் இலங்கையில் சமீப காலமாக அதன் வேகம் அதிகரித்திருப்பது கவலைக்குரியதாகும்.

எய்ட்ஸ் நோய்க்கான கிருமியின் பெயர் எச்.ஐ.வி ஆகும். இக்கிருமி மனித உடலில் புகுந்துவிட்டால் அந்த உடல் இயல்பாக பெற்றிருக்கும் நோய் எதிர்ப்பு சக்தியை முழுமையாக அழித்துவிடுகிறது. இதனால் நோய் எதிர்ப்பு ஆற்றல் இல்லாத காரணத்தால் காசநோய், புற்றுநோய், மூளைக்காய்ச்சல், கட்டுப்படாத வயிற்றுப்போக்கு போன்ற பல நோய்களுக்கு உட்பட்டு தொற்றாளர்கள் மரணத்துக்கு தள்ளப்படும் நிலைமைக்கு உள்ளாகின்றார்.

உடல் எடை மிக வேகமாகக் குறைதல், ஒரு மாதத்திற்கு மேலாக காய்ச்சல் நீடித்தல், ஒரு மாதத்திற்கு மேல் நீடிக்கும் இருமல் மற்றும் வயிற்றுப் போக்கு, உடல் அரிப்புடன் கூடிய தோல்வியாதி ஆகியவை இந்நோய்க்கான அறிகுறிகள் ஆகும். இத்தொற்றுநோயை அறிய இரத்தப்பரிசோதனை செய்வதே சிறந்த வழியாகும்.

எய்ட்ஸ் நோய்க்கான கிருமி உடலில் உள்ள இரத்தம், ஆண் உயிரணு, பெண் உறுப்பு திரவம் மற்றும் இந்நோயினால் பாதித்த தாயின் தாய்ப்பால் ஆகிய இடங்களில் அதிகமாக வாழ்கிறது. எனவே இந்நோய் கீழ்க்கண்ட விதங்களில் பரவுகிறது.

உடல் உறவு கொள்ளும் இருவரில் யாரேனும் ஒருவர் எய்ட்ஸ் வைரஸால் பாதிக்கப்பட்டிருக்கும்போது, எய்ட்ஸ் உள்ளவருக்கு பயன்படுத்தப்பட்ட மருந்து ஊசி மற்றவருக்கு பயன்படுத்தப்படும் போது, இக்கிருமி உள்ளவரின் இரத்தத்தை பிறருக்கு செலுத்தும்போது, இவ்வைரஸ் உள்ள தாயிடமிருந்து கருவில் உள்ள குழந்தைக்கு எய்ட்ஸ் தொற்றுகின்றது.

மேலும் எய்ட்ஸ் வராமல் தடுக்க தடுப்பூசி கிடையாது. எனவே ஒவ்வொருவரும் பொறுப்புணர்வுடன் நடந்து, எய்ட்ஸ் நோயிலிருந்து தங்களையும் பாதுகாத்து, பிறருக்கும் பாதுகாப்பு வழிமுறைகளையும் எடுத்துச் சொல்லி எய்ட்ஸ் மனித சமுதாயத்திற்கு தந்துள்ள சவாலை எதிர்கொள்ள வேண்டும்.

'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற சித்தாந்தத்தில் வாழ்வது, தகாத உடலுறவு கொள்வதை தவிர்ப்பது, தொற்று நீக்கம் செய்யப்பட்ட ஊசி பயன்படுத்துவதைத் தவிர்ப்பது, இரத்த தானம் பெறும் போது எய்ட்ஸ் பரிசோதனை செய்யப்பட்ட இரத்தத்தை தானமாக பெறுவது போன்றவற்றால் எய்ட்ஸ் நோயில் இருந்து பாதுகாப்புப் பெறலாம் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

எனவே மக்கள் அனைவரும் இந்நோய் பற்றி உணர்ந்து விழிப்புணர்வோடு செயல்பட வேண்டும். அப்போதுதான் எய்ட்ஸ் தொற்றில் இருந்து மக்கள் பாதுகாப்புப் பெற முடியும். ஒவ்வொருவரும் தம்மையும் பாதுகாத்து, மற்றவரையும் பாதுகாப்பதன் மூலமே எமது நாட்டை எச்.ஐ.வி தொற்றில் இருந்து முழுமையான பாதுகாப்புக் கொண்ட தேசமாக மாற்றியமைக்க முடியும் என்பதை மறந்துவிடலாகாது.

editor.tkn@lakehouse.lk

# ‘கதிர்காமத் திருமுருகன்’ ஆய்வுநூல் மறுபிரசுரம் செய்யப்படுவது சிறந்த பணி

‘கவிஞர் நவாலியூர் சு.சொக்கநாதன் பாடி மகிழ்ந்த மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன் குறவஞ்சியை (1993) மலையகத்தின் பத்திரிகையில் வரலாற்றுச் சாதனையாளரான பதுளை கலைஒளி முத்தையாபிள்ளை நினைவாக, அன்பர் எச்.எச்.விக்ரமசிங்க, அம்பாளின் மேலுள்ள பக்தியின் மேலீட்டால் மறுபிரசுரம் செய்வது ஒரு நல்ல பணியாகும்’ என்று திருமுருக கிருபானந்த வாரியார் அருள்வார்த்தைகள் மொழிந்து மூன்று தசாப்தங்கள் கடந்துவிட்டன.

அதே ஆண்டில் கலைஒளி முத்தையாபிள்ளை நினைவுக் குழு நடத்திய மலையகச் சிறுகதைப்போட்டி, மலையக எழுத்தாளர்கள் மத்தியில் பெரும் எழுச்சியை ஏற்படுத்தியதெனலாம்.

1994 ஆம் ஆண்டில் பரிசு பெற்ற சிறுகதைகளைத் தொகுத்து நாங்கள் வெளியிட்ட ‘மலையகப் பரிசுச் சிறுகதைகள்’ பெரும் வரவேற்பைப் பெற்றன.

கலைஒளி முத்தையாபிள்ளை நினைவுக் குழு தொடர்ந்து வெளியிட்ட மலையகத்தில் மாரியம்மன் வழிபாடும் வரலாறும் (1999), தமிழோவியன் கவிதைகள் (2000), வானம் சிவந்த நாட்கள்(2022), மலையக அரசியல்: தலைவர்களும் தளபதிகளும் (2022), வல்லமை தாராயோ? (2022), பெருநதியின் பேரோசை (2023), தெளிவத்தை ஜோசப் கதைகள் (2023), எல்லைப்புறம் (2024), கொலுஷா (2024), மலையகம்: இங்கிருந்து எங்கே? (2024) ஆகிய நூல்கள் மலையக இலக்கியத்தின் வளர்ச்சியிலும் மலையகப் பதிப்புத்துறையிலும் அழுத்தமான தடங்களைப் பதித்துள்ளன.

காத்திரமான இந்தப் பதிப்பு வரலாற்றில் பதுளை வ.ஞானபண்டிதன் எழுதிய ‘கதிர்காமத் திருமுருகன்’ என்ற முக்கிய ஆய்வு நூலை மறுபிரசுரம் செய்வதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

மலையகப் பதிப்பு வரலாற்றில் கவனிப்பிற்குள்ளாகாத இந்த அரிய நூலின், இந்த ஆண்டின் மறுபதிப்பு, இந்நூலின் 84 ஆண்டுகாலப் பதிப்பு வரலாற்றுக்குச் சாட்சியமாய் அமைகிறது. இந்த நூல் காலப்போக்கில் எத்தகைய மாற்றங்களை எல்லாம் சந்தித்து வந்திருக்கிறது என்பதை கலாநிதி செல்லத்துரை சுதர்சன் தனது பதிப்புரையில் முதல் தடவையாக வெளிச்சத்திற்குக் கொண்டுவருகிறார்.

கதிர்காமமும் மாத்தளை முத்துமாரியம்மனும் மலையகத்தின் வழிபாட்டு மரபில் முதன்மை பெறும் திருத்தலங்களாகும். மலையகத்தின் கலாசார, சமய மரபில் கதிர்காமக் கந்தன் மிக முக்கிய ஆதாரப் புள்ளியாக அமைகிறார்.

‘இந்தியாவுக்கும் இலங்கைக்கும் பிரயாணத் தடை இல்லாத அந்தக் காலத்தில், தமிழ்நாட்டிலிருந்து கதிர்காமம், சிவனடி பாதயாத்திரையை மேற்கொண்டு கவிராயர்கள் பெரிய கங்காணி வீடுகளுக்கு வந்து பாடுவார்கள்’ என்று சி.வி. வேலுப்பிள்ளை பதிவு செய்கிறார்.

கோ.நடேசய்யர் 1944இல் ‘கதிர்காமம்’ என்ற நூலை எழுதி வெளியிட்டுள்ளார். ‘கதிர்காமக் கடவுளைக் கண்டு தரிசிக்கவெண்ணும் தமிழர்களுக்கெனவே இப்புத்தகம் வெளியிட எண்ணினேன்’ என்று நடேசய்யர் தனது முன்னுரையில் குறிப்பிடும் தமிழர்கள், ‘இந்தியாவிலிருந்து கதிர்காமம் பார்க்க வரவெண்ணுவோர்’ என்பதைத் தனது நூலின் முதல் வரியிலேயே தெளிவாகக் கூறுகிறார். முதல் அத்தியாயம் ‘பிரயாண முறை’ என்று இந்தியாவிலிருந்து கதிர்காமத்திற்கு வருவது பற்றிய பிரயாண ஏற்பாடுகளைப் பற்றிப் பேசுகிறது.



மலையகப் பாவலர் எஸ்.ஆர்.எஸ். பெரியாம்பிள்ளை, யாழ்ப்பாணத்திலிருந்து கரையோரப் பாதையாகக் கதிர்காமம் செல்பவர்களுக்கான ‘வழிநடை விருத்தம்’ என்ற நூலை 1968ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்.

இந்த நூலுக்கு பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி செல்லத்துரை சுதர்சன் கனதியான அணிந்துரையை நல்கியுள்ளார். இத்தகு ஆய்வு முன்னுரையை எழுத வல்ல ஒற்றைத் தனி ஆளுமையாக அவர் திகழ்கிறார்.

ஞானபண்டிதனின் ‘கதிர்காமத் திருமுருகன்’ நூலை மறுபதிப்புச் செய்யும் ஆவலை, லண்டனில் மு.நித்தியானந்தனிடம் தெரிவித்தபோது, அம்முயற்சிக்குப் பூரண இசைவு தந்து, இந்நூலை மெருகூட்டும் பணியில் அவர் செலுத்திய பேருழைப்பு பெரும் நன்றிக்குரியது. அவரது கரங்களில் இந்த நூல் மெருகு பெற்றிருப்பது எனக்குப் பெரும் மனநிறைவைத் தருகிறது.

எனது ஆத்மீகப் பணியில் எனக்கு என்றும் தோன்றாத் துணையாய் நிற்கும் தெ.வீரபாகு, தெ.சண்முகசுந்தரம் (முருகேசு), தெ.அருணாசலம், ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்ரமணிய ஆலய அறங்காவலர்களான தெ.பெரமநாயகம், சோமசுந்தரம் சங்கர்,வி.சுப்ரமணியம், சம்மாங்கோட்டுக் கதிர்வேலாயுதசுவாமி ஆலயத் தலைவர் ஆ.மாணிக்கவாசகர், புதிய கதிர்வேலாயுத சுவாமி அறங்காவலர் எஸ்.ராஜேந்திரன் செட்டியார், லீலா எக்ஸ்போர்ட் நிறுவனத்தின் சின்னத்துரை ரவீந்திரன் ஆகியோருக்கு என் நெஞ்சார்ந்த நன்றி.

இந்நூலினை முன்னர் அன்பளிப்பாக அச்சிட்டு வழங்கிய அமரர் ஏ.எம்.பி.எஸ்.செல்லச்சாமிநாடார், லீலா பஞ்சாங்க காலண்டர் தயாரிப்பாளர் அமரர் ச.த.சின்னத்துரை ஆகியோரை நன்றியுடன் நினைவு கொள்கிறோம்.


எச்.எச்.விக்கிரமசிங்க


ச.த.சின்னத்துரை


ஏ.எம்.பி.எஸ்.செல்லச்சாமிநாடா


பதுளை வ.ஞானபண்டிதன்

# பெண்கள் சுயதொழில் முயற்சியாண்மை திட்டம் நற்பிட்டிமுனையில் அங்குரார்ப்பணம்

ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேசனினால் 'பொருளாதார ரீதியாக வலுப்படுத்தப்பட்ட பெண் சமூகத்தை உருவாக்குவோம்' எனும் தொனிப்பொருளில் கல்முனை, சாய்ந்தமருது, நாவிதன்வெளி, காரைதீவு மற்றும் நிந்தவூர் பிரதேச செயலக பிரிவுகளுக்குட்பட்ட பிரதேசங்களில் பெண் மேம்பாட்டு திட்டம் ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேஷயின் தலைவி சட்டத்தரணி மரியம் மன்சூர் நளிமுதீன் தலைமையில் முன்னெடுக்கப்படவுள்ளது.





அதன் ஒரு அங்கமான பெண் சுயதொழில் முயற்சியாண்மை எனும் பெண்கள் நலன் உதவித்திட்டத்தின் ஆரம்பகட்ட நிகழ்வானது நற்பிட்டிமுனை பிரதேசத்திலிருந்து ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பெண்களின் வளர்ச்சிக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்து பெண்களுக்கான தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி, அதற்கான வளங்களை அமைத்துக் கொடுத்து, பெண்களின் நலன்புரி, சுகாதாரம், தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்பு போன்ற விடயங்களில் கவனம் செலுத்தி அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

இதன் போது பெண்களுடன் நேரடியாகக் கலந்துரையாடி அவர்கள் எதிர்நோக்கும் சவால்களும் அதற்கான தீர்வுகளை வழங்குவதற்காக பெண் சுயதொழில் முயற்சியாண்மை செயல் திட்டத்தின் விண்ணப்பபடிவங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

(எம்.எம்.ஜெஸ்மின்)

# அம்பாறை மாவட்ட வெகுஜன மக்கள் சம்மேளன செயலமர்வு

'நாம் இலங்கையர்' சமத்துவம் மற்றும் ஜனநாயகத்தை உருவாக்குதல் எனும் தொனிப்பொருளில் வெகுஜன மக்கள் சம்மேளனத்தின் அம்பாறை மாவட்ட இரண்டாவது செயலமர்வு அக்கரைப்பற்று ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் கூட்ட மண்டபத்தில் வெகுஜன மக்கள் அமைப்பின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் ஹாசிம் ஸாலிஹ் தலைமையில் நடைபெற்றது.

இச்செயலமர்வில், வெகுஜன மக்கள் அமைப்பின் ஸ்தாபகர் சமன் ஹேமன்கொட விசேட வளவாளராகவும், ராகல் தமிழ் மொழி இணைப்பாளராகவும் கலந்து கொண்டார்கள். இதில் முப்பதுக்கும் மேற்பட்ட தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள ஆண்கள், பெண்கள் கலந்து கொண்டனர்.



நாட்டில் ஜனநாயக உரிமை மற்றும் மனித உரிமைகள் உறுதி செய்யப்படல் வேண்டும், ஜனாதிபதி தொடக்கம் சிறு பிள்ளை வரை அனைவருக்கும் உரிமைகளும் சட்டங்களும் சமமானதாக இருத்தல் வேண்டும், நாட்டில் 52% பெண்கள் மற்றும் சிறுபான்மை மக்கள் குழுக்களின் உரிமைகளை கோருபவர்களுக்கு ஆதரவாக செயற்படல், பொருளாதார நியாயம் மிக்க சமூகத்தை உறுதி செய்வதோடு பொருளாதார பிரச்சினைகளுக்கு குறுகிய கால மற்றும் நீண்ட கால தீர்வுகளை காண்பதற்கான கலந்துரையாடல்களை எமக்கிடையே ஆரம்பித்தல், புதிய உலகிற்கு ஏற்ற வகையில் இலவச மற்றும் சமமான நியாயமான தரமான கல்வி மற்றும் சுகாதார சேவையை உறுதி செய்தல் போன்ற இன்னும் பல விடயங்கள் பேசப்பட்டு இதனை தீர்ப்பதற்கான வழிமுறை மற்றும் ஆலோசனைகளான கருத்துக்களை செயலமர்வில் கலந்து கொண்டவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்கள்.

சர்வமதக்குழு உறுப்பினர்கள், இளைஞர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பெண்கள் அமைப்புகளின் உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் கல்வியாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

றிஸ்வான் சாலிஹூ
(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

# அமெரிக்காவில் 90 அடி உயரத்தில் அனுமன் சிலை

அமெரிக்காவில் உள்ள டெக்சாஸ் மாகாணத்தில் இப்போது மிகப் பிரம்மாண்டமான அனுமன் சிலை ஒன்று திறக்கப்பட்டுள்ளது. வெண்கலத்தில் செய்யப்பட்ட இந்த அனுமன் சிலை பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. அமெரிக்காவின் மூன்றாவது மிக உயரமான சிலையாக இருக்கும் இது, இந்தியாவுக்கு வெளியே அமைந்துள்ள மிகப் பெரிய அனுமன் சிலை என்ற சாதனையையும் படைத்துள்ளது.

வெளிநாடுகளுக்குச் செல்லும் இந்தியர்கள் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அதிலும் குறிப்பாக அமெரிக்கா செல்லும் இந்தியர்கள் எண்ணிக்கை உயர்ந்தே வருகிறது.



இதன் காரணமாக அமெரிக்காவில் கடந்த சில ஆண்டுகளில் பல்வேறு இடங்களிலும் கோயில்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதற்கிடையே இப்போது அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணம் ஹூஸ்டன் அருகே 90 அடி உயரத்தில் வெண்கலத்தில் செய்யப்பட்ட அனுமன் சிலை திறக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் இந்து மதத்தினர் அதிகரித்து வரும் நிலையில், இந்த சிலை திறக்கப்பட்டுள்ளது. இந்தச் சிலை பல கிமீ தூரத்திற்கு அப்பால் இருந்து பார்த்தாலும் தெளிவாகத் தெரிகிறதாம். அந்தளவுக்குப் பெரிய சிலையாக இருக்கிறது.

## நேரடி மோதலுக்கு தயாராகிறதா நேட்டோ?

# உக்ரேன் படைகள் நடத்திய 'கூர்ஸ்க்' ஊடுருவல் தாக்குதல்

நேட்டோவால் ஆயுதம் மற்றும் பயிற்சியளிக்கப்பட்ட உக்ரேனிய இராணுவம் கூர்ஸ்க் (Kursk) மோதலில் சம்பந்தப்பட்டிருந்தது என்ற உண்மையையும், உக்ரேனிய போரின் ஒரு குறிப்பிடத்தக்க திருப்புமுனையையும் இந்த மோதல் குறிக்கின்றது.

இதற்கு முன்னர் ரஷ்ய நகரங்கள் மற்றும் உள்கட்டமைப்புகள் மீது உக்ரேன் ஆளில்லா விமானத் தாக்குதல்களை நடத்தியது. முந்திய ஊடுருவல்கள் உக்ரேனின் இராணுவ உளவுத்துறையின் வழிகாட்டுதலின் கீழ் இராணுவப் பிரிவுகளால் நடத்தப்பட்டது.

இரண்டரை ஆண்டுகால போருக்குப் பிறகு ரஷ்யப் படைகளிடம் உக்ரைன் தொடர்ந்து அதன் நிலப்பரப்பை இழந்து வருவதும் உண்மையே. இப்போர் ஏற்கனவே அரை மில்லியன் உயிரைப் பறித்துள்ளது. அத்துடன் ஜூலை 16 இல், ஒரு புதிய சட்டம் உக்ரைனில் நடைமுறைக்கு வந்தது. அது 18 முதல் 60 வயதுக்குட்பட்ட மில்லியன் கணக்கான உக்ரேனிய ஆண்களை இராணுவ சேவைக்கு கட்டாயப்படுத்தியுள்ளது.

உக்ரேனிய ஊடுருவலுக்கு அமெரிக்கா நேட்டோ ஆயுதங்களைக் கொண்டு ரஷ்யாவை இலக்கில் வைத்துள்ளது. இந்தத் தாக்குதலில் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட பல இராணுவ வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன.

ரஷ்ய விமானத் தளங்கள் மற்றும் ரஷ்யாவிற்குள் ஆழமான பிற இலக்குகளைத் தாக்க அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட ஏவுகணைகளைப் பயன்படுத்த உக்ரேனுக்கு அது இன்னும் அனுமதி வழங்கவில்லை.

கடந்த மே மாதம், இங்கிலாந்து வெளியுறவு அமைச்சர் டேவிட் கேமரூன் செய்தி நிறுவனமொன்றிடம், பிரிட்டன் வழங்கிய நீண்ட தூர ஏவுகணைகளை உக்ரேன் ரஷ்ய எல்லையைத் தாக்க பயன்படுத்தலாம் என்று கூறினார்.

ஏப்ரல் மாதம், பைடன் நிர்வாகம் 190 மைல்களுக்கும் அதிகமான தூரத்தில் தாக்கும் திறன் கொண்ட நீண்ட தூர ஏவுகணைகளை உக்ரேனுக்கு இரகசியமாக அனுப்பியதை உறுதிப்படுத்தியது. இந்த ஆயுதங்களை பயன்படுத்தி கடந்த மே மாதம் கிரிமியாவில் உள்ள விமானப்படைத் தளம் மீது உக்ரேன் தாக்குதல் நடத்தியது.



அசோவ் கடல் பகுதியில் உள்ள பெர்டியன்ஸ்க் துறைமுகத்தைத் தாக்கவும் இந்த ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன.

அமெரிக்கா இரகசியமாக ஆயுதங்களை வழங்கியதை உறுதிப்படுத்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் அவை இப்போது உக்ரேனில் உள்ளன என்று கூறினார்.

ஜூலை மாதம் அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன், ரஷ்ய எல்லைக்குள் 'எங்கும்' தாக்க அமெரிக்கா வழங்கிய ஆயுதங்களைப் பயன்படுத்த உக்ரேனை அமெரிக்கா அனுமதிக்கிறது என்று வலியுறுத்தினார்.

இன்றுவரை, ரஷ்யாவிற்குள் ஆழமான தாக்குதல்களை நடத்த அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட நீண்ட தூர ஏவுகணைகள் பயன்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. எவ்வாறிருப்பினும், கூர்ஸ்க் தாக்குதல் மீதான தற்போதைய ஊடக பிரசாரம் மீண்டுமொரு முறை உக்ரேனை உசுப்பேற்றி விடும் உக்தியாகவே கருதப்படுகிறது.

**கூர்ஸ்க் போர்க்களம்:**

எண்பத்தொரு ஆண்டுகளுக்கு முன்பு கூர்ஸ்க் நிலப்பரப்பின் ஒரு பகுதியில் ரஷ்யாவிற்கு எதிராக ஏவி விடப்பட்ட ஜேர்மன் கவச வாகனங்கள் அமெரிக்க வாகனங்களுடன் இணைந்து, உக்ரைன் சண்டையிட்டு வருகின்றது என்பதுதான் இன்றைய நிலையாகும்.

இரண்டாம் உலகப் போரில் சோவியத் படைகள், அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்துடன் கூட்டு சேர்ந்து, நாஜி ஜேர்மனியின் படைகளை தீர்க்கமாக தோற்கடித்த யுத்தமே கூர்ஸ்க் (Kursk) போராகும்.

கூர்ஸ்க் டாங்கி போர் (Battle of Kursk) என்பது 1943 கோடையில் தென்மேற்கு ரஷ்யாவில் நாஜி ஜெர்மனியுடன் சோவியத் யூனியனின் படைகளுக்கு இடையேயான இரண்டாம் உலகப் போரின் கிழக்கு முன்னணிப் போராகும்.

இதன் இறுதி விளைவாக சோவியத்துக்கு வெற்றி கிடைத்தது. கூர்ஸ்க் போர் என்பது போர் வரலாற்றில் மிகப்பெரிய (Battle of Tanks) டாங்கிப் போராகும். இப்போருக்கு முன்னர் நடந்த ஸ்டாலின்கிராட் போருடன், ஐரோப்பியப் போரின் அரங்கில் குறிப்பிடப்பட்ட இரண்டு திருப்புமுனைகள் ஏற்பட்டன.



தற்போதய கூர்ஸ்க் தாக்குதல் நேட்டோவின் கீழ் உக்ரேனுக்கான மேற்கத்திய ஆதரவினையும், ஆயுத தளவாட வழங்கலை மறுசீரமைத்துள்ளமை தெளிவாகத் தெரிகிறது. அத்துடன் நூறாயிரக்கணக்கான நேட்டோ துருப்புக்களை முழு அளவிலான போரில் ஈடுபடுத்துவதற்கான ஒரு உயர் தயார்நிலையில் வைக்க நேட்டோவின் படைகளை மறுசீரமைப்பதற்கான தொலைநோக்கு திட்டங்களையும் தற்போது செயல்படுத்தி வருகிறது.

அமெரிக்க பாதுகாப்புத் துறை உக்ரேனுக்கு மேலும் 125 மில்லியன் டொலர்கள் ஆயுதங்களை அனுப்புவதாக அறிவித்துள்ளது. போர் ஆய்வுக்கான பயிலகத்தின் கூற்றுப்படி தாங்கி எதிர்ப்பு அமைப்புகள், ரொக்கட் ஏவிகள், ஒளியியல் கண்காணிப்பு, தாங்கி எதிர்ப்பு வழிகாட்டும் ஏவுகணைகள், பல்நோக்கு ரேடார்கள், பல்நோக்கு சக்கர வாகனங்கள், சிறிய ஆயுதங்கள், வெடிமருந்துகள் மற்றும் கூடுதல் ஆயுத உபகரணங்கள் மற்றும் வெடிமருந்துகள் என்பன அவற்றில் அடங்குகின்றன.

கடந்த 6. 8.2024 செவ்வாய்க்கிழமை அதிகாலை, உக்ரேனிய படைகள் ரஷ்ய பிராந்தியத்திலுள்ள எல்லைப் பகுதியான கூர்ஸ்க்கில் மிகப்பெரிய ஊடுருவலைத் தொடங்கின. ரஷ்ய இராணுவ அதிகாரிகளின் கூற்றுப்படி, இந்தத் தாக்குதலில் உக்ரேனிய ஆயுதப் படைகளின் ஒரு பிரிவிலுள்ள 1,000 துருப்புக்களுடன், ஏழு தாங்கிகள் உட்பட 50 கவச வாகனங்கள் ஈடுபட்டன.

ரஷ்ய - உக்ரேனிய துருப்புக்களுக்கு இடையே மோதல்கள் எல்லைக்கு வடக்கே 7 கிலோமீட்டர் வரை நடந்தன. ஐரோப்பாவிற்கு விநியோகிக்கப்படும் ரஷ்ய எரிவாயு வழங்கும் சுட்ஜா நகரில் உள்ள ஒரு எரிவாயு அளவீட்டு நிலையத்தை உக்ரேனிய துருப்புக்கள் குறிவைத்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஆயினும் கடந்த புதன்கிழமை மாலைக்குள் இந்தத் தாக்குதல் முறியடிக்கப்பட்டதாக ரஷ்ய அரசாங்கம் அறிவித்தது. இருப்பினும், கூர்ஸ்க் பிராந்தியத்தில் அவசரகாலநிலை இன்னும் நடைமுறையில் உள்ளது.

அப்பகுதியை இலக்கு வைத்து உக்ரேனிய ஆயுதப் படைகள் நடத்திய குறைந்தது ஏழு ஏவுகணைகளை ரஷ்ய வான் பாதுகாப்பு ஏவுகணைகள் சுட்டு வீழ்த்தின.

ஆறு குழந்தைகள் உட்பட 31 குடிமக்கள் காயமுற்றிருப்பதை ரஷ்ய அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். இறந்தவர்களின் உத்தியோகபூர்வ எண்ணிக்கை எதுவும் வெளியிடப்படவில்லை. ஆனால், ரஷ்ய ஊடகங்கள் பல துணை மருத்துவர்கள் கொல்லப்பட்டதாக தெரிவித்தன.



ஐங்கரன் விக்கினேஸ்வரா

# மம்தா பானர்ஜியின் அலட்சிய அரசுக்கு எதிராக இந்திய மக்கள் கடும் ஆவேசம்!

கொல்கத்தாவின் ஆர்ஜி கர் மருத்துவக் கல்லூரி இளம் மருத்துவர் வன்புணர்வு செய்யப்பட்டு. கொல்லப்பட்ட சம்பவம் இந்தியாவையே உலுக்கி உள்ளது. இந்தியா முழுவதும் இந்தச் சம்பவம் மக்கள் இடையே கொதிப்பையும், சீற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த விவகாரத்தை எதிர்கொண்ட விதத்திலும், விசாரணை நடத்திய விதத்திலும் முழுக்க முழுக்க மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி மீதே தவறு உள்ளது என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது.

மக்களுக்கு இதனால் மம்தா பானர்ஜி மீதும், அவரது நிர்வாகம் மீதும் கோபம் அதிகரித்துள்ளது. இந்தச் சம்பவம் மருத்துவ சமூகத்தை மட்டுமின்றி பொதுமக்களையும் உலுக்கி உள்ளது. இந்த வழக்கை தவறாக கையாண்ட மேற்கு வங்க அரசு மற்றும் பொலிஸ்துறைக்கு கண்டனம் தெரிவிப்பதில் அனைத்து தரப்பு மக்களும் ஒன்றிணைத்துள்ளனர்.

இந்த வழக்கை அரசு கையாண்ட விதத்திற்கு எதிராக நாடு முழுவதும் உள்ள மருத்துவத் துறையினர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். டெல்லியில் உள்ள ராம் மனோகர் லோஹியா மருத்துவமனையின் மருத்துவர்கள் முதலில் தங்கள் வேலைநிறுத்தத்தை வாபஸ் பெற்ற நிலையில் மீண்டும் போராடுவதாக அறிவித்தனர்.

டெல்லி மட்டுமல்ல மொத்த நாடும் இந்த போராட்டத்தில் கரம் கோர்த்தது.

"மேற்கு வங்கத்தில் நடந்த கொடூரமான சம்பவம் எங்களை மிகவும் பயமுறுத்தியுள்ளது. எங்களுக்கு பாதுகாப்பு தேவை, மேற்கு வங்கத்தில் பாதிக்கப்பட்டவருக்கு நீதி வழங்கப்பட வேண்டும்" என்று சக மருத்துவரான பெண் ஒருவர் கோரிக்கை வைத்தார். அவரது வார்த்தைகள் மருத்துவர்கள் தங்கள் பணியிடங்களில் படும் கஷ்டங்களை வெளிப்படுத்தும் விதமாக அமைந்து இருந்தது. பெங்களூரைச் சேர்ந்த டொக்டர் ஷாமா ராவ் மேலும் கூறுகையில், டொக்டர்களுக்கு பாதுகாப்பு இல்லை, அதுதான் முக்கிய பிரச்சினை. இந்த சம்பவத்தில் கூட, இன்னும் நீதி கிடைக்கவில்லை. எங்கள் ஜூனியர்களை பயமின்றி வேலை செய்யச் சொல்ல கூட எங்களால் முடியவில்லை" என்றார்.







இந்த ஏமாற்றம் நாடு முழுவதும் உள்ள மருத்துவர்களால் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. அவர்கள் இப்போது தங்களுக்கு இனி பணியிடத்தில் பாதுகாப்பு இருக்குமா என்று அச்சத்தில் மூழ்கி உள்ளனர்.

விசாரணையில் குறைபாடு, விசாரணையை தாமதப்படுத்தியது, கலவரத்தை தடுக்காமல் போனது, போராட்டத்தை முறையாக கையாளாமல் போனது என்று பல காரணங்களுக்காக மேற்கு வங்க அரசாங்கத்தின் மீது உச்ச நீதிமன்றம் கடுமையான விமர்சனங்களை வைத்துள்ளது. உச்ச நீதிமன்றம் மீது இந்த விவகாரம் காரணமாக மக்களுக்கு பெரிய அளவில் நம்பிக்கையும் ஏற்பட்டு உள்ளது. மருத்துவர்களின் பாதுகாப்புக்கான தேசிய நெறிமுறையை உருவாக்க 10 பேர் கொண்ட பணிக்குழுவை உருவாக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொதுமக்கள் மம்தா அரசு மீது கோபம் அடைவதற்கு நிறைய காரணங்கள் உள்ளன. மம்தா பானர்ஜி தலைமையிலான மேற்கு வங்க அரசு இந்த வழக்கை கையாண்ட விதம் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகி உள்ளது. எஃப்.ஐ.ஆர் பதிவு செய்வதில், தாமதம், மருத்துவமனை அதிகாரிகள் இந்த சம்பவத்தை தற்கொலை என்று குறைத்து மதிப்பிட முயன்றது, மருத்துவமனை அதிபர் மீது எடுக்கப்பட்ட தாமதமான நடவடிக்கை, மருத்துவமனையில் நடந்த வன்முறைகள், அதை கையாள தவறியது போன்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

"குற்றத்தின் உண்மையான குற்றவாளிகள் ஒருபோதும் நீதியின் முன் நிறுத்தப்பட மாட்டார்கள் என்று அஞ்சும் அளவிற்கு மம்தா இந்த விவகாரத்தை மோசமான நிலைக்கு கொண்டு சென்றுவிட்டார்" என்று மக்கள் கூறுகின்றனர்.

நீதியை உறுதி செய்வதை விட அரசியல் செய்வதிலேயே மேற்கு வங்க மாநில அரசு அதிக ஆர்வம் காட்டியது. இதை பார்த்து சலிப்பும் கோபமும் அடைந்து இருந்த மேற்கு வங்க மக்களுக்கு, நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி இவ்விடயம் குறித்துப் பேசியது பெரிய நம்பிக்கையை அளித்துள்ளது. ஒன்று திரண்ட இந்திய நாடு முழுவதும், மம்தா பானர்ஜி நிர்வாகத்தின் தோல்விகளுக்கு எதிராக குரல்கள் எழுந்து வருகின்றன. மொத்த நாடே இதில் ஒன்று திரண்டு உள்ளது. கொல்கத்தா பலாத்காரம் மற்றும் கொலை வழக்கை தவறாக கையாண்ட விவகாரம் மம்தா பானர்ஜிக்கு எதிராக திரும்பி உள்ளது.

மம்தாவிற்கு எதிராக ஒன்றுபட்ட கோபம் மொத்த நாடு முழுக்க ஏற்பட்டு உள்ளது. மம்தா இதற்கு பொறுப்பேற்க வேண்டும், அவர் தனது தவறை ஒப்புக்கொள்ள வேண்டும் என்று மக்கள் ஒன்று திரண்டு கோரிக்கை வைக்கத் தொடங்கி உள்ளனர்.

# மத்தியமுகாம், சாளம்பைக்கேணி பிரதேசங்களுக்கு குடிநீர் இணைப்புகள்

நீர் இணைப்பொன்றைப் பெறுவதில் பொருளாதார ரீதியாக மிகுந்த சிரமத்துடன் வாழ்ந்து வருகின்ற சமுர்த்தி பயனாளர்கள் சிலரை இனங்கண்டு கல்முனை பிரதேசத்தின் மிகவும் கஷ்டப் பிரதேசமான மத்திய முகாம் மற்றும் சாளம்பைக்கேணி பிரதேசங்களில் வசிக்கின்ற பயனாளர்களுக்கு குடிநீர் இணைப்புக்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நீர் இணைப்புக்கள் வை.டபிள்யூ.எம்.ஏ. பேரவையின் ஒருங்கிணைப்பில் கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் ஸ்தாபகர் ரஹ்மத் மன்சூரினால் வழங்கி வைக்கப்பட்டன.

இதன் போது நாவிதன்வெளி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் ஏ.சீ.ஏ.நஸார், முன்னாள் பிரதேச சபை உறுப்பினரும் அல்அமானா சமூக சேவை அமைப்பின் தலைவருமான எம்.பி.நவாஸ், மத்திய முகாம் பள்ளிவாசல் தலைவர் எம்.கே.பயாஸ், மத்திய முகாம் முஸ்லிம் காங்கிரஸ் கிளைக் குழுத் தலைவர் நௌபர், சாளம்பக்கேணி-04 முஸ்லிம் காங்கிரஸ் கிளைக் குழுத் தலைவர் ஆர்.பசில், சாளம்பக்கேணி03 கிளைக் குழு உறுப்பினர் ஏ.அப்துல்லாஹ் மற்றும் ரஹ்மத் மன்சூர் அவர்களின் பிரத்தியேக செயலாளரும் ரஹ்மத் பவுண்டேசன் உறுப்பினருமான எம்.ஜே.எம்.பாயிஸ்,பவுண்டேசன் உறுப்பினர்களான எம்.எம்.றியாஸ், யூ.எல்.ஏ.ஜப்பார், பயனாளர்கள், பிரதேசவாசிகள், நலன் விரும்பிகள் என பலர் கலந்து கொண்டனர்.

எம்.ஐ.எம்.அஸ்ஹர்
(மாளிகைக்காடு குறூப் நிருபர்)



# புதிய நீர்க்கட்டணப் பட்டியல்

கட்டண விதிப்பு அட்டவணை - 02 வகுதி இலக்கங்கள் 10,11,12,15,16,19
வீட்டுப் பாவனை - சமுர்த்தி பெறுநர்கள் மற்றும் தோட்ட குடியிருப்புகள் அல்லாத

| அலகுகளின் எண்ணிக்கை | பாவனைக் கட்டணம் | மாதாந்த சேவைக் கட்டணம் |
|---|---|---|
| | ரூபா/ ஒரு அலகு | ரூபா |
| 00 – 05 | 50.00 | 100.00 |
| 06 – 10 | 70.00 | 200.00 |
| 11 – 15 | 90.00 | 300.00 |
| 16 – 20 | 100.00 | 400.00 |
| 21 – 25 | 120.00 | 500.00 |
| 26 – 30 | 130.00 | 600.00 |
| 31 – 40 | 170.00 | 1,500.00 |
| 41 – 50 | 185.00 | 2,000.00 |
| 51 – 75 | 225.00 | 3,000.00 |
| 76 – 100 | 255.00 | 4,000.00 |
| 100 இற்கு மேல் | 285.00 | 4,500.00 |

## ஜனாதிபதி தேர்தல் கண்காணிப்பு;...

ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் குழு இலங்கைக்கு வந்துள்ளது. இதற்கு மேலதிகமாக பொதுநலவாய நாடுகளின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் மற்றும் ஆசிய தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பின் பிரதிநிதிகள் குழுவும் ஜனாதிபதி தேர்தலை கண்காணிப்பதற்காக இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆனந்த ரத்நாயக்க தெரிவித்தார்.

அந்த அமைப்பு விடுத்த கோரிக்கைக்கு இணங்க தேர்தலை கண்காணிக்க அனுமதிக்கப்பட்டதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. தேர்தல் நடவடிக்கைகளை கண்காணித்த பின்னர் இந்த அமைப்புகள் விசேட அறிக்கைகளை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி ரணிலுக்கு...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அவரது அரசியல் அலுவலகத்தில் சந்தித்து தமது நிலைப்பாட்டை தெரிவித்த அவர்கள், ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை வெற்றி பெற செய்வதற்கு பெரும்பான்மையான தமிழ், முஸ்லிம் மக்கள் ஏற்கெனவே தீர்மானித்துள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியில் சந்தேகமில்லையெனவும் குறிப்பிட்டனர்.

## அங்கஜன், துஷ்மந்த எம்.பி.க்கள்...

பார்ப்பது எந்த வகையிலும் சாத்தியமில்லை. நாட்டினதும் நாட்டு மக்களினதும் எதிர்காலத்துக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்த தாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் தூய்மையான அரசியல் பயணத்தை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

ஸ்ரீல.சு.க. வின் உப தலைவர் அங்கஜன் இராமநாதன் 2013ஆம் ஆண்டு வடமாகாண சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு, 2015ஆம் ஆண்டு தேசியப்பட்டியலூடாக முதன் முறையாக பாராளுமன்றுக்கு தெரிவானார். 2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஸ்ரீல.சு.க. சார்பாக யாழ். மாவட்டத்தில் போட்டியிட்ட அவர், இரண்டாவது தடவையாகவும் பாராளுமன்றுக்கு தெரிவானார். தற்போது ஸ்ரீல.சு.க. வின் சிரேஷ்ட உப தலைவராகவுள்ள அங்கஜன் இராமநாதன், பாராளுமன்ற குழுக்களின் பிரதி தலைவராகவும் உள்ளார். இதேவேளை 2015ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்று கேகாலை மாவட்டத்திலிருந்து முதன்முறையாக பாராளுமன்றுக்கு தெரிவான சாரதி துஷ்மந்த மித்ரபால, ஸ்ரீல.சு.க. வின் பதில் பொதுச் செயலாளராக உள்ளதுடன், தற்போது கட்சியின் மத்திய குழு உறுப்பினராகவும் உள்ளார்.

## டிஜிட்டல் ரயில்...

குறுஞ்செய்தி அல்லது மின்னஞ்சல் மூலமாக பயணச் சீட்டின் QR குறியீடு அனுப்பி வைக்கப்படுமெனவும் ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

இதனை ரயில் நிலையத்தில் சரி பார்ப்பதுடன், பயணச் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் மாத்திரம் அதனை பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி வேட்பாளர் டொக்டர்...

ஆகிய மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர், கடந்த திங்கட்கிழமை (19) திடீரென சுகயீனமடைந்து புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த போதே காலமானார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினூடாக தனது அரசியல் பிரவேசத்தை ஆரம்பித்த இவர் , அந்தக் கட்சியின் உருவாக்கத்துக்காக மு.கா. ஸ்தாபகத் தலைவரான மர்ஹூம் எம்.எச். எம்.அஷ்ரபுடன் இணைந்து மிகவும் தீவிரமாக செயற்பட்டார்.

இலங்கையில் யுத்தம் தீவிரமடைந்த காலத்தில் வடமாகண சபை தேர்தலில் போட்டியிட்டு உறுப்பினராக தெரிவானது மாத்திரமன்றி, மு.கா.வின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராகவும் தெரிவானார். இலங்கை ஈரான் நாடுகளுக்கிடையில் நட்புறவை பேணுவதற்கும் டொக்டர் ஐதுருஸ் முஹம்மது இல்யாஸ் மரணிக்கும்வரை செயற்பட்டார்.

அரசியல் செயற்பாடுகளில் முதிர்ச்சியடைந்த இவர், தேசிய அரசியல் கட்சிகளுடனும் கட்சித் தலைவர்களுடனும் மிகவும் நெருக்கமான உறவை பேணினார். அத்துடன் புத்தளத்தில் அனுபவம் வாய்ந்த வைத்தியரான இவர், புத்தளத்தில் இலவச மருத்துவ சேவையையும் முன்னெடுத்தார்.

புத்தளத்தில் பல சமூகம் சார்ந்த போராட்டங்களுக்கு தலைமை வகித்ததுடன், 2022ஆம் ஆண்டு கொழும்பு குப்பைகளை புத்தளம் அருவக்காட்டில் கொட்டுவதற்கு அப்போதைய அரசு ஏற்பாடு செய்த போது, அதற்கு எதிராக புத்தளத்தில் நடத்தப்பட்ட போராட்டங்களில் கலந்துகொண்டு இவர், சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டத்தையும் ஆரம்பித்து வைத்து எதிர்ப்பை வெளிக்காட்டினார்.

ஒவ்வொரு ஜனாதிபதி தேர்தலிலும் ஒரு வேட்பாளராக போட்டியிட்டு வந்த இவர், இம்முறை நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலிலும் போட்டியிடவிருந்தார்.

அன்னாரின் ஜனாஸா நேற்று (23) புத்தளம் மஸ்ஜிதுல் பகா முஸ்லிம் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## தோட்டப்புற மக்களுக்கு...

தேர்தல் காலங்களில் பெருந்தோட்ட மக்களை இலக்கு வைத்து தரமற்ற மது பாவனையை மலையக தொழிற்சங்கங்கள் முன்னெடுத்து வருவதாக பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்கவால் முன்வைக்கப்பட்டதாக கூறப்படும் பொய்யான குற்றச்சாட்டு தொடர்பான செய்தி அண்மையில் தொலைக்காட்சியொன்றில் ஒளிபரப்பாகியது.

இதற்கு கண்டனம் தெரிவித்து அமைச்சர் ஜீவன் தொண்டமான் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு கண்டனம் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"இன்றைய காலக்கட்டத்தில் பெருந்தோட்ட சமூகத்தை பொறுத்தவரை கல்வியாலும் சரி, ஏனைய துறைகளாலும் சரி வளர்ச்சியடைந்து வரும் சமூகமாக காணப்படுகிறது. ஆனால் ஒரு சில அரசியல் நபர்களுக்காகவும் அரசியல் கட்சிகளுக்கு சார்பாகவும் தனிநபர்களால் குரல் எழுப்பி மலையகத்தை இலக்கு வைத்து தவறான கருத்துகளை ஊடகத்தினூடாக வெளிப்படுத்தி வருகின்றார்கள்.

இதற்கப்பால் எவ்வாறு வாக்களிக்க வேண்டும், யாருக்கு வாக்களிக்க வேண்டும், யாருக்கு வாக்களிப்பதனூடாக மலையக மக்களின் வாழ்க்கை சுபீட்சமாக அமையுமென்று அவர்களுக்கு நன்றாக தெரியும். அதாவது ஒரு சில பகுதிகளில் இவ்வாறான தவறான செயற்பாடுகள் இடம்பெறுமாயின், நுவரெலியா மாவட்டத்தை பொறுத்தவரை எந்தவொரு தொழிற்சங்கமும் இவ்வாறான கீழ்த்தரமான செயற்பாடுகளை செய்வதற்கு உடன்படப் போவதுமில்லை. இதற்கு மக்களும் தயாருமில்லை. எனவே தேர்தல் காலங்களில் இவ்வாறான பொய்யான தேர்தல் பிரசாரங்களை பரப்பி அவர்களை பலப்படுத்திக் கொள்வதற்காககருத்துகளைஊடகத்தினூடாக வெளிப்படுத்தி வருகின்றார்கள்.

ஆனால் அவர்களுக்கான சட்ட நடவடிக்கை எடுக்க மலையகத்தில் இருக்கும் அனைத்து தொழிற்சங்கமும் தம்முடைய எதிர்ப்பை தெரிவிப்பதுடன், சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென தேர்தல் ஆணைக்குழுவுக்கு எழுத்து மூலம் ஒன்றிணைந்த மனுவும் கையளிக்கப்படும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரத்தினபுரி தமிழருக்கு...

உள்ளாகினர். இதனை நிவர்த்தி செய்யக்கூடிய இன்னுமொரு வாய்ப்பு ஐக்கிய மக்கள் சக்திக்கும் தமிழ் முற்போக்கு கூட்டணிக்கும் கைகூடியுள்ளது. ஆகையால் வெற்றிடமாகவுள்ள தேசியப்பட்டியலை இரத்தினபுரி தமிழ் மக்களுக்காக சஜித் கொடுப்பாரா? மனோவால் பெற முடியுமா? என வேலுகுமார் எம்.பி. கேள்வியெழுப்பினார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்த அவர்,

"கடந்த 2015 மற்றும் 2020 பொதுத் தேர்தல்களில் இரத்தினபுரி, கேகாலை, கம்பஹா, களுத்துறை மாவட்ட தமிழ் மக்கள் பெருவாரியாக தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு வாக்களித்தனர். எனினும் அம்மாவட்டங்களிலிருந்து தமிழ் பிரதிநிதி ஒருவர் தெரிவாக முடியாமல் போனது. எனவே இம்மாவட்டங்களிலிருந்து கிடைத்த பெருவாரியான வாக்குகள் மூலம் ஐ.ம.ச. அதிகமான தேசியப்பட்டியல் எம்.பி.க்களை பெற்றது. எனினும் தமிழ் மக்களின் வாக்குகளுக்கு மதிப்பளித்து குறைந்தபட்சம் ஒரு தேசியப்பட்டியல் எம்.பி.யை கூட பெற்றுக்கொள்ள தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைமைகள் முயற்சிக்கவில்லை. அதற்கு பதிலாக அவர்களின் சிறப்புரிமைகளையே உயர்த்தினர். இல்லையெனில் இப்போதாவது வெற்றிடமாகவுள்ள தேசியப்பட்டியல் எம்.பி.யை இரத்தினபுரிக்கு பெற்றுக்கொடுக்க முடியும். ஆனால் சஜித் அதனை பெற்றுக்கொடுக்கப் போவதில்லை. வாக்களித்த இரத்தினபுரி மக்களை பார்த்து ஐயாயிரம் வாக்குகள் எங்கே போனது, இருநூற்று ஐம்பது வாக்குகள் எங்கே போனது என குறை கூறுவதை நிறுத்துங்கள். மக்கள் சரியாகவே வாக்களித்திருக்கின்றார்கள். ஆனால் தலைவர்களென சொல்பவர்கள் சரியாக நடக்கவில்லை.

இப்போது இரத்தினபுரி, கேகாலை தமிழ் மக்களுக்கு கண் துடைப்பாக ஐ.ம.ச. வில் முக்கிய பதவிகள் என்கிறார்கள்.

ஐ.ம.ச. வில் எந்தவொரு முக்கிய பதவியும் கிடையாது. வெறுமனே தேசியப்பட்டியல் எம்.பி. கதையை மூடி மறைத்து தம்மீதுள்ள குற்றச்சாட்டிலிருந்து மீள்வதற்கான நாடகம் மட்டுமே. இரத்தினபுரி தமிழ் மக்களை ஏமாற்றாது, நாட்டின் அதியுயர் சபையான பாராளுமன்றத்துக்குரிய உறுப்புரிமையை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுங்கள்" எனத் தெரிவித்தார்.

## மக்கள் என்னுடன் அணிதிரள்வார்களாயின்...

சகல விதமான பிரச்சினைகளையும் குறுகிய காலத்துக்குள் தீர்க்கலாம்" என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மட்டக்களப்பு, களுதாவளை சுயம்புலிங்க பிள்ளையார் ஆலயத்துக்கு நேற்று விஜயம் செய்து வழிபாடுகளில் ஈடுபட்டதுடன், அப்பிரதேச மக்களின் குறைநிறைகள் தொடர்பாகவும் கேட்டறிந்தார்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே, அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இச்சந்திப்பில் மேலும் தெரிவித்த அவர்,

"இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாடு இருளிலிருந்தது. அத்தியாவசியப் பொருட்கள் இல்லாமலும், பற்றாக்குறையாகவும், அனைத்துக்கும் வரிசை, பொருட்களின் விலை அதிகரிப்புக்கு முகங்கொடுக்க நேரிட்டது. இந்நிலைமையை இரண்டு வருடத்துக்குள் ஜனாதிபதி மாற்றி அமைத்துள்ளார். இன்னும் அது மாற்றம் பெற வேண்டும். பொருட்களின் விலைகள் இன்னும் குறைக்கப்பட வேண்டும். அந்த வகையில ஜனாதிபதி நாட்டின் நலன் கருதியே முடிவுகளை எடுத்துள்ளார். நாடு இருளில் மூழ்கும் போது நாட்டை மீட்கக்கூடியவர் யாரென்பதை அறிந்து அப்போதே நான் ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவின் பெயரை சிபார்சு செய்தேன். என்னுடைய எதிர்பார்ப்பும் இவராலேயே இப்பிரச்சினைகளை தீர்க்க முடியுமென நான் நம்புகிறேன். பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களை தமிழ் பிரதிநிதிகள் சந்திக்கும் போது 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவீர்களா? என கேட்கின்றார்கள். அதை அவர்களிடம் கேட்க வேண்டியதில்லை. அனைத்தும் அரசியலமைப்பில் உள்ளன. அதை பெறுவதற்கு நாங்களே முயற்சி செய்ய வேண்டும். ஆனால் அதை என்னால் செய்ய முடியும். நாம் சொல்வதை செய்பவர்கள், செய்வதை சொல்பவர்கள். எனவே எமக்கும் வரும் பாராளுமன்ற தேர்தலில் 4 அல்லது 5 ஆசனங்கள் இருந்தால் என்னால் விரைவில் இலகுவாக வேகமாக பிரச்சினைகளை தீர்க்க முடியும்" எனத் தெரிவித்தார்.

## ஆசியாவின் முதலாவது ...

கட்டுப்பாட்டு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நோயாளி இம்மாதம் 14ஆம் திகதி பாங்கொக் விமான நிலையத்தில் வந்திறங்கிய போது இந்த நோய்க்கான அறிகுறிகள் காணப்பட்டதை அடுத்து மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டதாக சுகாதார அதிகரிகள் தெரிவித்துள்ளனர்.

"மேலும் இந்த நோயாளியுடன் நெருங்கிய தொடர்பிலிருந்த 43 பேரை நாங்கள் கண்காணித்து வருகின்றோம்.

## ஹக்கீமிடம் ரூ. 200 கோடி கோரி...

உறுப்பினர் ஹக்கீம் தமிழில் உரையாற்றிய போது, பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்கவின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் கருத்துக் கூறியதாக தெரிவித்தே இந்த கோரிக்கை கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

2019ஆம் ஆண்டு மே மாதம் அநுரகுமார திஸாநாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்தை வேண்டுமென்றே பாராளுமன்ற உறுப்பினர் ஹக்கீம் திரிவுபடுத்தி இவ்வாறு தெரிவித்துள்ளதாகவும் அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

அவரது இந்த உரையின் மூலம் மக்கள் மனதில் தனக்குள்ள மதிப்பை குறைப்பதற்கும், அரசியல் தலைவர் மற்றும் ஜனாதிபதி வேட்பாளர் என்ற தனது பொது நற்பெயருக்கு பாதிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க மேலும் குற்றம் சுமத்தியுள்ளார்.

அநுரகுமார திஸாநாயக்கவின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தப்பட்டமைக்காக தேசிய மக்கள் சக்தியின் வழக்கறிஞர் ஊடாக 2 பில்லியன் ரூபா கோரி இந்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## 'சிறிகொத்த' தலைமையகத்தில்....

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் இதில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

## தமிழ் தரப்பு பொது வேட்பாளருக்கு...

தெரிவித்த அவர், "ஜனாதிபதி தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாருக்கு ஆதரவளிக்குமென்பது இதுவரை தீர்மானிக்கப்படவில்லை. யாருக்கு ஆதரவு வழங்குவதென்பது தொடர்பாக அவசரப்பட வேண்டிய தேவை கிடையாது. வாக்களிப்பு நடத்தப்படுவதற்கு ஒரு வாரத்துக்கு முன்னர் எமது தீர்மானத்தை அறிவிப்போம்.

ஜனாதிபதி தேர்தலை புறக்கணிக்குமாறு ஒரு தரப்பினர் குறிப்பிடுவதை தமிழ் மக்கள் ஏற்கப் போவதில்லை. இவர்கள் ஒவ்வொரு தேர்தல்களின் போதும் தேர்தலை புறக்கணிக்குமாறு தெரிவிப்பார்கள். ஆனால் மக்கள் அந்தக் கோரிக்கையை ஏற்றதில்லை. இம்முறையும் தேர்தலை மக்கள் புறக்கணிக்கப் போவதில்லை.

தமிழ் பொது வேட்பாளருக்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்கவில்லை. அவர் எங்களின் கட்சி உறுப்பினர். அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை முன்னெடுத்துள்ளோம். இதனூடாக எமது நிலைப்பாட்டை விளங்கிக்கொள்ள வேண்டும்.

கடந்தகால தேர்தல்களிலும் எமது நிலைப்பாட்டை இறுதி தருணத்திலேயே அறிவித்தோம். அதற்கமைய 80 சதவீதமானோர் எமது தீர்மானத்துக்கமையவே வாக்களித்தனர். ஆகவே இம்முறையும் நாங்கள் குறிப்பிடும் வேட்பாளருக்கே எம்மக்கள் வாக்களிப்பார்கள்" எனத் தெரிவித்துள்ளார்.

## தமிழர் தரப்பு பொது ...

இல்லத்தில் வேட்பாளர் அரியநேத்திரன் சந்தித்து கலந்துரையாடினார்.

இச்சந்திப்புக்கு பின்னர் இருவரும் கூட்டாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக சிறிதரன் எம்.பி. மேலும் தெரிவித்த போது, இலங்கைத் தமிழரசுக் கட்சி என்ன முடிவை எப்போது எடுத்தாலும், தனிப்பட்ட முறையில் எனது ஆதரவு அரியநேத்திரனுக்கு வழங்கப்படும்.


கட்சி என்ன முடிவை எடுக்கிறதோ? எடுக்கவில்லையோ? அது எவ்வளவு தூரம் எம்மை கொண்டு செல்லப் போகிறதோ என்பதை தமிழ் மக்கள் தீர்மானிப்பார்கள் என்றார்.

# இன்றைய பலன்கள்

(24.08.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)


**மேஷம்:**

குடும்பத்தில் அமைதி நிலவும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். சில பணிகள் அலைக்கழிப்பை தரலாம்.

**ரிஷபம் :**

சொந்தத் தொழிலில் வேலைப்பளு அதிகரிக்கும். எதிர்பார்க்கும் முக்கிய காரியங்கள் தள்ளிப் போகலாம்.

**மிதுனம்:**

கூட்டுத்தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கலாம். அனேக காரியங்களில் முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள்.

**கடகம்:**

உத்தியோகத்தர்கள் தங்கள் பணிகளில் கூடுதல் கவனத்துடன் செயல்படுவது அவசியம். எதிர்பார்த்து காத்திருக்கும் பணவரவு தாமதமாகலாம்.

**சிம்மம்:**


கூட்டுத் தொழிலில் லாபம் குறைக்கலாம். சில காரியங்கள் நடைபெறாமல் தள்ளிப்போய் கவலை ஏற்படுத்தும்.

**கன்னி:**

முக்கியமான காரியங்களை கொஞ்சம் தள்ளிப் போடுங்கள். கூட்டுத் தொழில் வியாபாரத்தில் நல்ல லாபம் ஏற்படலாம்.


**துலாம்:**

உத்தியோகத்தில் மற்றய பணியாளர்களின் சொந்த விஷயங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. பணவரவுகளில் தடைகளை தவிர்க்க முடியாது.

**விருச்சிகம்:**

சில காரியங்களில் வெற்றி பெற நண்பர்களின் உதவி தேவைப்படும். சிலருக்கு பதவி உயர்வும் சம்பள உயர்வும் கிடைக்கலாம்.

**தனுசு:**

கூட்டுத் தொழில் நன்கு நடைபெறக்கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சியான போக்கு காணப்படும். முயற்சிகளில் முன்னேற்றமான பலன்களை பெறுவீர்கள்.

**மகரம்:**

சொந்தத் தொழிலில் ஆதாயம் அதிகரிக்கலாம். புதிய வாடிக்கையாளர் ஒருவரின் பணியை முடிக்க ஓய்வின்றி உழைப்பீர்கள்.

**கும்பம்:**

ஊழியர்கள் எதிர்பார்க்கும் சலுகைகளை செய்து கொடுப்பீர்கள். கூட்டுத்தொழில் வியாபாரம் நல்ல லாபத்தை பெற்று தரும்.

**மீனம்:**

அவசர வேலை ஒன்றை உடனடியாக செய்ய வேண்டியது இருக்கும். வரவு செலவு சரிசமமாக இருக்கும்.

## இரத்து செய்ய எந்தவொரு...

இதுவரை புதுப்பிக்கப்படாத சுமார் 2 மில்லியன் சாரதி அனுமதிப்பத்திரங்கள் தொடர்பான தகவல்களை புதுப்பிப்பதற்காக புதிய முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகவும் அதற்கான அனைத்து பணிகளும் இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவு செய்யப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்ட அவர் இதனை தெரிவித்தார்.

1960 களில் இந்த நாட்டின் முதல் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டதிலிருந்து சுமார் 12.3 மில்லியன் சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இங்கு மேலும் தெரிவித்த அவர்,

"இந்த நாட்டில் முதல் சாரதி அனுமதிப்பத்திரம் 60 காலப்பகுதிகளில் வழங்கப்பட்டது. அதன் பின்னர் சுமார் 12.3 மில்லியன் சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில் 60 களில் வழங்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கு காலாவதி திகதி இல்லாததால் அந்த அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்காமல் பயன்படுத்தலாம். எனவே சுமார் 2 மில்லியன் சாரதி அனுமதிப்பத்திரங்களை வைத்திருப்பவர்களின் தகவல்கள் புதுப்பிக்கப்படவில்லை.

போக்குவரத்துத்துறை தொடர்பான அனைத்து சேவைகளும் தற்போது டிஜிட்டல் மயமாக்கப்பட்டு வருகின்றன. மேலும் சாரதிகளுக்கு அறிமுகப்படுத்தப்படவுள்ள புள்ளிகள் குறைத்தல் முறைமை மற்றும் குறித்த இடத்திலேயே அபராதம் செலுத்துவதற்கான பணிகள் தற்போது இறுதிக் கட்டத்தில் உள்ளன.

## தேர்தல் முறையை.... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாம் எவ்வாறு, எங்கிருந்து நகர்வுகளை ஆரம்பிக்க வேண்டுமென்று சிந்திக்க வேண்டும்.

டிஜிட்டல் மாற்றத்துக்கான முகவர் நிலையம் மற்றும் செயற்கை நுண்ணறிவு மையம் ஆகியவை தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

## யாழ். நகருக்கு .... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொன்னாடை போர்த்தியும் கௌரவித்தனர். இலங்கை பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக பதவி வகித்த முதலாவது தமிழர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 97ஆவது பிறந்தநாள் நினைவுப் பேருரை இன்று பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். நகரில் அமைந்துள்ள றிம்மர் மண்டபத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்துகொள்வதற்காகவே திராவிடர் கழகத் தலைவர் வீரமணி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளார்.

அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளையினரின் ஏற்பாட்டில் ஓய்வுநிலை மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்கினராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வீரமணி நினைவுப்பேருரை நிகழ்த்துவார். சிறப்புரையை தென்னிந்திய திருச்சபையின் ஆயர் கலாநிதி வி.பத்மதயாளன் நிகழ்த்துவார்.

## பாராளுமன்ற .... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எழுத்து மூலம் அவர் இதனை அறிவித்துள்ளார்.

1981ஆம் ஆண்டின் முதலாம் இலக்க பாராளுமன்ற தேர்தல்கள் சட்டத்தின் 64(1) ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

## விவாதத்தில் பங்கேற்க தயார்...

ஹெட்டியாராச்சிக்கு எழுதிய கடிதத்திலேயே தான் இதற்கு தயாராக இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"ஒரு வளர்ந்த ஜனநாயக சமூகத்தில் இருக்க வேண்டிய இத்தகைய விவாதத்தை நடத்துவதற்கான உங்கள் முற்போக்கான முயற்சிகளை நான் பாராட்டுகிறேன். இது இலங்கை மக்கள் வேட்பாளர்களையும் அவர்களின் கொள்கைகளையும் ஒப்பிட்டு பார்க்க உதவும். பகுத்தறிவு மற்றும் கருத்து அடிப்படையிலான விவாதம் இருக்குமென்று நம்புகிறேன்.

விவாதத்தின் நேரம், திகதி, இடம் மற்றும் வடிவம் குறித்து விரைவில் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்

# மட்டக்களப்பு மாவட்ட உணவகங்களில் இரவுநேர திடீர் அதிரடி சோதனை

## 3 உணவகங்களுக்கு சீல் வைப்பு; 17 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல்

**பாண்டிருப்பு தினகரன், காரைதீவு குறுப் நிருபர்கள்**

மட்டக்களப்பு சுகாதார பிரிவுக்குட்பட்ட ஐந்து பிரிவுகளில் இரவு நேர உணவுப் பாதுகாப்பு சுகாதாரம் தொடர்பாக திடீர் அதிரடிச் சோதனை நேற்று முன்தினம்(22) இரவு இடம்பெற்றது.

இதன்போது மக்கள் பாவனைக்குதவாத 3 உணவகங்களுக்கு சீல் வைக்கப்பட்டதுடன் 17 உணவகங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்தியகலாநிதி டொக்டர் இராசரெட்ணம் முரளீஸ்வரனின் ஏற்பாட்டில் இரவு நேர விசேட அதிரடிச்சோதனை இடம்பெற்றது. இதில் பிரதி சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி சரவணபவான் உட்பட எட்டு வைத்தியர்கள், இரண்டு உணவு மருந்து பரிசோதகர்கள், இரண்டு மாவட்ட மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர்கள், 4 மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர்கள் ,17 சுகாதார பரிசோதகர்களும் இச்சோதனை நடவடிக்கைகளில் பங்குபற்றினர்.

கண்காணிப்புக் குழுவின் மூலம் 32 உணவகங்கள் பார்வைக்குட்படுத்தப்பட்டு அவற்றுள் 23 உணவகங்களில் பாவனைக்குதவாத உணவுகள் கைப்பற்றப்பட்டன.

அதேவேளை 17 உணவகங்களுக்கெதிராக வழக்கு தொடர்வதற்கான நடவடிக்கைகளும்



மேற்கொள்ளப்பட்டன. மேலும் உணவகங்களில் உணவுப் பாதுகாப்பு முறைகள் தொடர்பான விழிப்புணர்வு, ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து இவ்வாறான செயற்பாடுகள் மூலம் சுகாதாரமான, பாதுகாப்பான உணவுகளை மக்களுக்கு எதிர்காலத்தில் கிடைக்கச்





செய்வதே சுகாதார பணிமனையின் நோக்கமாகும் என பணிப்பாளர் டொக்டர் இரா. முரளீஸ்வரன் தெரிவித்தார்.

# கிராமத்துக்குள் புகுந்த காட்டு யானைக் கூட்டம் விரட்டியடிப்பு

**மட்டக்களப்பு விசேட நிருபர்**



மட்டக்களப்பு போரதீவுப் பற்றுப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மண்டூர் பிரதான வீதியை ஊடறுத்து 35 காட்டு யானைகள் நேற்றுமுன்தினம் மாலை கிராமங்களுக்குள் உட்புகுந்துள்ளன. இவ்விடயம் குறித்து அப்பகுதி மக்கள் வெல்லாவெளியில் அமைந்துள்ள வனஜீவராசிகள் சுற்றுவட்டார காரியாலயத்துக்கு அறிவித்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள், சுமார் இரண்டு மணித்தியால பிரயத்தனத்திற்குப் பின்னர் அப்பகுதி பொதுமக்களின் ஒத்துழைப்புடன், காட்டு யானைக்கூட்டத்தை மீண்டும் வனப்பகுதிக்குள் விரட்டி அனுப்பி வைத்தனர்.

இதனால் மட்டக்களப்பு மண்டூர் பிரதான வீதியின் போக்குவரத்து சுமார் அரைமணி நேரம் தடைப்பட்டிருந்தது. மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்று பிரதேசத்தில் மிக நீண்டகாலமாக தொடர்ச்சியாக காட்டுயானைகளின் அட்டகாசங்களும், தொல்லைகளும், அதிகரித்த வண்ணமேயுள்ளன. காட்டுயானைகள் கிராமங்களுக்குள் உட்புகும் பகுதிகளை ஊடறுத்து யானைப் பாதுகாப்பு வேலைகளை அமைத்துத்தருமாறு அப்பகுதி மக்கள் நீண்டகாலமாக கோரிக்கை முன்வைத்து வருகின்றனர்.

# பொத்துவில் அறுகம்பை பிரதேசத்தில் அதிகளவான இந்திய சுற்றுலாப் பயணிகள்

**ஒலுவில் விசேட நிருபர்**

பொத்துவில் அறுகம்பை பிரதேசத்தில் நாளுக்கு நாள் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்து வருகின்றது.

அறுகம்பை பிரதேசத்திலுள்ள உல்லாச விடுதிகள் என்றும் இல்லாதவாறு முன்கூட்டி பதிவு செய்யப்பட்டுள்ளதாக விடுதி உரிமையாளர்கள. தெரிவித்துள்ளனர். டென்மார்க், இஸ்ரேல், அமெரிக்கா, யப்பான், நெதர்லாந்து, சுவீடன் போன்ற நாடுகளிலிருந்தும் அதிகமான வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர்.

சுற்றுலா பயணிகளின் வருகையையடுத்து முச்சக்கரவண்டி சாரதிகள், பழக்கடை வர்த்தகர்கள், சுற்றுலாத் தொண்டர்கள், உணவக உரிமையாளர்கள் மற்றும் சுற்றுலா வழிகாட்டிகள் ஆகியோர் நன்மையடைந்துள்ளனர்.

கடந்த 02 வருடங்களுக்கு முன்னர் சுற்றுலாத்துறை பாதிக்கப்பட்டுள்ளதால் சுய தொழிலில் ஈடுபட்டு வந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டிருந்தன.

அறுகம்பை பிரதேசத்தில் உணவுப்பொருட்களின் விலைகள் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதேவேளை, வார இறுதி நாட்களிலும் விடுமுறை நாட்களிலும் உள்நாட்டு உல்லாச பயணிகளின் வருகையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி



அதிகார சபை வெளியிட்டுள்ள தரவுகளுக்கமைய, இந்தியாவிலிருந்தே அதிகளவான சுற்றுலாப்பயணிகள் வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றன. அத்துடன், இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில், 12 இலட்சத்து 24,948 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


# ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்த ஜீ மஹராஜின் திருவுருவச் சிலை இன்று திறப்பு

**காரைதீவு குறுப் நிருபர்**

மட்டக்களப்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் மடாலயத்தின் முன்னாள் தலைவர் கர்மயோகி மாபெரும் துறவி ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்த ஜி மஹராஜ் இன் திருவுருவச் சிலை இன்று காலை 7 மணிக்கு கல்லடி நாவற்குடாவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

சுவாமி ஜீவனானந்த ஜீ நூற்றாண்டு விழாச் சபை நாவற்குடா இந்து கலாசார மண்டப முன்னால் உள்ள பிரதான வீதியில் நிறுவியுள்ள சிலையை இராமகிருஷ்ண மிஷன் கொழும்பு மூத்த துறவி முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ்வரானந்தா ஜீ இன்று காலை திறந்து வைக்கவுள்ளார்.

தஞ்சாவூர் இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி விமூர்த்தானந்த ஜீ மகராஜ், இலங்கை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்த ஜீ மகராஜ், மட்டக்களப்பு கல்லடி ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ், உதவி பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சுர்ச்சிதானந்த ஜீ மகராஜ் முன்னிலையில் இத்திறப்பு விழா நடைபெறவுள்ளது.



அதன் பின்னர் ஒரு மணி நேரம் சுவாமிகளின் நினைவு மீட்டல் நிகழ்வு கலாசார மண்டபத்தில் நடைபெறும் என நூற்றாண்டு விழா சபைச் செயலாளர் கண. வரதராஜன் தெரிவித்தார்.

# மாணவர்களின் பாதுகாப்பு கருதி சுற்றுமதில் அமைப்பு

**மூதூர் தினகரன் நிருபர்**

மூதூர் அல்ஹிதாய மகா வித்தியாலயத்தில் மாணவர்களின் பாதுகாப்பு கருதி அமைக்கப்பட வேண்டிய கொல்லனாற்று கரையோரமாக 300 அடி நீளமான புதிய சுற்றுமதில் அமைக்கப்படவுள்ளது.

பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழுவின் ஏற்பாட்டில் சுற்றுமதில் அமைக்கப்படவுள்ளது.

மேலும் மிக நீண்ட காலமாக கரையோர பாதுகாப்பு கருதி சுற்று மதில் அமைப்பதற்கான அவசியம் குறித்து பெற்றோர்கள்,பழைய மாணவர்கள், பொதுநல அமைப்புகள் மற்றும் நலன் விரும்பிகள் முன்வைத்த கோரிக்கைக்கமைவாக சுற்று மதில் அமைக்கப்படுவதற்கான பணிகள் தற்போது இடம்பெற்று வருவதாக அதிபர் எம்.எஸ்.ஹில்மி தெரிவித்தார்.

# ஜனாதிபதி தேர்தல் முன்னெடுப்புக்கான தோப்பூர் மத்திய குழுவினருடனான சந்திப்பு

**கிண்ணியா மத்திய நிருபர்**

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரமதாசவை வெற்றிபெறச் செய்வதற்கான தேர்தல் முன்னெடுப்புக்கள் தொடர்பான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தோப்பூர் மத்திய குழுவினருடனான சந்திப்பு கட்சியின் தேசிய அமைப்பாளர் எம். எஸ். தௌபீக் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களான றிபாஸ், ஆப்தீன் மற்றும் ஏனைய மத்திய குழு உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.





அகில இலங்கை தமிழ் மொழித்தின கிழக்கு மாகாண மட்ட போட்டிகள் கடந்த வியாழக்கிழமை கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையில் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார் தலைமையில் நடைபெற்றது. தனி நடிப்பு போட்டியில் பங்குபற்றிய மட்/பட்/துறைநீலாவணை மகா வித்தியாலய மாணவன் இ.வியூரேஸ் மாகாண மட்டத்தில் முதலிடத்தைப் பெற்று அதற்கான சான்றிதழை கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமாரிடமிருந்து பெற்றுக்கொண்டார். (படம்: துறைநீலாவணை நிருபர்)

# பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலய தீ மிதிப்பு சகல செயற்பாடுகளுக்குமான பெறுநராக பிரதேச செயலர் ராகுலநாயகி நியமனம்

## கல்முனை மாவட்ட நீதிமன்றத்தில் கட்டளை

**காரைதீவு குறுப் நிருபர்**

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலய வருடாந்த தீமிதிப்பு உற்சவ காலத்தில் நிதி நிர்வாகம் உட்பட சகல செயற்பாடுகளுக்குமான பெறுநராக(receiver ) நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி ராகுலநாயகி சஜிந்திரன் கல்முனை மாவட்ட நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்முனை மாவட்ட நீதிபதி ஏ.எல்.எம். றியால் கடந்த 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்ற முன் நகர்த்தல் மனு (motion) மீதான வழக்கில் இந்த நியமனத்தை கட்டளை ஆக்கி வெளியிட்டார்.

பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலயம் மற்றும் மாணிக்கப் பிள்ளையார் ஆலயம் தொடர்பான தலைவர் மற்றும் நிர்வாகம் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருக்கின்றது.

அதேவேளை, குறித்த ஆலயத்தின் புதிய தலைவர் மற்றும் நிர்வாகத்தை பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தி தெரிவு செய்யுமாறு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரால் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது .

குறித்த தீர்மானத்திற்கு எதிராக அதனை இடைநிறுத்துமாறு (injunction order) கோரி இராசலிங்கம் மதனகாந்த் உள்ளிட்ட 11 பேர் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

அந்த வழக்கின் எதிராளிகளாக சுந்தரலிங்கம் சுரேஷ், பிரதேச செயலாளர் ரி.அதிசயராஜ், அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம, சிவசிதம்பரம் ஈஸ்வரன் (பாபு) ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அதன்படி இந்த வழக்கின் கட்டளை கல்முனை மாவட்ட நீதிமன்றத்தில் எதிர்வரும் செப்டம்பர் 25ஆம் தேதி வழங்கப்படவிருந்தது.

இதற்கிடையில் , குறித்த கட்டளை காலப்பகுதிக்குள் குறித்த ஆலயத்தின் வருடாந்த தீமிதிப்பு வைபவம் இடம்பெறவிருப்பதால் இதனை நடாத்துவதற்கு உரிய நிர்வாகத்தை தெரிவு செய்து தர வேண்டும் என்று கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ், சட்டமா அதிபர் ஊடாக நகர்த்தல் மனு (motion) ஒன்றை கல்முனை மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த வாரம் சமர்ப்பித்திருந்தார். அதற்கு அமைவாக கடந்த 20ஆம் திகதி நீதிமன்றத்தில் நகர்த்தல் மனு மீதான வழக்கு மாவட்ட நீதிபதி ஏ.எல். எம். றியால் முன்னிலையில் இடம்பெற்றது .

அதன் போது எதிராளிகள் சார்பில் பிரபல சட்டத்தரணிகளான எஸ் எஸ்.அப்பாஸி மற்றும் ஏ.எல்.எம். கலீல் ஆகியோர் சமர்ப்பணம் செய்திருந்தனர்.

வழக்காளி சார்பில் சட்டத்தரணி ஏ. நதீர் சமர்ப்பணம் செய்தார்.

இவற்றை செவிமடுத்த நீதிபதி றியால் பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய வருடாந்த தீமிதிப்பு வைபவத்திற்கான நிதி நிர்வாகம் உள்ளிட்ட சகல செயல்பாடுகளையும் கவனிக்க, நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி ராகுலநாயகி சஜிந்திரனை பெறுநர் ஆக நியமித்து கட்டளை பிறப்பித்தார்.

அதன்படி எதிர்வரும் தீமிதிப்பு உற்சவத்திற்கான சகல செயல்பாடுகளையும் பிரதேச செயலாளர் இதை திருமதி ராகுல நாயகி மேற்கொள்வார். மேற்படி திரௌபதை அம்மன் ஆலய வரலாற்றில் ஆலய உற்சவத்தை பிரதேச செயலாளர் ஒருவர் சகல செயற்பாடுகளையும் மேற்கொள்வது இதுவே முதல் தடவை என்று சொல்லப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தல்

# மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 4,49,606 பேர் வாக்களிக்க தகுதி

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 4 இலட்சத்து 49 ஆயிரத்து 606 பேர் தகுதி பெற்றுள்ளதாக மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் அரசாங்க அதிபருமாகிய திருமதி. ஜஸ்டினா முரளிதரன் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்துள்ளார்.

மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

மாவட்டத்தின் மூன்று தேர்தல் தொகுதிகளான கல்குடா தொகுதியிலிருந்து 1 இலட்சத்து 34 ஆயிரத்து 104 பேரும், மட்டக்களப்பு தொகுதியிலிருந்து 2 இலட்சத்து 10 ஆயிரத்தி 293 பேரும், பட்டிருப்பு தொகுதியிலிருந்து 1 இலட்சத்து 05 ஆயிரத்து 289 பேரும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இதேவேளை இத்தொகுதிகளிலுள்ள வாக்காளர்கள் தமது வாக்குகளைப் பதிவு செய்வதற்காக 442 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இவற்றில் கல்குடா தொகுதியில் 123 வாக்குச் சாவடிகளும், மட்டக்களப்புத் தொகுதியில் 197 வாக்குச் சாவடிகளும், பட்டிருப்புத் தொகுதியில் 122 வாக்குச் சாவடிகளும் அமைக்கப்படவுள்ளன.

இதுதவிர தேர்தல் கடமையில் ஈடுபடும் அரச உத்தியோகத்தர்கள் தபால் மூலம் வாக்களிக்கும் பணிகள் எதிர்வரும் செப்டெம்பர் 4ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இதனடிப்படையில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், தேர்தல் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் திணைக்கள உத்தியோகத்தர்கள் 4ஆம் திகதி தபால் மூலம் வாக்களிக்கவுள்ளனர்.

மேலும் செப்டெம்பர் 5ஆம், 6ஆம் திகதிகளில் தேர்தல் கடமைகளில் ஈடுபடும் ஏனைய திணைக்கள அரச உத்தியோகத்தர்கள் தமது திணைக்களங்களில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்தினங்களில் வாக்களிக்க தவறும் அரச உத்தியோகத்தர்கள் எதிர்வரும் 11ஆம், 12ஆம் திகதிகளில் தத்தமது மாவட்ட தேர்தல் திணைக்களத்தில் வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு 13 ஆயிரத்து 448 பேர் விண்ணப்பித்திருந்தனர். இவர்களில் 13 ஆயிரத்து 116 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதுடன் 332 பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இம்மாவட்டத்தில் இதுவரை 11 தேர்தல் சட்டவிதி முறை மீறல்கள் பதிவாகியுள்ளதுடன் தேர்தல் பாதுகாப்புக்காக பொலிஸார் பல பகுதிகளிலும் பணிகளில் அமர்த்தப்பட்டுள்ளதாக மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் மேலும் தெரிவித்தார்.

# பொத்துவில் அல்–கலாம் மகா வித்தியாலயத்தில் வழிகாட்டல், ஆலோசனை பிரிவு திறப்பு

**அட்டாளைச்சேனை மத்திய நிருபர்**

அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலக நிர்வாகத்துக்குட்பட்ட பொத்துவில் அல்–கலாம் மகா வித்தியாலயத்தில் புதிய வழிகாட்டல் மற்றும் ஆலோசனை பிரிவு அண்மையில் வைபவரீதியாக திறந்துவைக்கப்பட்டது. அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ்வின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை ஆசிரிய ஆலோசகர் எம்.ஏ.தாஹிரின் ஆலோசனையில் இப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொத்துவில் அல்கலாம் மகா வித்தியாலய அதிபர் எம்.எல்.பிர்தௌஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.அப்துல் மஜீட், பொத்துவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர். எம்.ஏ.எம்.புகாரி, வழிகாட்டல் மற்றும் ஆலோசனை ஆசிரிய ஆலோசகர் எம்.ஏ.தாஹிர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் அதிதிகளாகக் கலந்து கொண்டு புதிய பிரிவை திறந்து வைத்தனர்.

புதிய வழிகாட்டல் மற்றும் ஆலோசனை அலகின் மூலம் பிரதேச மாணவர்கள் நன்மையடைவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. பாடசாலைகளில் மாணவர் இடைவிலகல் தற்காலத்தில் அதிகரித்துள்ளது.

இவ்வாறு கல்வியை இடைநடுவில் கைவிடும் மாணவர்களுக்குத் தேவையான வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளை வழங்கி அவர்களை மீண்டும் பாடசாலையுடன் இணைத்துக் கொள்வதற்கு இப்பிரிவு பெரும் வரப்பிரசாதமாக அமையும் என ஆசிரிய ஆலோசகர் எம்.ஏ.தாஹிர் குறிப்பிட்டார்.

# தேர்தலில் தமிழ் கட்சிகளின் நண்பர்கள் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு வழங்குவர்

## அமைச்சர் டக்ளஸ் நம்பிக்கை

**பருத்தித்துறை விசேட நிருபர்**



ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எனது நண்பர்களான சக தமிழ் கட்சிகளின் தலைவர்கள் ஆதரவு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை தனக்கிருப்பதாக, ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம், அபிவிருத்திக்காக நிதி வாங்கிய தமிழ் கட்சிகள், தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்துள்ள நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவார்களா என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர்,

நாடு பொருளாதார ரீதியில் சரிந்து கிடந்த போது யாரும் நாட்டை பொறுப்பேற்க முன்வராத நிலையில், தனியொருவராக நாட்டை பொறுப்பேற்று ஏனைய காட்சிகளுடன் இணைந்து நாட்டை முன்னோக்கி கொண்டு செல்கிறார்.

தேர்தல் அறிவிப்புக்கள் வெளியாகியபோதே, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில், ஈழ மக்கள் ஜனநாயக கட்சி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதாக கூறினோம்.

தற்போது அநேகமான தமிழ், சிங்கள, முஸ்லிம் கட்சிகள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கி வரும் நிலையில், எனது சக நண்பர்களான தமிழ் கட்சிகளும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் என நம்புகிறேன்.

சக தமிழ் கட்சிகள் அபிவிருத்தியை மேற்கொள்வதற்காக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் பல கோடி ரூபாய்களை பெற்றுக்கொண்டுள்ளமை அனைவருக்கும் தெரிந்த விடயம்.

தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கு, 13 ஆவது திருத்தம் ஆரம்ப புள்ளியாக அமைய வேண்டும் என வெளிப்படையாகவே எமது கட்சி கூறியது. இதேவேளை, தமிழ் கட்சிகள் பொது வேட்பாளர் என ஒருவரை நிறுத்தி தமிழ் மக்களை வாக்களிக்குமாறு கோரிக்கை விடுத்திருக்கிறார்கள்.

தமிழ் பொது வேட்பாளர் அரசியல்வாதிகளுக்கு நன்மை பயத்தாலும் தமிழ் மக்களுக்கு நன்மை பயக்காது என்பது தமிழ் பொதுவேட்பாளரை கொண்டுவந்தர்கள் நன்கறிவார்கள்.

தற்போதுள்ள சூழ்நிலையில் நாட்டை வழிநடத்தக்கூடிய ஆளுமை மிக்க தலைவராக ரணில் விக்கிரமசிங்கவே உள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார்.

# வடக்கின் உதயம்

## பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் சந்திரகுமாருக்கும் இடையே சந்திப்பு



பிரதமர் தினேஷ் குணவர்தனவை, சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமார் நேற்று (23) கொழும்பில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இச் சந்திப்பின்போது இனங்களுக்கிடையில் நம்பிக்கை, பரஸ்பரத் தன்மை, சம உரிமை கொண்ட அரசியல் தீர்வின் அவசியம், சம கால நிலவரங்கள் மற்றும் ஜனாதிபதி தேர்தல் பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளன.

இதன்போது, தமிழ் மக்களின் அரசியல், அன்றாட பிரச்சினைகள், நிலம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக மகஜர் ஒன்றும் பிரதமரிடம் கையளிக்கப்பட்டதாக சமத்துவக் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.



மன்னார், கள்ளியடி அருள்மிகு ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேக பெருவிழா நேற்று முன்தினம் (22) பெருமளவிலான பக்தர்களுடன் வெகு சிறப்பாக நடைபெற்றபோது... (படம்: மன்னார் குறூப் நிருபர்)

# சுமந்திரன், சாணக்கியன், சிவஞானம் போன்றோரே தமிழ் பொது வேட்பாளரை எதிர்க்கின்றனர்

## சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு



சுமந்திரன், சாணக்கியன், சிவஞானம் போன்ற ஒரு சிலரே தமிழ் பொது வேட்பாளரை எதிர்ப்பதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் பொது வேட்பாளருக்கு ஆதரவாக பிரச்சாரத்தை ஆரம்பித்து வைத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே இதனை தெரிவித்த அவர்,

சுமந்திரன், சாணக்கியன், சிவஞானம் போன்ற ஒரு சிலரைத் தவிர கட்சியின் ஏனைய மேல் மட்டங்களும், ஏனைய கட்சியின் கீழ் மட்ட தொண்டர்களும் பொது வேட்பாளர் வெற்றி பெற வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள். அவர்கள் களத்தில் இறங்கி பணிபுரிவதற்கும் தயாராக இருக்கின்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் தமிழரசுக்கட்சியினுடைய இளைஞர் அணியைச் சேர்ந்த பலரை சந்தித்து நான் பேசியிருக்கின்றேன். இதனை முன்னெடுக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றார்கள். கிளிநொச்சியைச் சேர்ந்த சிறிதரனும் பொது வேட்பாளரை வாழ்த்தியிருக்கிறார். ஏற்கனவே அதற்கான கூட்டங்களும் கிளிநொச்சியில் கூடப்பட்டிருக்கிறது.

அத்துடன், தலைவராக இருக்கின்ற சேனாதிராஜாவும் இதனை வரவேற்றிருக்கின்றார். ஆகவே தமிழரசுக் கட்சியினுடைய பெரும்பான்மையானோர் இதனை ஆதரித்து வரவேற்றிருக்கிறார்கள்.

ஒரு சிலர் தங்களுடைய சொந்தக் காரணங்களுக்காக இவ்வாறு எதிர்க்கின்றனர். குறிப்பாக சொல்லப் போனால், இலங்கை அரசாங்கம் அங்கு அபிவிருத்திக்காக தனக்கு கொடுத்ததாக சாணக்கியன் கூறியிருக்கின்றார்.

ஆகவே, வாங்கிய பணத்துக்கு பேச வேண்டும் என்ற நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என அவர்கள் யோசித்தால், அதற்காக அவர்கள் சில நல்ல முடிவுகளை எடுப்பார்கள் என நம்புகிறேன்.

கடைசி நேரத்தில் அவர்கள் என்ன முடிவு எடுப்பார்களோ என்று எனக்கு தெரியாது. நிச்சயமாக தமிழ்ப் பொது வேட்பாளருக்கு எதிராக இவர்கள் முடிவு எடுப்பார்களாக இருந்தால் அது தமிழ்த் தேசியத்துக்கு எதிரான முடிவாகத்தான் இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். தெரிவித்தார்.

# கட்ட வேலையில் ஈடுபட்ட தொழிலாளர் சடலமாக மீட்பு



கட்டடவேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த தொழிலாளர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவமொன்று கிளிநொச்சி இரத்தினபுரம் பகுதியில் நேற்று (23) காலை இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் ஊர்காவற்துறையைச் சேர்ந்த 34 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான சின்னான்டி பரமேஸ்வரன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கட்டடத்தின் இரண்டாம் மாடியில் வெல்டிங் வேலை செய்து கொண்டிருந்த நிலையில், இவர் உயிரிழந்துள்ளதாக, அவருடன் வேலைபார்த்துக் கொண்டிருந்த மற்றைய நபர் பொலிஸாருக்கு வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# காய்ச்சலினால் 1 வயது குழந்தை உயிரிழப்பு

**நாகர்கோவில் விஷேட நிருபர்**

இரண்டு நாட்களாக காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருந்த ஒரு வயதுடைய பெண் குழந்தையொன்று உயிரிழந்துள்ள சோக சம்பவமொன்று யாழ்.போதனா வைத்தியசாலையில் பதிவாகியுள்ளது.

தம்பாட்டி, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த பிரேமநாத் நிகரிகா என்ற பெண் குழந்தையொன்றே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 20 ஆம் திகதி காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருந்த குழந்தை மறுநாள் 21 ஆம் திகதி காலை 5:00 மணிளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில், அன்றிரவு சிகிச்சை பலனின்றி குழந்தை உயிரிழந்துள்ளது. இந்நிலையில், குழந்தையின் மரணம் தொடர்பாக, யாழ்.போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். விஜயம் செய்துள்ள தமிழகத்தின் திராவிடர் கழகத் தலைவர் வீரமணி

இந்தியாவின் தமிழ்நாட்டில் உள்ள கட்சியான திராவிடர் கழகத்தின் தலைவர் கி.வீரமணி நேற்று(23)யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளார்.

இவரை, இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா மற்றும் அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளையினர் பொன்னாடை போர்த்தி கௌரவித்திருந்தனர்.

இலங்கை பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக பதவி வகித்த முதலாவது தமிழர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 97ஆவது பிறந்தநாள் நினைவுப் பேருரை இன்று (24 பிற்பகல் 3 மணிக்கு யாழ். நகரில் அமைந்துள்ள றிம்மர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளையின் ஏற்பாட்டில் ஓய்வுநிலை மேல்நீதிமன்ற நீதிபதி இ.த. விக்கினராசா தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில், கி.வீரமணி நினைவுப் பேருரை நிகழ்த்தவுள்ளார்.

அத்தோடு, சிறப்புரையினை தென்னிந்தியத் திருச்சபையின் ஆயர் கலாநிதி வி.பத்மதயாளன் ஆற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# யாழில் தேர்தல் கடமைகளுக்காக சுமார் 8,232 அரச உத்தியோகத்தர்

**கோப்பாய் குறூப் நிருபர்**



யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியில், ஜனாதிபதி தேர்தலில் சுமார் 8 ஆயிரத்து 232 அரச உத்தியோகத்தர் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக யாழ். மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் A.C அமல்ராஜ் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இதனை தெரிவித்த அவர்,

ஜனாதிபதி தேர்தலில் வாக்காளர்களின் வாக்களிப்பு பாதுகாக்கப்பட வேண்டும். ஜனாதிபதி தேர்தல் நீதியானதும் நியாயமானதுமாக இடம்பெறுவதற்கு, தேர்தல் கடமைகளில் ஈடுபடுகின்ற அரச உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம சேவையாளர்களின் பங்கும் அவசியமாகும்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 8 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக வாக்காளர் அட்டை விநியோகம் இடம்பெறவுள்ளதோடு இரண்டாம் திகதி முதல் வாக்காளர் அட்டை விநியோகத்துக்கான ஏற்பாடுகளும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்காளர் அட்டை விநியோகம் செய்யும் இறுதித் தினமாக செப்டெம்பர் 14ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், வாக்களிப்பு தினமான செப்டம்பர் 21ஆம் திகதி வரை வாக்காளர் அட்டை கிடைக்காதவர்கள், தமது பகுதிகளிலுள்ள தபால் நிலையங்களில் வாக்காளர் அட்டையை பெற்று வாக்களிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மன்னாரில் டெங்கு நோய் பரவலை கட்டுப்பட்டுத்த துரித நடவடிக்கை

## மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன்

**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண காலநிலையினால், டெங்கு பரவல் அதிகரித்துள்ளதாகவும், டெங்கு நுளம்பின் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வருகின்ற நிலையில் அவற்றை கட்டுப்படுத்துவது தொடர்பாக, திணைக்கள தலைவர்களை ஒன்றிணைத்து நேற்று (23) காலை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட டெங்கு கட்டுப்பாட்டு குழுவின் அவசர கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

மன்னார் நகரம் மற்றும் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள சில கிராமங்களில் டெங்கு நோய் பரவல் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனை கட்டுப்படுத்துவது தொடர்பாக சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, டெங்கு நுளம்பின் பரவல் அடையாளம் காணப்பட்டுள்ள பகுதிகளுக்குச் சென்று பரிசோதனைகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், கிராம மட்டத்திலுள்ள சுகாதார மேம்பாட்டுக் குழு ஊடாக, டெங்கு நுளம்பின் பரவல் காணப்படும் இடங்களை அடையாளங்கண்டு அதனை கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் பிரதேசச் செயலாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், வைத்தியர்கள், பொது சுகாதார பரிசோதர்கள், பொலிஸார், கடற்படை மற்றும் சில திணைக்கள தலைவர்களும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழர் தரப்பு பொது வேட்பாளரின் நமக்காக நாம் பிரசாரம் ஆரம்பம்

**(யாழ். விசேட நிருபர்)**

ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கியுள்ள தமிழ் பொது வேட்பாளரின் “நமக்காக நாம்” தேர்தல் பிரசாரப் பயணம் நேற்று (23) ஆரம்பமானது.

யாழ்ப்பாணம், சக்கோட்டை கொடிமுனையிலிருந்து நேற்று வெள்ளிக்கிழமை (23) காலை 09 மணிக்கு பிரசாரப் பயணம் ஆரம்பமாகியது.

தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரனின் பிரசாரப் பயணம் பொலிகண்டி கிழக்கு, பொலிகண்டி மேற்கு, வல்வெட்டித்துறை, ஆதிகோவிலடி, தொண்டைமானாறு, வளலாய், பலாலி, தையிட்டி, காங்கேசன்துறை ஆகிய இடங்களின் ஊடாக நகர்ந்து சென்றது. தமிழர் தாயகத்தின் எட்டு மாவட்டங்களுக்குமாக தொடர்ந்து நடைபெறவிருக்கும் இந்த பிரசாரப் பயணத்தின் மேலதிக விபரங்கள் தொடர்ந்து அறிவிக்கப்படும் எனவும், வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்கு மக்களின் அழைப்பின் பேரிலான பிரசாரப்பணிகளும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# நல்லூர் மகோற்சவ திருவிழாவில் இரத்த தான முகாமுக்கு ஏற்பாடு

**யாழ் . விசேட நிருபர்**

நல்லூர் மகோற்சவ திருவிழாவை முன்னிட்டு ஆலய சூழலில் இரத்த தான முகாமுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நல்லூர் ஆலயத்துக்கு அருகிலுள்ள யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் இந்த இரத்த தான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, எதிர்வரும் 31ஆம் திகதி சப்பர திருவிழா அன்று, மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரை இந்த இரத்த தான முகாம் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து, மறுநாள் முதலாம் திகதி தேர்த்திருவிழா அன்றும் 02ஆம் திகதி தீர்த்த திருவிழா அன்றும் காலை 08 மணி முதல் இரவு 08 மணி வரையிலும் இரத்த தானம் வழங்க முடியும்.

மேலும், 03 ஆம் திகதி பூங்காவன திருவிழா அன்று மாலை 04 மணி முதல் இரவு 08 மணி வரை இரத்த தானம் வழங்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய ஆசிய மன்றம் 2024:

# இணைப்பு மற்றும் பொருளாதார ஈடுபாட்டுக்கு முன்னுரிமையளித்தல்




இலங்கையின் வெளிவிவகார அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட மத்திய ஆசிய மன்றம் 2024, அண்மையில் கொழும்பிலுள்ள கிரான்பெல் ஹோட்டலில் நடைபெற்றது. இதில் புவிசார் அரசியல் வரைபடவியலாளருடன் இணைந்து, இலங்கைக்கும் மத்திய ஆசியாவுக்கும் இடையிலான எதிர்கால ஒத்துழைப்புக்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்தது. புவிசார் அரசியல் மற்றும் புவிபொருளாதார முக்கியத்துவம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

கசகஸ்தான், கிர்கிஸ்தான் மற்றும் துர்க்மெனிஸ்தான் ஆகிய நாடுகளுடனான வெளியுறவு அலுவலக ஆலோசனைகளின் முடிவு மற்றும் அஸ்தானா, கசகஸ்தான் மற்றும் கொழும்பில் பரஸ்பர குடியுரிமை இராஜதந்திர தூதரகங்களை நிறுவுவதற்கான முடிவு ஆகியவற்றின் மூலம் மத்திய ஆசிய பிராந்தியத்தில் உள்ள நாடுகளுடனான இலங்கையின் ஈடுபாடுகள் அண்மைக்காலத்தில் கணிசமான முன்னேற்றத்தை அடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

பொருளாதார இராஜதந்திரத்தில் குறிப்பிட்ட கவனம் செலுத்தி மத்திய ஆசிய பிராந்தியத்தில் இலங்கைக்கான வளர்ந்து வரும் வாய்ப்புகளை மன்றம் ஆராய்ந்தது. கலந்துரையாடலின் முடிவுகள் பிராந்தியத்துடனான எதிர்கால ஈடுபாடுகளை வளப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைக்கும் மத்திய ஆசியாவிற்கும் இடையே சிறந்த தொடர்பை மேம்படுத்துதல், வர்த்தகத்தை விரிவுபடுத்துதல் மற்றும் பல்வகைப்படுத்துதல், சுற்றுச்சூழல், சுற்றுலா மற்றும் விளையாட்டு போன்ற துறைகளில் ஒருங்கிணைந்து செயல்படுதல் மற்றும் ஏற்கனவே தொடங்கியுள்ள மக்களிடையேயான தொடர்புகளை கட்டியெழுப்புதல் ஆகியவற்றின் முக்கியத்துவம் அடையாளம் இதன்போது காணப்பட்டது.


மத்திய ஆசிய நாடுகளுடன் ஜவுளி, எரிசக்தி, சுற்றுலா, விவசாயம், தகவல் தொழில்நுட்பத் துறை, கல்வி, உணவு மற்றும் பானங்கள், தேநீர், ரத்தினங்கள் மற்றும் நகைகள், போக்குவரத்து மற்றும் தளவாடங்கள் மற்றும் ஆயுர்வேதம் மற்றும் ஆரோக்கிய பொருட்கள் போன்ற பல துறைகளில் பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் விவாதிக்கப்பட்டன. மத்திய ஆசியாவில் LOLC இன் இலங்கையின் முன்னோடி முதலீட்டின் வெற்றிக் கதை, நிதிச் சேவைத் துறையில், மத்திய ஆசிய சந்தையில் நுழைவதற்கும், இதுவரை ஆராயப்படாத ஒரு பிராந்தியத்தில் போட்டி வணிகத்தை உருவாக்குவதற்கும் பயனுள்ள நுண்ணறிவுகளை வழங்கியது.

ஆசியாவில் அமைதி, பாதுகாப்பு, ஸ்திரத்தன்மை மற்றும் ஒத்துழைப்பை நோக்கிய மத்திய ஆசியாவின் சொந்த முயற்சியான ஆசியாவில் தொடர்புகள் மற்றும் நம்பிக்கையை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளுக்கான மாநாட்டில் (CICA) இலங்கையின் பங்கு குறித்தும் மன்றம் கவனம் செலுத்தியது .

குழுவாளர்கள், நடுவர்கள் மற்றும் பங்கேற்பாளர்களில் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன மற்றும் வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள், கொழும்பை தளமாகக் கொண்ட இராஜதந்திர தூதரகங்களின் தலைவர்கள் மற்றும் இராஜதந்திரப் படைகளின் உறுப்பினர்கள், மத்திய ஆசிய பிராந்திய நிபுணர்கள், கல்வியாளர்கள், சிந்தனையாளர்கள் மற்றும் புவிசார் அரசியலில் இருந்து கார்ட்டோகிராபர் மற்றும் வணிகத் தலைவர்கள். பிராந்தியத்தின் சாத்தியங்கள் மற்றும் இலங்கையுடனான ஒத்துழைப்பு குறித்து பெறுமதிமிக்க நுண்ணறிவுகள் பகிரப்பட்டன.

இந்த மன்றத்தின் முடிவுகள், மத்திய ஆசிய பிராந்தியத்துடன் ஆழமான ஈடுபாட்டை இலங்கை எதிர்பார்க்கும் எதிர்கால முயற்சிகளுக்கு வழிகாட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நகர்வலம்



# நாகூர்கனியின் மாநபி பற்றிய ஆய்வுநூல் வெளியீடு



தமிழ் எழுத்துத்துறையில் ஆறு தசாப்தங்களை நிறைவு செய்த சத்திய எழுத்தாளர் கலாபூஷணம் எஸ்.ஐ. நாகூர்கனி ஆய்வு செய்த மாநபி பற்றிய 'மாநபி பேசாத மௌன மொழி தமிழ்' எனும் நூலின் வெளியீட்டு விழா, எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு கொழும்பு 7, தர்மபால மாவத்தை, ஜே.ஆர். ஜயவர்தன நிலைய மண்டபத்தில் முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என். எம்.அமீன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பேராசிரியர் எம். எஸ்.எம். அனஸ் சிறப்புரையாற்றுவார். வகவத் தலைவர் நஜ்முல் ஹுசைன் வாழ்த்துரை நிகழ்த்த, சந்தக்கவிமணி கிண்ணியா அமீர் அலி, கவிஞர் வாழைத்தோட்டம் எம். வஸீர் ஆகியோர் வாழ்த்துக் கவி பாடுவர். டீ.எஸ்.சேனநாயக்க கல்லூரி ஆசிரியர் இர்ஷாத் ஹுசைன் வரவேற்புரை வழங்குவார். நூலாசிரியர் ஏற்புரையாற்ற, நன்றியுரையை டொக்டர். ருஸைகா கனி நிகழ்த்துவார். நிகழ்ச்சிகளை வகவச் செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் தொகுத்து வழங்குவார். இந்நிகழ்வுக்கு அனைவரும் வருகை தந்து சிறப்பிக்கும்படி ஏற்பாட்டுக்குழு அன்போடு அழைக்கின்றது.

தமிழ் இலக்கிய சிந்தனைகளையும், செம்மல் நபியையும் இணைத்து செய்யப்பட்ட ஆய்வு நூல் இது என்பது குறிப்பிடத்தக்கது.



**கதிரியக்க சிகிச்சை துறையில் சிறந்த கல்விக்கான தங்கப்பதக்கத்தை பெற்று ஜெனரல் சர்ஜோன் கொத்தலாவல இலங்கை பாதுகாப்பு பல்கலைக் கழகத்திற்கு சுகாதாரத்துறையுடன் தொடர்புடைய அறிவியல் விரிவுரையாளராக மட்டக்களப்பு களுதாவளை பிரதேசத்தைச் சேர்ந்த தவராசாதர்ஷனாந் என்ற மாணவன் நியமிக்கப்பட்டுள்ளார்.**

***(படம் மண்டூர் தினகரன் நிருபர்)***

# மொனராகலை விபத்தில் ஒருவர் பலி; மூவர் படுகாயம்



மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கர வண்டியும் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

வெல்லவாய மொனராகலை பிரதான வீதியில் புத்தல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெல்வத்த பிரதேசத்தில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 23 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார். விபத்தின் போது மோட்டார் சைக்கிளிலும் மற்றும் துவிச்சக்கர வண்டியிலும் இருவர் பயணித்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் புத்தல பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், ஆபத்தான நிலையில் உள்ள துவிச்சக்கர வண்டியில் பயணித்த இருவரும் மேலதிக சிகிச்சைக்காக மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பான விசாரணைகளை புத்தள பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சுற்றுலா படகுகள் நேருக்கு நேர் மோதி விபத்து

பெந்தர ஆற்றில் இரண்டு சுற்றுலா படகுகள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் காணாமல் போயுள்ளனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் அளுத்கமவில் உள்ள சுற்றுலா ஹோட்டலொன்றில் பணி முடிந்து ஆட்களை ஏற்றிச் சென்ற படகும் பெந்தர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுற்றுலாப் படகுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளன.

பெந்தர சுற்றுலா விடுதியொன்றில் இருந்த இருவர் விபத்தில் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அவர்களின் அடையாளம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காணாமல் போனவர்களைக் கண்டறிவதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், சம்பவம் தொடர்பில் கடற்படையினருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் அளுத்கம மற்றும் பெந்தர பொலிஸ் நிலையங்கள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன.

# கற்பிட்டியில் தொழில் வழிகாட்டல் ஆலோசனை கற்கைநெறி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

**(புத்தளம் தினகரன் நிருபர்)**



கல்வி அமைச்சின் ஆலோசனைக்கமைய கற்பிட்டி பிரதேச செயலகத்தின் நெறிப்படுத்தலின் கீழ் கடந்த மூன்று மாதகாலமாக பள்ளிவாசல்துறை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற தொழில் வழிகாட்டல் ஆலோசனை கற்கை நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கற்பிட்டி பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுகள் பள்ளிவாசல் துறை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் எம்.எச்.யூ.பரீதா தலைமையில் நடைபெற்றன.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கற்பிட்டி பிரதேச செயலாளர் ஜே.எம்.சமில இந்திக ஜயசிங்க மற்றும் விசேட அதிதியாக திறன் அபிவிருத்தி மாவட்ட இணைப்பாளர் பீ. காமினி உதயகுமார ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மாணவர் தொழில் கல்வி சம்பந்தமான அறிவை மேம்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட இக்கற்கை நெறி ஆங்கிலக் கல்வி, தகவல் தொழில் நுட்பம் மற்றும் தொழில் வழிகாட்டல் ஆலோசனை என்பன உள்ளடக்கப்பட்டு இலங்கை முழுவதும் உள்ள பிரதேச செயலகங்களுக்கு ஒரு பாடசாலை வீதம் 299 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு மேற்படி தொழில் வழிகாட்டல் ஆலோசனை கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டது.

அதன்படி கற்பிட்டி பிரதேச செயலக பிரிவில் பள்ளிவாசல் துறை முஸ்லிம் மகா வித்தியாலயம் தெரிவு செய்யப்பட்டு கடந்த மூன்று மாத கால பயிற்சி நெறியை பூர்த்தி செய்த முதலாவது தொகுதி மாணவர்களான சுமார் 100 பேருக்கு நேற்று சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டதாக இக்கற்கை நெறியின் கற்பிட்டி பிரதேச செயலக இணைப்பாளர் எம். எஸ். எம்.அஸ்லம் தெரிவித்தார்.

மலைச்சாரல்



நிலையான சமாதானம்

# மலையக சமூகத்தின் மேம்பாடுகள் தொடர்பாக தேசிய சமாதானப் பேரவையின் வேலைத்திட்டம்



**(அக்குறணை குறூப் நிருபர்)**

'நிலையான சமாதானம்' தொடர்பாக மலையக சமூகத்தின் வலப்பனை பிரதேச மக்களது கருத்தினை கேட்டறியும் வேலைத் திட்டமொன்று, இலங்கை தேசிய சமாதானப் பேரவையினால் நடத்தப்பட்டது. இந்த வேலைதிட்டமானது, வலப்பனை ஒஸ்லீன் மண்டபத்தில் நேற்று முன்தினம் (22) நடத்தப்பட்டது.

இதன்போது, மலையக சமூகத்தின் பொது சேவைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய மேன்பாடுகள் தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்களும் பகிர்ந்துகொள்ளப்பட்டன.

இதில் கண்டி மாவட்ட நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் இரேஷா உதயனி உட்பட பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இரத்தினபுரி மாவட்டத்தில் 923,736 பேர் வாக்களிக்க தகுதி

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

ஜனாதிபதி தேர்தலில் இரத்தினபுரி மாவட்டத்தில் இருந்து 923,736 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதாக இரத்தினபுரி மாவட்ட தெரிவித்தாட்சி அலுவலரும் இரத்தினபுரி மாவட்டச் செயலாளருமான வசந்த குணரத்ன தெரிவித்தார்.

நேற்று (23) ஊடகங்களிடம் கருத்து தெரிவித்தபோது இதனை தெரிவித்த அவர், கடந்த 2019 ஆண்டின் வாக்காளர் இடாப்பு எண்ணிக்கையை விட இவ்வாண்டு 58 ஆயிரத்து 758 வாக்காளர்கள் அதிகமாகவுள்ளனர்.

அதன்படி, இரத்தினபுரி மாவட்ட தபால் மூலம் வாக்களிப்பதற்கு 32 ஆயிரத்து 530 பேர் தகுபெற்றுள்ளனர். இது 2019 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் இருந்த எண்ணிக்கையை விட 2,815 அதிகமாகும்.

இரத்தினபுரி மாவட்டத்தில் 8 தேர்தல் தொகுதிகள் காணப்படுகின்றன. அவற்றில், இரத்தினபுரி 136,822 பேரும், பலாங்கொடை 122,811 பேரும் கொலன்ன தொகுதியில் 162,266 பேரும் இறக்குவானையில் 117,140 பேரும், நிவித்திகல தொகுதியில் 109,133 பேரும், பெல்மதுளை தொகுதியில் 96,604 பேரும் எஹலியகொடையில் 107,257 பேரும் கலவானயில் 71,703 பேரும் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## லொறி விபத்தில் சாரதி காயம்

ஹப்புத்தளை வியாரகலை பகுதியில் லொறி ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் லொறியின் சாரதி காமடைந்துள்ளதாக ஹப்புத்தளை பொலிஸார் தெரிவித்தனர் .

ஹப்புத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பதுளை கொழும்பு பிரதான வீதியில் ஹப்புத்தளைக்கும் பெரகலைக்கும் இடைப்பட்ட பகுதியில் நேற்று (23) அதிகாலை 3 மணியளவில் இவ்விபத்து இடம் பெற்றுள்ளது. ஹாலிஎல பகுதியிலிருந்து மீரிகம பயணித்துக் கொண்டிருக்கையில் குறித்த லொறி இவ்வாறு குடைசாய்ந்துள்ளது.

# மனைவியை கொலை செய்த கணவன் தற்கொலை

4 பிள்ளைகளும் அநாதை; நிவித்திகலயில் சம்பவம்


**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

தனது மனைவியையும் மகனையும் வெட்டிக் காயப்படுத்திய கணவன் தூக்கிட்டு தற்கொலை செய்துக்கொண்டுள்ள சம்பவமொன்று இரத்தினபுரி நிவித்திகல தேல பகுதியில் நேற்று முன் தினம் (22) பதிவாகியுள்ளது. சம்பவத்தில் 39 வயதுடைய மனைவி உயிரிழந்துள்ளதுடன், 18 வயதான மகன் காயமடைந்த நிலையில் இரத்தினபுரி அரச வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கணவன் மனைவிக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றியதில், 40 வயதுடைய கணவன் தனது மனைவி மற்றும் மகனை கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார். இதில் மனைவி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மகன் உட்பட இவர்களுக்கு நான்கு பிள்ளைகள் இருப்பதாகவும், அவர்கள் தற்போது தங்களது உறவினர்களின் வீடுகளில் தங்கியிருப்பதாகவும் தெரிவித்த நிவித்திகல பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வு நாடகம்



**(புசல்லாவை தினகரன் நிருபர்)**


சிறுவர் உரிமைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக, தேசிய சிறுவர் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் பூண்டுலோயா பகுதிக்கு விஜயம் செய்துள்ளனர்.

இதன்போது, சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வு நாடகம் மற்றும் நடன நிகழ்ச்சிகளையும் நடத்தியிருந்தனர். இந்நிகழ்வு நேற்றுமுன்தினம் (22) டன்சினன் தோட்ட வைத்தியசாலை வெளியரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில், நாடக பயிற்றுவிப்பாளர் மலையக வாசுதேவன் உட்பட அதிகாரிகள் மற்றும் பங்குபற்றுவிப்பாளர்கள், சிறுவர்கள் பொதுமக்கள் என பலர் கலந்துக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கண்டி எசல பெரஹராவில்

# 20 தொன் பிளாஸ்டிக் கழிவுகளுடன் யானைகளின் 200 தொன் கழிவுகள்

**(வத்துகாமம் நிருபர்)**

இம்முறை கண்டி எசல பெரஹராவில் சுமார் 20 தொன் பிளாஸ்டிக் கழிவுகளும் யானைகளினால் 200 தொன் திண்மக் கழிவுகளும் அகற்றப்பட்டுள்ளதாக கண்டி மாநகர சபையின் திண்மக்கழிவுப்பிரிவின் பிரதானி நாமல் திசாநாயக்கா தெரிவித்தார்.

இது சுற்றுச்சூழல் தொடர்பாக பொதுமக்களின் கவனக் குறைவை எடுத்துக் காட்டுவதாக சுட்டிக்காட்டிய அவர், மேலும் தெரிவிக்கையில்,

வரலாற்றுப் சிறப்புமிக்க கண்டிப் எசல பெரஹராவைப் பார்வையிட வந்தவர்களால் 20 தொன் பிளாஸ்டிக் கழிவுப் பொருட்களும் யானைகளின் உணவான கைவிடப்பட்ட 200 தொன் திண்மக் கழிவுகளும் அகற்றப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் நடைபெற்ற பெரஹராவில் இம்முறையே அதிகளவிலான கழிவுகள் சேர்ந்துள்ளன.

இக் கழிவுகளில் பொலித்தீன் கடதாசி மற்றும் உணவுப் பொருட்கள் சுற்றப்பட்ட பொலித்தீன் கடதாசிகள் அடங்குவதுடன், இது எடை அளவில் 20 தொன்னாக இருந்தாலும் கன அளவில் மிக அதிகமாகும். இதேவேளை, யானைகளுக்காக கொண்டு வரப்பட்ட உணவுகளான மரக்கிளைகள் போன்ற கழிவுகளும், யானைகள் வெளியேற்றிய மலக் கழிவுகளும் சுமார் 200 தொன்கள் அளவில் காணப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### மன்னர் அப்துல் அஸீஸ் 44வது சர்வதேச குர்ஆன் மனனப் போட்டி:

# மாபெரும் பரிசளிப்புடன் மக்காவில் நிறைவு



சவுதி அரேபியாவின் மறைந்த மன்னர் அப்துல் அஸீஸின் பெயரில் வருடாவருடம் நடாத்தப்படும் சர்வதேச அல் குர்ஆன் மனனப்போட்டி இம்முறை 44 வது தடவையாவும் புனித மக்காவில் நடாத்தப்பட்டுள்ளது. கடந்த 09 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை இப்போட்டி நடாத்தப்பட்டது. போட்டியின் நிறைவில் வெற்றி பெற்றவர்களுக்கு மிகப் பெறுமதியான பணப்பரிசில்களும் சான்றிதழ்களும் நினைவுச் சின்னங்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. இதன் நிமித்தம் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் பரிசளிப்பு விழா புனித மக்கா நகரில் கடந்த 21 ஆம் திகதி வெகு விமர்சையாக நடைபெற்றது.

இரு புனித பள்ளிவாசல்களின் பாதுகாவலரும் சவுதி அரேபிய மன்னருமான மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத்தின் நேரடி கண்காணிப்பில் புனித மக்காவின் துணை கவர்னரும் இளவரசருமான ஸஊத் பின் மிஷ்அல் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத் மற்றும் இஸ்லாமிய விவகார அழைப்பு மற்றும் வழிகாட்டல்கள் அமைச்சர் கலாநிதி அப்துல் லதீப் அப்துல் அஸீஸ் ஆல் ஷைக் ஆகியோரின் தலைமையில் இவ்விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

இலங்கை உட்பட உலகின் 123 நாடுகளில் இருந்து 174 ஹாபிழ்கள் (அல் குர்ஆனை மனனம் செய்தவர்கள்) இப்போட்டியில் பங்குபற்றினர். அவர்கள் அனைவருக்கும் இரு வழி விமான டிக்கட்டுகள், சகல வசதிகளுடனான தங்குமிட மற்றும் உணவு வசதிகள், போக்குவரத்து வசதிகள் அனைத்தும் சவுதி அரேபியாவினால் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டன. அத்தோடு இப்போட்டியில் பங்குபற்றியவர்கள் புனித உம்ரா கடமையை மேற்கொள்ளவும் சவுதியிலுள்ள புனித ஸ்தலங்களை தரிசிக்கவும் வாய்ப்பளிக்கப்பட்டன. குறிப்பாக மதீனாவிலுள்ள மஸ்ஜிதுன் நபவியில் தொழவும் முழு உலகுக்கும் அல் குர்ஆனை விநியோகித்து வரும் மறைந்த மன்னர் பஹ்த் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத்தின் பெயரிலான மதீனா அல் குர்ஆன் அச்சகத்தைப் பார்வையிடவும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டன.

குறிப்பாக இப்போட்டியில் வெற்றி பெற்ற போட்டியாளர்களுக்கு மிகப் பெறுமதியான பணப்பரிசில்களும் வெற்றி பெறாத போட்டியாளர்களுக்கு பெறுமதியான ஆறுதல் பரிசில்களும் கூட வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இப்போட்டியில் வெற்றியீட்டிய ஹாபிழ்களின் அழகிய கிராஅத் ஓதல்களோடு பரிசளிப்பு விழா 21 ஆம் திகதி ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து இப்போட்டியின் நோக்கம், கடந்த 44 தடவைகள் இப்போட்டி நடாத்தப்பட்டமை, இப்போட்டி கடந்து வந்த பாதை, இதன் நிமித்தம் சவுதி ஆட்சியாளர்கள் அளித்துவரும் உதவிகள், ஒத்துழைப்புக்கள் என்பன தொடர்பில் இவவிழாவின் போது தெளிவுபடுத்தப்பட்டன.

குறிப்பாக மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத்தும் பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத்தும் இஸ்லாமிய விவகார அழைப்பு மற்றும் வழிகாட்டல்கள் அமைச்சர் கலாநிதி அப்துல் லதீப் அப்துல் அஸீஸ் ஆல் ஷைக்கும் சவுதி அரசாங்கமும் அளித்துவரும் உதவி, ஒத்துழைப்புக்கள் மற்றும் சிறப்பான ஏற்பாடுகள் குறித்தும் தெளிவுபடுத்தும் காணொளிகள் போட்டியாளர்களும் பார்வையாளர்களும் பார்வையிடவென காண்பிக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து அமைச்சர் கலாநிதி அப்துல் லதீப் அப்துல் அஸீஸ் ஆல் ஷைக் விழாவுக்கு வருகை தந்த மக்காவின் துணை கவர்னரும் இளவரசருமான ஸஊத் பின் மிஷ்அல் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத்தையும் போட்டியில் வெற்றியீட்டியவர்களையும் பார்வையாளர்களையும் வரவேற்றார்.

இவ்விழாவில் உரையாற்றிய அமைச்சர் கலாநிதி அப்துல் லதீப் அப்துல் அஸீஸ் ஆல் ஷைக், 'சவுதி அரேபியா அதன் அரசியல் யாப்பை அல் குர்ஆன், ஸுன்னா அடிப்படையில் அமைத்திருப்பது குர்ஆனுக்கும் ஸுன்னாவுக்கும் சவுதி அளிக்கும் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. அத்தோடு உலகிலுள்ள அனைத்து ஹாபிழ்களையும் சவுதி கௌரவிப்பதும் யாவரும் அறிந்த விடயம். அந்த வகையில் தான் புனித மக்காவில் வருடாவருடம் சர்வதேச அல் குர்ஆன் மனனப்போட்டிகளை சவுதி நடாத்துகிறது. இத்தகைய போட்டிகளை உலகின் பல நாடுகளிலும் கூட சவுதி அவ்வப்போது நடாத்துவது குறிப்பிடத்தக்கதாகும்.

சவுதி அரேபிய அரசின் ஸ்தாபகர் மன்னர் அப்துல் அஸீஸின் பெயரிலான இப்போட்டி இம்முறை 44வது தடவையாக நடாத்தப்படுகிறது. அன்று தொட்டு இன்று வரை அல் குர்ஆனுக்கும் அதை மனனமிட்டவர்களுக்கும் புனித மக்காவில் பாரிய கௌரவத்தை சவுதி அளித்துவருவதன் வெளிப்பாடே இதுவாகும். மக்காவில் நடைபெறும் இது போன்ற குர்ஆன் மனன சர்வதேச போட்டிகள், உலகின் அனைத்து நாடுகளிலும் அல் குர்ஆனை மனனம் செய்யக்கூடியவர்களை உருவாக்கி வருகிறது. அதனால் சவுதியில் தொடர்ந்தும் இப்போட்டி நடாத்தப்படுவது பொன்னெழுத்துக்களால் பதிக்கப்பட வேண்டிய விடயமாகும். ஆகவே இப்போட்டியில் பங்குகொண்டுள்ள அனைவரும் தத்தம் நாடுகளில் புனித அல்குர்ஆனை மனனம் செய்யவும் அதை விளங்கவும் அதன் பக்கம் மக்களை அழைக்கவும் உழைக்க வேண்டும்.

**'இரு புனித பள்ளிவாசல்களின் காவலரான மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத் தமது பத்தாவது வயதுக்குள் அல் குர்ஆனை முழுமையாக மனனம் செய்த ஒரு ஹாபிழாவார்'**

இந்த மறைந்த மன்னர் அப்துல் அஸீஸ் சர்வதேச குர்ஆன் மனனப்போட்டியானது, ஹிஜ்ரி 1399ஆம் ஆண்டில், அதாவது இற்றைக்கு 44 வருடங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டது. அன்று முதல் இன்று வரையும் உலகின் பல நாடுகளில் இருந்தும் மொத்தம் 6970 ஹாபிழ்கள் இப்போட்டிகளில் கலந்து கொண்டுள்ளனர். அதேபோன்று அன்று முதல் இன்று வரை பல பில்லியன் ரியால்களை பணப்பரிசில்களாகவும் வழங்கி இருக்கிறது சவுதி.

அந்த வகையில் இம்முறை இப்போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டியவர்களுக்கு மிகப் பெருந்தொகைப் பரிசில்கள் மாத்திரமல்லாமல் கலந்து கொண்டவர்களுக்கு ஆறுதல் பரிசில்களும் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாக இம்முறை சுமார் ஒரு மில்லியன் ரியால்களுக்கு மேற்பட்ட (இலங்கை நாணயப்படி எட்டரை கோடி) விஷேட பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு இப்போட்டியைத் தன்னுடைய நேரடி கண்காணிப்பின் கீழ் நடாத்தத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் முன்னெடுத்த மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத்துக்கும் பிரதமரும் இளவரசருமான முஹம்மத் பின் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத்துக்கும் மன்னர் சல்மானுக்கு பதிலாக பரிசில்களை வழங்கி வைக்க வருகை தந்த மக்காவின் பிரதி கவர்னரும் இளவரசருமான ஸஊத் பின் மிஷ்அல் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத்துக்கும் இஸ்லாமிய விவகார அழைப்பு மற்றும் வழிகாட்டல்கள் அமைச்சின் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட சகல ஊழியர்களுக்கும் அமைச்சர் ஆல் ஷைக் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

இப்போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் பெறுமதியான ஆறுதல் பணப்பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டதோடு வெற்றி பெற்ற 21 அதிஷ்டசாலிகளுக்கு இலங்கை நாணயப்படி 35 கோடி ரூபா பகிர்ந்தளிக்கப்பட்டது. இப்போட்டியில் முதலாமிடத்தை சவுதி அரேபியாவைச் சேர்ந்த சுஃத் பின் இப்ராஹீம் பின் ஹமத் அல் ருவைதிஃ பெற்றுக்கொண்டார். அவருக்கு இலங்கை நாணயப்படி 4 கோடி 25 இலட்சம் ரூபா பணப்பரிசில் வழங்கப்பட்டது.



இப்போட்டியில் இரண்டாம் இடத்தை நைஜீரியாவைச் சேர்ந்த நாசிர் இப்ராஹீம் முஹம்மத் பெற்றுக் கொண்டார். அவருக்கு இலங்கை நாணயப்படி 3 கோடி 82 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. இப்போட்டியில் மூன்றாமிடத்தைப் ஜோர்தானைச் சேர்ந்த லியாஉ தலால் பத்ஹி இப்ராஹீம் பெற்றார். அவருக்கு இலங்கை நாணயப்படி 3 கோடி 40 இலட்சம் ரூபா பணப்பரிசிலாக வழங்கப்பட்டது.

இப்போட்டியில் வெற்றியீட்டிய ஏனைய 18 பேரும் சவுதி அரேபியா, நைஜீரியா, அல்ஜீரியா, பங்களாதேசம், பிலிப்பைன்ஸ், லிபியா, யெமன், மாலி, பங்களாதேசம், பலஸ்தீன், இந்தோனேசியா, மாலி, அமெரிக்கா, லாரியூனியன், அவுஸ்திரேலியா, மியான்மார், பொஸ்னியா, ஜேர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களாவர். அவர்களுக்காக 2 கோடி 55 இலட்சம் தொடக்கம் 38 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா வரை பணப் பரிசில்களைப் பெற்றக் கொண்டனர். இவர்களில் வெற்றி பெற்ற 21 வது வெற்றியாளருக்கு இலங்கை நாணயப்படி, 38 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. இதன்படி இப்போட்டியில் வெற்றியீட்டிய 21 வெற்றியாளர்களில் சவுதி அரேபியா 2 இடங்களையும் பங்களாதேசம் 2 இடங்களையும் மாலி 2 இடங்களையும் தமதாக்கிக் கொண்டுள்ளன.

புனித அல் குர்ஆனுக்கும் குர்ஆனை மனனம் செய்தவர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டிய அனைத்து கண்ணியங்களையும் கௌரவங்களையும் சவுதி அன்று தொட்டு இன்று வரை வழங்கி வருவதோடு அல் குர்ஆனின் மகத்துவத்தை உலகறியச் செய்யும் மகத்தான பணியையும் சவுதி அரசு தொடர்ந்தும் முன்னெடுத்துக் கொண்டிருக்கிறது. அதன் நிமித்தம் தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச மட்ட குர்ஆன் மனனப் போட்டிகளை உலக நாடுகளிலும் புனித மக்காவிலும் தொடர்ந்தும் நடாத்தி வருகிறது. இவ்வாறு சவுதி அல் குர்ஆனுக்கு அளித்துவரும் மகத்தான சேவைகள் அனைவராலும் பாராட்டப்பட வேண்டியவையாகும்.

மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத்தும் அல் குர்ஆனை மனனம் செய்த ஒரு ஹாபிழாவார். சவுதி மன்னர் அப்துல் அஸீஸ், தனது அனைத்து பிள்ளைகளையும் குர்ஆனை மனனம் செய்யவும் குர்ஆன் ஸுன்னாவைப் படிக்கவுமென தனியான கல்விக்கூடமொன்றை "மத்ரஸதுல் உமரா" என்ற பெயரில் ஆரம்பித்தார். அதன் ஊடாகத் தனது பிள்ளைகளை மார்க்கக்கல்வியின் அடிப்படையில் வளர்த்தார். அந்த வகையில் தற்போதைய சவுதி மன்னர், தமது பத்து வயதுக்குள் புனித மக்காவின் அன்றைய பிரதம இமாமான அஷ்ஷைக் அப்துல்லாஹ் கய்யாத் மூலம் முழுக் குர்ஆனையும் மனனமிட்டுக் கொண்டார். அன்று தொடக்கம் தற்போதைய மன்னர் சல்மான் புனித அல் குர்ஆனுக்கும் ஹாபிழ்களுக்கும் உயரிய கௌரவத்தை அவர் அளித்து வருகிறார்.

**'இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றியவருக்கு ஆறுதல் பரிசு'**

இதேவேளை இலங்கையில் இருந்தும் பல ஹாபிழ்கள் புனித மக்காவில் நடைபெற்ற அல் குர்ஆன் போட்டிகளில் கலந்து கொண்டு பல பெறுமதியான பணப் பரிசில்களை வென்றெடுத்து இந்நாட்டுக்குபெருமை சேர்த்துள்ளனர். இதே போன்றதொரு அல் குர்ஆன் மனனப்போட்டி சவுதி அரேபிய இஸ்லாமிய விவகார அமைச்சின் மாபெரும் பரிசுத் தொகையில் இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர் காலித் அல் கஹ்தானியினதும் இந்தியப் பிராந்தியத்தின் சவுதி அரேபியத் தூதரகத்தின் மத விவகாரங்களுக்கான பொறுப்பாளர் அஷ்ஷைக் பத்ர் பின் நாசிர் அல் அனஸியினதும் நேரடி கண்காணிப்பில் முதல் தடவையாக கடந்தாண்டு (2023) கொழும்பில் நடாத்தப்பட்டது. இப்போட்டியில் பங்குபற்றிய இலங்கையின் பல ஹாபிழ்கள் ஒன்றரைக் கோடி ரூபாக்கும் மேற்பட்ட பெறுமதியான பணப் பரிசில்களை வென்றெடுத்தமை தெரிந்ததே.

இந்நிலையில் சவுதியின் மறைந்த மன்னர் அப்துல் அஸீஸின் பெயரில் வருடா வருடம் புனித மக்கா நகரில் சர்வதேச குர்ஆன் மனனப் போட்டியை நடாத்தி பல கோடி ரூபா பெறுமதியான பரிசில்களை வழங்கிவரும் இரு புனித பள்ளிவாசல்களின் காவலரான மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் மற்றும் பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மான் மற்றும் இஸ்லாமிய விவகார அமைச்சர் கலாநிதி அப்துல் லதீப் அப்துல் அஸீஸ் ஆல் ஷைக் ஆகியோர் உலக முஸ்லிம்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ளனர். அவர்களுக்கும் சவுதி அரசுக்கும் எல்லா முஸ்லிம்களும் நன்றிகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்ளக்கூடியவர்களாக உள்ளனர்.


அந்த வகையில் அல் குர்ஆனுக்கு அளப்பரிய சேவையாற்றிவரும் சவுதி மன்னர், இளவரசர், இஸ்லாமிய விவகார அமைச்சர் ஆகியோருக்கு இலங்கை ஹிக்மா நிறுவனமும் நன்றிகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமை அடைகிறது. அத்தோடு இம்முறைப் போட்டியில் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகளுக்கு மனம் நிறைந்த பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறது.








**'சவுதி அரேபிய இஸ்லாமிய விவகார அமைச்சின் மாபெரும் பரிசுத் தொகையில் இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர் காலித் அல் கஹ்தானியினதும் இந்தியப் பிராந்தியத்தின் சவுதி அரேபிய தூதரகத்தின் மத விவகாரங்களுக்கான பொறுப்பாளர் அஷ்ஷைக் பத்ர் பின் நாசிர் அல் அனஸியினதும் நேரடி கண்காணிப்பில் இலங்கையிலும் முதல் தடவையாக 2023 இல் அல் குர்ஆன் மனனப் போட்டியை நடாத்திய போது இந்நாட்டின் பல ஹாபிழ்கள் ஒன்றரைக் கோடி ரூபாக்கும் மேற்பட்ட பெறுமதிமிக்க பணப் பரிசில்களை வென்றெடுத்தனர்'.**



**மௌலவி எம்.எச் ஷேஹுத்தீன் மதனி (BA)**
பணிப்பாளர்,
அல் ஹிக்மா நிறுவனம்,
கொழும்பு

# இலங்கையில் இரத்தினக்கல் மற்றும் ஆபரண தொழில்துறை அதன் நிலையை இழக்கிறதா?

பெறுமதி சேர் வரி (VAT) உள்ளிட்ட பல்வேறு அதிக வரிகளை சுமத்துகின்றமையானது, இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழில் துறையில் உள்ள வணிகங்களை, அத்தகைய வணிகத்திற்கான சாதகமான சூழல்ககளைக் கொண்ட வேறு நாடுகளுக்கு இடம்பெயர்வதற்கு தூண்டுகின்ற, அதிகரித்து வரும் கவலை தொடர்பில் இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கம் (SLGJA) அதன் கவனத்தை வெளிப்படுத்துகிறது. பிரதானமாக வெளிநாடுகளுக்கு மீள்ஏற்றுமதி செய்வதற்கு அல்லது பெறுமதி சேர்க்கப்பட்டு நாட்டிற்கு வரும் வெளிநாட்டு பயணிகளுக்கு வெளிநாட்டு நாணயத்தில் உள்நாட்டில் விற்கப்படும் நோக்கில் இறக்குமதி செய்யப்படும் பட்டை தீட்டப்படாத மற்றும் தீட்டப்பட்ட இரத்தினக் கற்களுக்கு 18% VAT வரி விதிக்கப்படுகின்றமையானது, அவை, இலங்கையில் அதன் நிலைபேறான தன்மையையும், இத்தொழில்துறையின் பல்வகைத் தன்மையையும் இழக்கும் வகையிலான, தீங்கான நிலைக்கு அதனை மாற்றியமைத்துள்ளது.



இதன் காரணமாக, இத்தொழில்துறையானது துபாய், இந்தியா, ஹொங்கொங், தாய்லாந்து போன்ற வளர்ந்து வரும் போட்டியாளர்களாகக் காணப்படும் நாடுகளுக்கு இடமாற்றத்திற்குள்ளாகும் அபாயம் அதிகரிக்குமென, SLGJA ஏற்கனவே எச்சரித்து வந்தது. இந்த நாடுகள் ஒவ்வொன்றும் அந்தந்த இரத்தினக்கல் மற்றும் நகைத் தொழில்துறைகளுக்கு ஒற்றை இலக்கத்திலான VAT வரிகளை பேணுகின்றன. அந்த நாடுகளுக்கும் எமது நாட்டுக்கும் இடையிலான இந்த ஏற்றத்தாழ்வானது, இலங்கையின் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையை ஒரு போட்டியற்றதாக மாற்றும் நிலைக்குத் தள்ளியுள்ளது. இதன் மூலம் இத்துறையில் உள்ள 600,000 இற்கும் மேற்பட்ட ஊழியர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. சுமார் 99.9% ஆன இரத்தினக்கற்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன அல்லது சுற்றுலாப் பயணிகளுக்கு விற்கப்படுகின்றன. ஆனால், VAT வரி அதிகரிப்பின் விளைவாக இலங்கைக்கான இரத்தினக் கற்களின் இறக்குமதியும் வெகுவாகக் குறைவடைந்துள்ளன. இதன் காரணமாக நகை உற்பத்தியாளர்கள் மற்றும் பட்டைதீட்டுவோர் தங்களது வர்த்தகத்தை மூடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதனால் பாரிய வேலை வாய்ப்பின்மையும் ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது.




# பிளாஸ்திக் மாசுபாட்டைக் குறைக்க PLEASE செயற்திட்டத்துடன் INSEE

INSEE Cement நிறுவனம், இலங்கையில் நிலைபேணத்தக்க கழிவு முகாமைத்துவத்தில் முன்னோடியும், மற்றும் முன்னிலை வகிக்கும் வழங்குநருமான INSEE Ecocycle என்ற அதன் முழுமையான உரிமையாண்மையின் கீழான துணை நிறுவனத்தினூடாக, தெற்காசியாவில் பிளாஸ்திக் மாசற்ற ஆறுகள் மற்றும் கடல்கள் (Plastic Free Rivers and Seas for South Asia PLEASE) செயற்திட்டத்துடனான அதன் ஒத்துழைப்பு குறித்து பெருமையுடன் அறிவித்துள்ளது.

இலங்கையில் பிளாஸ்திக் மாசுபாட்டைக் குறைப்பதற்காக புத்தாக்கமான முயற்சிகளை நடைமுறைப்படுத்துவதற்கு இச்செயற்திட்டம் INSEE Ecocycle நிறுவனத்திற்கு இடமளிக்கும்.




உலோகம், இறப்பர் மற்றும் காகிதம் உள்ளிட்ட சிக்கலான கலவை காரணமாக மீள்சுழற்சி செய்யப்பட முடியாத கலவை பிளாஸ்திக் நிலைமையால் இலங்கை கணிசமான சவாலுக்கு முகங்கொடுத்து வருகின்றது.

இந்த சிக்கலான நிலைமை மேற்பட்ட வகை கழிவுகளை செயன்முறைகளுக்கு உட்படுத்துவதில் மீள்சுழற்சியாளர்களுக்கு செலவையும், சவாலையும் விளைவித்துள்ளதுடன், பெருந்தொகையான பிளாஸ்திக் கழிவுகள் நிலப்பரப்பில் வீசப்படுகின்றன. இச்செயற்திட்டத்தின் போது மேற்குறிப்பிட்ட சவாலைச் சமாளிப்பதற்கு INSEE Ecocycle சமூகத்துடன் நெருக்கமாக இணைந்து செயற்படும். புத்தளத்தில் பெண்கள் தலைமையிலான மூலப்பொருள் மீட்பு ஆலையை (Material Recovery Facility MRF) நிறுவுவதே இச்செயற்திட்டத்தின் பிரதான நோக்கம்.

இந்த ஆலையில் மீள்சுழற்சி செய்யப்படக்கூடிய பிளாஸ்திக் கழிவு மதிப்புமிக்க வளங்களாக மாற்றம் செய்யப்படுகின்றது.

# இரண்டாம் காலாண்டில் உத்வேக வளர்ச்சியை பதிவு செய்த கொமர்ஷல் வங்கி

உறுதியான பண்புகளையும் செயலூக்க பதில் திறனும் சந்தை இயக்க வலுவும் கொண்ட கொமர்ஷல் வங்கி குழுமம் 2024ன் முதல் அரையாண்டில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை பதிவு செய்துள்ளது.

இலங்கையின் மிகப் பெரிய தனியார் துறை வங்கி அதன் இணை மற்றும் கிளை வலையமைப்புக்களை உள்ளடக்கியதே கொமர்ஷல் வங்கி குழுமம். 2024 ஜுன் 30ல் முடிவடைந்த அரையாண்டில் இந்தக் குழுமம் மொத்த வருமானமாக 163.12 பில்லியன்களை பதிவு செய்துள்ளது. 2023ம் ஆண்டின் இதே காலப்பகுதியை விட இது 2.71 வீதம் குறைவானதாகும். எவ்வாறேனும் இரண்டாம் காலாண்டுக்கு மட்டுமான மொத்த வருமானம் 82.91 பில்லியனாகும். முதல் காலாண்டை விட இது 0.73 வீதம் மட்டுமே வீழ்ச்சி கண்டுள்ளது.

மொத்த வருமானத்தின் குறைவுக்கு காரணம் 2023ம் ஆண்டோடு ஒப்பிடுகையில் அரச கடன்கள் மற்றும் பிணைகள் மீதான சந்தையில் குறைவான வட்டி வீதம். இதன் காரணமாக வட்டி வருமானத்தில் ஏற்பட்ட குறைவாகும். மீளாய்வுக்கு உட்பட்ட ஆறு மாத காலத்தில் வட்டி வருமானம் 139.26 பில்லியனாகும். இது 7.66 வீத வீழ்ச்சியாகும். இதே



காலப்பகுதிக்கான வட்டி செலவு 28.86 வீதத்தால் குறைவடைந்து 80.64 பில்லியனாக உள்ளது. வங்கியின் CASA விகிதத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் விளைவாகவும் வைப்புக்களின் மீள விலையிடல் காரணமாகவும் தேறிய வட்டி வருமானம் 56.53 வீதத்தால் வளர்ச்சி கண்டு 58.62 பில்லியனாக உள்ளது.

'நுண் பொருளாதார மாற்றங்கள் முக்கிய வங்கிச் செயற்பாடுகளில் அழுத்தங்களை தொடர்ந்து பிரயோகித்து வருகின்றன. முகாமைத்துவ வரிசைகளில் மற்றும் செலவுத் தாக்கங்களில் நாம் எமது கவனத்தை தீவிரப்படுத்தி உள்ளோம்' என்று கூறினார் கொமர்ஷல் வங்கியின் தலைவர் ஷர்ஹான் முஹ்ஸீன். 'இந்த முன்னேற்பாடுகளின் விளைவு வங்கியின் முன்னேற்றம் கண்டுள்ள செயற்பாடு விகிதங்களில் பிரதிபலித்துள்ளது. இலாபத்தன்மை, எமது ஐந்தொகை வளர்ச்சி நிலைத்தன்மை என்பன இதில் அடங்கும்' என்று அவர் மேலும் கூறினார்.

# மலிபன் நிறுவனத்தின் தலைவராக குமுதிகா பெர்னாண்டோ நியமனம்

தரம் மற்றும் சுவை ஆகியவற்றுக்கு 70 ஆண்டுகள் நீண்ட பாரம்பரியத்துடன், இலங்கையில் அனைத்து இல்லங்களிலும் அபிமானம் பெற்ற நாமமாகத் திகழ்ந்து வருகின்ற மலிபன் குழுமம், முக்கியமான தலைமைத்துவ மாற்றம் குறித்து அறிவித்துள்ளதுடன், 2024 ஒகஸ்ட் 15 முதல் அமுலுக்கு வரும் வகையில், திருமதி குமுதிகா பெர்னாண்டோ குழுமத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திருமதி பெர்னாண்டோ அவர்களின் தந்தையாரும், மலிபன் குழுமத்தின் தலைவராக முன்னர் கடமையாற்றியவருமான திரு. ஏ.ஜி. ரட்ணபால சமரவீர அவர்கள் அண்மையில் காலமானதைத் தொடர்ந்து இந்த நியமனம் இடம்பெற்றுள்ளது. மலிபன் நிறுவனத்தின் ஸ்தாபகரான காலஞ்சென்ற ஏஜி ஹினி அப்புஹாமி அவர்களின் புதல்வரான திரு. சமரவீர அவர்கள் மலிபன் குடும்பம் நீண்ட காலமாக பேணி வந்துள்ள தரம், மகத்துவம் மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றின் மரபினை கட்டிக்காத்துள்ளார்.

ஒரு தசாப்த காலத்திற்கும் மேலாக முகாமைத்துவப் பணிப்பாளராக கடமையாற்றியுள்ள குமுதிகா பெர்னாண்டோ அவர்கள் மலிபன் நிறுவனத்தை



எதிர்காலத்தில் சிறப்பாக வழிநடாத்திச் செல்வதற்கான சகல திறமைகளையும், தகுதியையும் கொண்டுள்ளதுடன், மலிபன் குடும்பத்தின் பாரம்பரியத்தை தொடர்ந்தும் கட்டிக்காப்பார்.

தனது தந்தையின் வழிகாட்டலின் கீழ் சிறப்பாக பயிற்றுவிக்கப்பட்டுள்ள அவர், நிறுவனத்தின் முகாமைத்துவம் மற்றும் தொழிற்பாடுகளை மேற்பார்வை செய்வதில் பெரும் பங்களிப்பாற்றியுள்ளதுடன், தயாரிப்பு பல்வகைப்படுத்தல், ஏற்றுமதிகளை விரிவுபடுத்தல் மற்றும் புதிய சந்தைகளில் காலடியெடுத்து வைத்தல் ஆகியவற்றினூடாக கணிசமான வளர்ச்சியை முன்னெடுப்பதற்கு நிறுவனத்தை வழிநடாத்தியுள்ளார்.

# அமானா வங்கி பணிப்பாளர் சபையில் அஸ்ரின் சஹீர்

அமானா வங்கி தனது நிறைவேற்று அதிகாரமற்ற சுயாதீன பணிப்பாளராக அஸ்ரின் சஹீர் அவர்களை 2024 ஜுலை 20 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமித்துள்ளதாக அறிவித்துள்ளது. அஸ்ரின், நிதித்துறையில் 30 வருடங்களுக்கு மேலான அனுபவத்தைக் கொண்டவராக திகழ்கின்றார்.

தமது தொழில் வாழ்க்கையை KPMG கொழும்பில் ஆரம்பித்து பின்னர் ஏர்னஸ்ட் அன்ட் யங் பஹ்ரெய்னுக்கு மாறியிருந்தார். பின்னர் குவைட் பினான்ஸ் ஹவுசில் முதலீட்டு முகாமையாளராக இணைந்தார். குவைட் பினான்ஸ் ஹவுசில், சர்வதேச வங்கியியல் பிரிவினுள் வங்கியியல் வினைத்திறன் கண்காணிப்பு அலகு மற்றும் கடன் கண்காணிப்பு அலகு ஆகியவற்றின் தலைமை அதிகாரியாக பதவி உயர்வு பெற்றதுடன், துணை வங்கிகளின் வினைத்திறனை மேற்பார்வை செய்திருந்தார். உறுதியான நிதிசார் அனுபவத்தின் காரணமாக, குவைட் பினான்ஸ் ஹவுஸ் மலேசியா பேர்ஹாட்டின் நிறைவேற்று அதிகாரமற்ற சுயாதீனமற்ற பணிப்பாளராக நியமிக்கப்பட்டு 2011 முதல் 2017 வரையான காலப்பகுதியிலும், 2020 ஆம் ஆண்டு முதல் இதுவரையிலான காலப்பகுதியிலும் கடமையாற்றியிருந்தார். தமது முதல் தவணையில், பணிப்பாளர் சபை மாற்றியமைப்பு செயற்குழுவின் தவிசாளராக செயலாற்றியதுடன், இதன் போது, வங்கியின் இலாகாவை மீளமைப்பது மற்றும் புதிய கடன் வழங்கல் வழிகாட்டலை நிறுவுவது தொடர்பில் சர்வதேச ஆலோசகர்களுடன் இணைந்து செயலாற்றியிருந்தார். தற்போது இவர் பணிப்பாளர் சபை கணக்காய்வு குழு மற்றும் பணிப்பாளர் சபை பிரேரிப்பு மற்றும் சம்பள சபை ஆகியவற்றின் தவிசாளராக சேவையாற்றுகின்றார்.



இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகத்தின் (CA Sri Lanka) அங்கத்தவராக அஸ்ரின் திகழ்வதுடன், இலங்கை சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர் நிறுவகத்தின் (ICMA) அங்கத்தவராகவும், பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவகத்தின் (CIMAUK) இணை அங்கத்தவர் மற்றும் சான்றளிக்கப்பட்ட இடர் பகுப்பாளராகவும் (CRA) திகழ்கின்றார்.

# Hyundai Grand i10 வாகன அசல் பாகமாக தெரிவான சியெட் கார் ரேடியல் டயர்கள்

இலங்கையில் அபான்ஸ் ஒடோ நிறுவனத்தால் ஒன்றிணைக்கப்பட்டு விற்கப்பட்டும் மற்றும் பிந்திய சேவை வழங்கப்படும் 2024ம் ஆண்டுக்கான Hyundai Grand i10 கார்களின் அசல் டயர் உபகரணமாக சியெட் டயர் தெரிவு செய்யப்பட்டுள்ளது. நாட்டின் அதி கூடிய விற்பனை கொண்ட டயர் வர்த்தக பெயரான சியெட்டுக்கு மற்றொரு Original Equipment Manufacturer (OEM) பங்குடைமை வாய்ப்பை இது வழங்கியுள்ளது.

இந்தப் பங்குடைமையானது உள்ளூர் பெறுமான சேர்ப்பில் இரண்டு முக்கிய புள்ளிகளை ஒன்றிணைக்கின்றது. உலகின் முன்னணி வாகன வர்த்தக பெயராக ஜெர்மன் தொழில்நுட்பத்துடன் கூடிய 15 அங்குல சியெட் ரேடியல் டயர்கள் சீதுவையில் உள்ள அபான்ஸ் ஒடோ நிறுவனத்தில் Hyundai Grand i10 வாகனங்களில் பொருத்தப்படவுள்ளன

இந்த டயர்கள் ஜெர்மனியில் பிராங்பேர்ட் நகரில் உள்ள சியெட்டுக்கு சொந்தமான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் உள்ள பொறியியலாளர்களால்



வடிவமைக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டதுடன்' இவை Hyundai Grand i10 க்கான கடுமையான OEM செயற்பாட்டு தரத்தை உள்ளடக்கியதாகும். இட் டயர் வகைகள் வாகனத்தின் தோற்றத்தை மேம்படுத்துவது மட்டுமன்றி அதி உயர் பாதுகாப்பையும் செயற்பாட்டையும் உறுதி செய்கின்றது

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டு; IATF 16949:2016 தரச் சான்றிதழ் கொண்ட ஒரே டயர் வகை சியெட்ட ஆகும். International Automotive Task Force (IATF) நிறுவனத்தால் வழங்கப்படும் இச் சான்றிதழ் சர்வதேச வாகன தர முகாமைத்துவ முறைமைகளோடு இணக்கமுள்ளது என்பதை உறுதி செய்யும் வகையில் இந்த சான்றிதழ் வழங்கப்படுகின்றது.

'இலங்கையில் எமது வளர்ச்சி கண்டு வரும் OE வாடிக்கையாளர் பட்டியலுக்குள் Hyundai மற்றும் அபான்ஸ் என்பனவற்றையும் நாம் வரவேற்றுக் கொள்கிறோம்' என்று கூறினார் சியெட்டின் பிரதான செயற்பாட்டு அதிகாரி ஷமல் குணவர்தன.

# இந்திய கலாசார சங்கத்தின் ஏற்பாட்டில் முதலாவது சர்வதேச பாதி–மரதன் நிகழ்வு

தனது முதலாவது சர்வதேச பாதி மரதன் நிகழ்வை 2024 செப்டெம்பர் 01ஆம் திகதியன்று கொழும்பு, காலிமுகத் திடலில் ஆரம்பித்து வைக்கவுள்ளமை குறித்து இந்திய கலாசார சங்கம் மகிழ்ச்சியுடன் அறிவித்துள்ளது. மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகின்ற இந்த நிகழ்வானது, உலகெங்கிலுமிருந்து கவனத்தை இலங்கை மீது திசைதிருப்பி, பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டு நிகழ்வுக்கான முக்கியமானதொரு நாடாக இலங்கையை நிலைநிறுத்துவதை பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளதுடன், பல்வேறு நாடுகளிலிருந்து 1400 க்கும் மேற்பட்ட வீரர்களை இந்த நிகழ்வில் இணைப்பதற்கு எதிர்பார்த்துள்ளது.

உடல் உறுப்புக்களை தானம் செய்வதற்கான சுய உறுதிமொழி, காப்பகங்களுக்கு உதவுதல் உள்ளிட்ட தனது சமூகப் பொறுப்புணர்வு முயற்சிகளுக்கு தேவையான நிதியை திரட்டுவதற்கு இந்த மரதன் நிகழ்வானது இந்திய கலாசார சங்கத்திற்கு இடமளிப்பதுடன், இதன் அடையாளமாக மரதன் ஓட்டத்



தில் பங்குகொள்ளும் ஒவ்வொரு வீரரும் பசுமை அடிச்சுவட்டைக் குறிக்கும் வகையில், உள்நாட்டிலுள்ள பாடசாலைகளில் நாக மரக்கன்றுகளை நாட்டுவர்.

இந்திய கலாசார சங்கத்தின் தலைவர் கேப்டன் அனிர்பன் பெனர்ஜி அவர்கள் இந்த நிகழ்வை வெற்றிகரமாக முன்னெடுப்பதில் சங்கத்தின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தி கருத்து வெளியிட்டார்: "விளையாட்டுக்களுக்கான சுற்றுலாப் பிரயாணம் மற்றும் வெளிப்புற பொழுதுபோக்கு செயற்பாடுகளுக்கு சிறந்த நாடாக இலங்கையை ஸ்தாபித்து, உடற்பயிற்சிச் செயற்பாடுகளில் இலங்கை மக்கள் ஈடுபடுவதை ஊக்குவிப்பதே இந்திய கலாசார சங்கம் ஏற்பாடு செய்கின்ற 1வது சர்வதேச பாதிமரதன் நிகழ்வின் நோக்கம். உள்நாட்டிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்து இதில் பங்குபற்றவுள்ளவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ள பலத்த வரவேற்பு எமக்கு மிகவும் மகிழ்ச்சி அளிப்பதுடன், அவர்களில் பலரும் முதற்தடவையாக எமது அழகிய தேசத்திற்கு வருகை தரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பங்குபற்றும் அனைவரும் மகத்தான மரதன் அனுபவத்தைப் பெற்று, இலங்கையின் உண்மையான விருந்தோம்பலை அனுபவிப்பதை உறுதி செய்வதில் எமது அணி அயராது உழைத்து வருகின்றது," என்று குறிப்பிட்டார்.

# யானைகளை பாதுகாக்கும் செயற்திட்டம்

ஒகஸ்ட் மாதத்தில் அனுட்டிக்கப்படுகின்ற உலக யானைகள் தினம் 2024 ஐக் கொண்டாடும் வகையில், மனிதர்களுக்கும், யானைகளுக்கும் இடையிலான பிணக்கு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி, இலங்கையில் பாதிக்கப்பட்ட சமூகங்கள் அதிலிருந்து மீள்வதை மேம்படுத்தும் முகமாக உலகின் மிகப் பாரிய ஆடம்பர ஆயுள்வேத சுகவாழ்வு வர்த்தகநாமமான Spa Ceylon, தொடர் நிகழ்வுகளை ஏற்பாடு செய்ய Wildlife & Nature Protection Society (WNPS) உடன் கைகோர்த்துள்ளது.

'Help Save the Majestic Ceylon Elephant Wellness Run' நிகழ்வானது, 2024 ஒகஸ்ட் 11 கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் ஆரம்பமாகி, நிகழ்வுகள் தொடராக இடம்பெறவுள்ளன.

WNPS இன் பாதுகாப்பு முயற்சிகளுக்கு உதவுவதற்கான ஒரு 'City Run' நிகழ்வாக அமையும். Spa Ceylon இன் அனுசரணையில் 5 கிமீ மற்றும் 2 கிமீ தூரம் கொண்ட ஓட்ட நிகழ்வுகளாக இது அமைந்தது.

இரு பிரிவுகளில் முதல் மூன்று இடங்களைப் பெறுகின்ற வெற்றியாளர்கள் Spa Ceylon மற்றும் WNPS இடமிருந்து வியப்பூட்டும் பரிசுகள் வழங்கப்பட்டன.

அதே தினத்தில், 'Gaja Nana Sahana' என்ற தலைப்பில் புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டமொன்றும் ஆரம்பிக்கப்பட்டதுடன், மனிதர்களுக்கும், யானைகளுக்கும் இடையிலான பிணக்கு காரணமாக பெற்றோரை பறிகொடுத்த சிறுவர்களின் நலனை நோக்கமாகக் கொண்டு இது முன்னெடுக்கப்பட்டது.



மனிதர்களுக்கும், யானைகளுக்கும் இடையிலான பிணக்கு காரணமாக கடந்த ஐந்து ஆண்டுகளில் 689 பேர் மரணித்துள்ளதுடன், 2023 ஆம் ஆண்டில் மாத்திரம் 169 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த பிரச்சனை எந்த அளவுக்கு பாரதூரமானது என்பதை இந்த புள்ளி விபரங்கள் காண்பிக்கின்றன.

# எரிபொருள் மாஸ்டர் காட் கடனட்டையை அறிமுகப்படுத்தியுள்ள DFCC வங்கி

DFCC வங்கி இலங்கையில் முதல் முறையாக இணைவர்த்தக நாமமிடப்பட்ட நுகர்வோர் எரிபொருள் மாஸ்டர்காட் கடனட்டையை லங்கா ஐஓசி (Lanka IOC LIOC) உடனான பிரத்தியேக கூட்டாண்மையுடன் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த தனித்துவமான கூட்டாண்மை உங்களுக்கு புதிய மற்றும் வியப்பூட்டும் தயாரிப்பொன்றைக் கொண்டு வருவதுடன், செலவு செய்யும் ஒவ்வொரு முறையும் பணமீளளிப்பு சலுகைகள் (Cashback), இலகு தவணைக் கொடுப்பனவுத் திட்டங்கள் (Easy Payment Plans) மற்றும் பல சலுகைகளை மகத்தான சேமிப்பு வடிவங்களில் அட்டைதாரர்களுக்கு வழங்குகின்றது. இதற்கு அமைவாக, அட்டைதாரர்கள் தமது அட்டையின் கணக்குக்கூற்றின் ஒவ்வொரு சுழற்சியின் போதும் அதிகபட்சமாக ரூபா 2,000/– தொகை கிடைக்கும் வகையில், இலங்கையிலுள்ள எந்தவொரு LIOC எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் கொள்வனவு செய்கின்ற எரிபொருள், மசகு எண்ணெய் மற்றும் ஏனைய தயாரிப்புக்களுக்கு 5% பணமீளளிப்பு சலுகையைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவர்கள்.

# பாராளுமன்ற வாழ்வில் மூன்று தசாப்தம் நிறைவு : முத்து விழா காணும் ரவூப் ஹக்கீம்

இலங்கை அரசியலில் மூத்த அரசியல்வாதி, சிறந்த இராஜதந்திரி, சர்வதேச அரங்கில் அறியப்பட்ட சிறுபான்மை இனத்தலைவரான ரவூப் ஹக்கீம் பாராளுமன்றத்திற்கு பிரவேசித்து முப்பது வருடங்களை பூர்த்தி செய்து முத்து விழா காண்கிறார்.

இலங்கையில் வாழும் சிறுபான்மை இனமான முஸ்லிம் சமூகத்திற்கு அரசியல் முகவரி பெற்றுக் கொடுத்த உரிமைக்குரலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இஸ்தாபகத்தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப்பால் அறிமுகமாகிய ரவூப் ஹக்கீம்,1988ம் ஆண்டு காலப்பகுதியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து தலைவர் அஷ்ரஃப்பின் வேண்டுகோள்களின்படி சிறப்பாகச் செயற்பட்டது மாத்திரமின்றி, கட்சி வளர்ச்சிப்பணிகளிலும் அயராது பாடுபட்டார்.

ரவூப் ஹக்கீமிடமிருந்த தலைமைத்துவ விசுவாசம், மும்மொழி அறிவு, துடிப்பான செயற்பாடு எனப் பல நற்குணங்கள் காரணமாக 1992ம் ஆண்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டதுடன், கட்சிக்குள் ஏற்பட்ட நெருக்கடிகளின் போது அவர் தலைமைக்குப் பக்கபலமாகச் செயற்பட்டார்.

ரவூப் ஹக்கீமின் தலைமைத்துவ விசுவாசத்திற்கு எடுத்துக்காட்டாக, அன்றைய தலைவரின் கூற்றை இங்கு பார்க்கலாம்.

"என்னுடைய ஓயாத அரசியல் வாழ்க்கையில், எனக்கு கிடைத்த ஆறுதல்களில் ஒன்று ரவூப் ஹக்கீம்" எம்.எச்.எம்.அஷ்ரஃப்.

ரவூப் ஹக்கீமின் ஆளுமைப்பண்புகள், கட்சியின் செயலாளராக சிறப்பாகச்செயற்பட்டமை, கட்சி வளர்ச்சியில் அவரது பங்களிப்பு என்பவற்றோடு தலைமைத்துவ விசுவாசம் கருத்திற்கொள்ளப்பட்டதால் 1994ம் ஆண்டு ரவூப் ஹக்கீமின் 34வது வயதில் தேசியப்பட்டியலூடாக பாராளுமன்ற உறுப்புரிமை அஷ்ரஃப்பினால் வழங்கப்பட்டது. அத்தோடு, பாராளுமன்றத்தில் குழுக்களின் பிரதித்தலைவராகவும் நியமிக்கப்பட்டார்.

1999ம் ஆண்டு தலைவர் அஷ்ரஃப் தூரநோக்கோடு தேசிய ஐக்கிய முன்னணியை ஆரம்பித்தார். முஸ்லிம் காங்கிரஸின் பொதுச்செயலாளராக இருந்த ரவூப் ஹக்கீமை அப்பதவியிலிருந்து அகற்றி, தேசிய ஐக்கிய முன்னணியின் பொதுச்செயலாளராக பதவி மாற்றம் செய்தார்.

2000ம் ஆண்டு கண்டி மாவட்டத்தில் தேசிய ஐக்கிய முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தி மரச் சின்னத்தில் பாராளுமன்றத்தேர்தலில் அஷ்ரஃப்பினால் ரவூப் ஹக்கீம் களமிறக்கப்பட்டார். வடக்கு, கிழக்கிற்கு வெளியே பிரதான அரசியல் நீரோட்ட தேசிய கட்சிகளில் அல்லாது ஒரு முஸ்லிம் கட்சியிலிருந்து ஒருவர் போட்டியிட்டு வெற்றி பெற்றமை அதுவே முதல் தடவையாகும்.

2000ம் ஆண்டு பெருந்தலைவர் அஷ்ரஃப்பின் திடீர் மறைவைத் தொடர்ந்து முஸ்லிம் காங்கிரஸிக்குள் தலைமைத்துவ வெற்றிடம் ஏற்பட்டது. இதன் காரணமாக ரவூப் ஹக்கீம் மற்றும் பேரியல் அஷ்ரஃப் ஆகிய இருவரும் கட்சித்தலைமைத்துவத்திற்கு இணைத்தலைவர்களாக நியமிக்கப்பட்டனர்.

அதன் பின், சிறிது காலத்திலேயே சில முரண்பாடுகள் ஏற்பட, தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவராக பேரியல் அஷ்ரஃப்பும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவராக ரவூப் ஹக்கீமும் நியமிக்கப்பட்டார்கள்.

2000ம் ஆண்டு ரவூப் ஹக்கீம், உள்நாட்டு மற்றும் சர்வதேச வர்த்தகம், முஸ்லிம் சமய விவகாரங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சராக சந்திரிக்கா அம்மையாரின் தலைமையிலான அமைச்சரவையில் நியமிக்கப்பட்டார்.



2001ம் ஆண்டு மாவனெல்லை பிரதேசத்தில் இடம்பெற்ற இனக்கலவரத்தின் பின்னணியில் அரசசார்பு அரசியல்வாதிகள் இருந்ததனை ஹக்கீம் வெளிப்படையாகவும் பலமாகவும் கண்டித்ததன் காரணமாக அமைச்சரவையிலிருந்து சந்திரிக்கா அம்மையார் ரவூப் ஹக்கீமை இரவோடிரவாக அதிரடியாக நீக்கினார். அதன் காரணமாக முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்திலிருந்து வெளியேறியதனால் சந்திரிக்கா அரசு பெரும்பான்மையை இழந்து தடுமாறி கவிழ்ந்தது.

2001ம் ஆண்டு ஒக்டோபரில் ஐக்கிய தேசிய முன்னணியுடன் ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து கொண்டது.

அதே ஆண்டில் நடைபெற்ற பாராளுமன்றத்தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து கண்டியில் போட்டியிட்டு ரவூப் ஹக்கீம் மீண்டும் அங்கு வெற்றி பெற்றார்.

பாராளுமன்றத்தேர்தல் வெற்றியின் பின்னர் அமைக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தில் துறைமுக அபிவிருத்தி, கப்பல்துறை, முஸ்லிம் விவகார மற்றும் கிழக்கு அபிவிருத்தி அமைச்சராக அவர் நியமிக்கப்பட்டார்.

2004ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் அதாவுல்லாஹ், ஹரீஸ், அன்வர் இஸ்மாயில் ஆகியோர் முஸ்லிம் காங்கிரஸிலிருந்து விலகி, சந்திரிக்கா அணியோடு இணைந்து ஒரு சவால்மிக்க சூழலை கிழக்கு அரசியலில் தோற்றுவித்த போதும், மிகவும் துணிச்சலோடு களத்தில் இறங்கிய ரவூப் ஹக்கீம் அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸில் போட்டியிட்டு அமோக வெற்றியை ஈட்டி, மீண்டும் பாராளுமன்றத்திற்குத்தெரிவு செய்யப்பட்டார்.

இத்தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியை இழந்ததன் காரணமாக பங்காளிகட்சியான முஸ்லிம் காங்கிரஸும் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்தது.

2007ம் ஆண்டு ஜனவரி மாதம் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு தபால் மற்றும் தொலைத்தொடர்பு அமைச்சு வழங்கப்பட்டது.

அதே வருடம் டிசம்பர் மாதம் முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்திலிருந்து வெளியேறியது.

2008ம் ஆண்டு முதன் முதலாக கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்ற போது ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிட்டது.

ஹிஸ்புல்லாஹ் திடீரென கட்சி தாவியதால் உருவான சவால்மிக்க சூழலை தைரியமாக எதிர்கொண்ட தலைவர் ரவூப் ஹக்கீம், தனது பாராளுமன்ற ஆசனத்தை இராஜினாமாச் செய்து விட்டு திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டு அதிகூடிய வாக்குகளால் வெற்றி பெற்றார்.

கிழக்கு மாகாண சபை ஆட்சியை ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு கைப்பற்றியதன் காரணமாக ரவூப் ஹக்கீம் மாகாண சபை உறுப்பினர் பதவியை விட்டு விலகி ஐக்கிய தேசிய முன்னணியின் தேசியப்பட்டியலூடாக மீண்டும் பாராளுமன்றத்திற்குள் பிரவேசித்தார்.

2010ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் ரவூப் ஹக்கீம் கண்டி மாவட்டத்தில் ஐக்கிய தேசிய முன்னணியோடு இணைந்து போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதே ஆண்டு நவம்பர் மாதம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து கொண்டதன் காரணமாக நீதியமைச்சராக ரவூப் ஹக்கீம் நியமிக்கப்பட்டார்.

மகிந்த ராஜபக்ஷ அரசின் இனவாதச்செயற்பாடுகள் முஸ்லிம் சமுகத்தை மிகவும் இக்கட்டான சூழ்நிலைக்கு ஆளாக்கி இருந்ததனால் அரசுக்குள்ளிருந்து கொண்டே சமூகத்திற்கான போராட்டத்தை ஐக்கிய நாடுகள் சபை வரை கொண்டு செல்கின்ற சாணக்கியமான நகர்த்தல்களை மேற்கொண்டிருந்த ஹக்கீம், 2014ம் ஆண்டு இறுதிப்பகுதியில் நல்லாட்சி அரசாங்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் அன்றைய எதிரணி பொது வேட்பாளராகக் களமிறங்கிய மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பிலிருந்து வெளியேறினார்.

2015ம் ஆண்டு மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு அமைக்கப்பட்ட அமைச்சரவையில் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

2015ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத்தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து போட்டியிட்டது. இதன் போது ரவூப் ஹக்கீம் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி அமைச்சரவையில் நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் அமைச்சராக இருந்தார்.

அந்த ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற 52 நாள் அரசியல் குழப்பத்தின் பின்னர் ரவூப் ஹக்கீமுக்கு முன்னைய அமைச்சுக்களுடன் சேர்த்து உயர்கல்வியமைச்சும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

சமூகம் நெருக்கடிக்குள் சிக்கித்தவிக்கும் போது அமைச்சுப்பதவிகளைத்துறந்து வெளியேறி துணிச்சலுடன் சவால்களுக்கு முகங்கொடுத்து வெற்றிகண்டவர் ரவூப் ஹக்கீம்.

ஆட்சியாளர்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற பேரியக்கத்தை அழிக்க அக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களைப் பயன்படுத்திய போது கட்சியை அழிவிலிருந்து பாதுகாக்கும் நோக்கோடு அரசாங்கத்தில் இணைந்து கொள்ள வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் அவற்றிற்கும் ரவூப் ஹக்கீம் முகங்கொடுக்க நேர்ந்தது.

2020ம் ஆண்டு பாராளுமன்றத்தேர்தலில் கண்டி மாவட்டத்தில் சஜித் பிரமதாசா தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து போட்டியிட்டு முதன்மை வெற்றியாளராக வெற்றி பெற்றார்.

நாளை 25ம் திகதி ரவூப் ஹக்கீம் தனது பாராளுமன்ற வாழ்வில் 30து வருடங்களைப்பூர்த்தி செய்து "முத்து விழா" காணுகிறார்.



எம்.என்.எம்.யஸீர் அறபாத் (பீ.ஏ)
ஓட்டமாவடி

# தமிழர் நற்பணி மன்ற கல்விக் கருத்தரங்கு

தமிழர் நற்பணி மன்றம் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் வருடாந்தம் நடத்திவரும் இலவசக் கல்விக் கருத்தரங்குகளை இவ்வாண்டும் நாட்டின் பல இடங்களில் நடத்தி வருகிறது.

இம்மன்றம், கொழும்பு நகர அரிமா கழகத்தின் ஆதரவில் மலையக மாணவர்களுக்கான விசேட கல்விக் கருத்தரங்கை நாளை 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை பண்டாரவளை தமிழ் கல்லூரியில் நடத்தவுள்ளது.

ஆசிரியர் வரதராஜ் தனராஜின் விரிவுரையுடன் மாணவர்களுக்கான விசேட முன்னோடிப் பயிற்சி பரீட்சையும் இங்கு நடத்தப்படவுள்ளது. இக்கருத்தரங்கில் கலந்து கொண்டு சிறந்த பயனை பெற்றுக் கொள்ளுமாறு தமிழர் நற்பணி மன்றத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# முன்னேஸ்வரம் பஞ்சரத பவனி

(உடப்பு குறூப் நிருபர்)

புத்தளம் மாவட்டத்தில் வரலாற்று சிறப்புப் பெற்று , பஞ்ச ஈஸ்வரங்களில் பெருமை பெற்று விளங்கும் முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாதஸ்வாமி ஆலயத்தின் பஞ்சரத பவனி அண்மையில் இடம்பெற்றது.

வசந்தமண்டப பூஜையைத் தொடர்ந்து, அம்பாள் உள்வீதி வலம் வந்து பின்னர் இரதத்தில் அமர்ந்ததன் பிற்பாடு பெருந்திரளான பக்தர்கள் வடம் பிடிக்க 'அரோஹரா' கோஷத்துடன் ரதம் வெளி வீதி வந்தது.

இதில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இனம், மதம் பாராது கொண்டனர்.





# கொட்டாஞ்சேனை ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலய ஸ்ரீகிருஷ்ண ஜன்மாஷ்டமி 26 திங்களன்று





பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அவதரித்த நன்னாளான ஸ்ரீகிருஷ்ண ஜன்மாஷ்டமி விழா, ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி விழா எதிர்வரும் 26ஆம், 27ஆம் திகதிகளில் கொழும்பு, கொட்டாஞ்சேனை ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயத்தில் பக்திபூர்வமாகக் கொண்டாடப்படும்.

26ஆம் திகதி திங்கட்கிழமை 5.30க்கு மங்கள ஆரத்தியுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில், தொடர்ந்து துளசி ஆரத்தி, தர்சன ஆரத்தி, குரு பூஜை, குழந்தை கிருஷ்ணருக்கு வலம்புரிச் சங்கினால் பால் அபிஷேகம், ஆராதனை, ராஜபோக ஆரத்தி, தூப ஆரத்தி, துளசி ஆரத்தி, சந்திய ஆரத்தியைத் தொடர்ந்து குழந்தைக் கிருஷ்ணரை தொட்டிலிலிட்டு தாலாட்டும் வைபவம் இடம்பெறும்.

இரவு 11.00 மணிமுதல் ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ணருக்கு மஹா அபிஷேகமும், விஷேட ஆராதனைகளும், நடைபெற்று பிரசாதம் வழங்கப்படும்.

மறுநாள் 27ஆம் திகதி செவ்வாயன்று நண்பகல் 12.00 மணிக்கு ஸ்ரீ வியாச பூஜை நடைபெறும்.

அன்றைய தினம் மாலை 6.30க்கு சந்தியா ஆரத்தியைத் தொடர்ந்து ஹரே கிருஷ்ணா இசை நாட்டியக் கல்லூரி மாணவ மாணவிகள் வழங்கும் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

அபிஷேகத்துக்கு வேண்டிய பால், இளநீர், பழம், பூக்கள், மற்றும் அன்னதானத்திற்கு வேண்டிய சகல பொருட்களையும் பக்தர்கள் வழங்கலாம்.

# 70 வயதிற்கு மேற்பட்ட முதியோருக்கு கொடுப்பனவு

(புத்தளம் தினகரன் நிருபர்)

குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களில் உள்ள 70 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களுக்கான கொடுப்பனவு பெறுவதற்கு இதுவரையும் விண்ணப்பம் சமர்ப்பிக்காத பயனாளிகள் இருப்பின், தமது விண்ணப்பங்களை பூர்த்திசெய்து இம்மாதம் 26 ஆம் திகதிக்கு முன்னர், புத்தளம் பிரதேச செயலக சமூக சேவை பிரிவில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே விண்ணப்பங்கள் சமர்ப்பித்தவர்கள் மீண்டும் சமர்ப்பிக்கத் தேவையில்லை. அவர்களுக்கான கொடுப்பனவு வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை பிரதேச செயலக சமூக சேவை பிரிவில் பெற்றுக் கொள்ள முடியும். விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் போது தமது அடையாள அட்டை பிரதி ஒன்றையும் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பிக்குமாறும் புத்தளம் பிரதேச செயலகம் சமூக சேவைப் பிரிவு தெரிவித்துள்ளது.






# நியூசிலாந்துக்கு எதிராக இலங்கையில் அரிதாக 'ஆறு நாள்' டெஸ்ட் போட்டி



நியூசிலாந்து மற்றும் இலங்கை அணிகள் அடுத்த மாதம் மிக அரிதாக ஆறு நாள் டெஸ்ட் போட்டி ஒன்றில் ஆடவுள்ளது. இதன்போது போட்டிக்கு இடையே ஒரு நாள் ஓய்வு தினம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிராக இரண்டு டெஸ்ட் போட்டிகளில் ஆடுவதற்காக நியூசிலாந்து அணி அடுத்த மாதம் இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது. இதற்கான போட்டி அட்டவணையை இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

இதில் இரு அணிகளும் ஆடும் முதலாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் செப்டெம்பர் 18 ஆம் திகதி காலியில் ஆரம்பமாகவுள்ளது. எனினும் இலங்கையில் எதிர்வரும் செப்டெம்பர் 21 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளதால் போட்டியின் நான்காம் நாளான அன்றைய தினம் ஓய்வு தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து செப்டெம்பர் 22 ஆம் திகதி நான்காம் நாள் ஆட்டம் நடைபெறவுள்ளது.

இந்த டெஸ்ட் தொடரின் இரண்டாவது மற்றும் கடைசி போட்டி எதிர்வரும் செப்டெம்பர் 26 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை அதே காலியில் நடைபெறும்.

இந்த இரண்டு டெஸ்ட் போட்டிகளும் ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்சிப் தொடரின் அங்கமாகவே நடைபெறவுள்ளது. இதன் புள்ளிப் பட்டியலில் முன்னேற்றம் காண்பதற்கு இரு அணிகளுக்கும் இந்தத் தொடர் தீர்க்கமானதாக உள்ளது.

டெஸ்ட் போட்டிகளுக்கு இடையே ஓய்வு நாள் எடுக்கும் மரபு 19ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் வழக்கமாக இருந்தது. குறிப்பாக இங்கிலாந்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் ஓய்வு தினம் வழங்கப்படும். இந்த வழக்கம் தற்போது கைவிடப்பட்ட போதும் தேர்தல், சமய நிகழ்வுகள் போன்ற தவிர்க்கமுடியாத சூழலில் ஓய்வு நாள் எடுக்கப்பட்டு வருகிறது.

2008 இல் டாக்காவில் நடந்த டெஸ்ட் போட்டியில் டிசம்பர் 29 ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல் நடந்ததால் அன்றைய தினம் ஓய்வு வழங்கப்பட்டது.

இலங்கையில் இவ்வாறான ஒரு நிலை கடைசியாக ஏற்பட்டது 2001 ஆம் ஆண்டிலாகும். கொழும்பில் சிம்பாப்வேயுக்கு எதிரான அந்த டெஸ்ட் போட்டியில் போயா தினத்தன்று ஓய்வு நாளாக ஒதுக்கப்பட்டது.

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான நியூசிலாந்து அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருப்பதோடு இலங்கை சுற்றுப்பயணத்திற்கு முன்னர் அந்த அணி இந்தியா சென்று ஆப்கானிஸ்தானுக்கு எதிராக ஒரு டெஸ்ட் போட்டியில் ஆடவுள்ளது.

இலங்கை சுற்றுப்பயணத்தைத் தொடர்ந்து மீண்டும் இந்தியா செல்லும் நியூசிலாந்து அணி அங்கு இந்தியாவுக்கு எதிராக மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடவுள்ளது.

இலங்கை மென்பந்து கிரிக்கெட் சம்மேளனத்தின்

# எல்.பீ. அபான்ஸ் கிண்ண இறுதி சுற்றுப் போட்டிகள் இன்று ஆரம்பம்



இலங்கை மென் பந்து கிரிக்கெட் சம்மேளனத்தினால் நாடு முழுவதும் நடத்தப்பட்ட எல்.பீ. அபான்ஸ் சம்பியன்சிப் கிண்ணம் மற்றும் ஐ.டீ.என். கிரிக்கெட் தொடரின் இறுதிச் சுற்றுப் போட்டிகள் இன்றும் (24) நாளையும் (25) பிலியந்தலை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இதில் மாவட்ட மட்டத்தில் தெரிவான 24 அணிகளும் மாவட்ட சம்பியன் போட்டிகளில் பங்கேற்பதோடு தொடர்ந்து மாகாண மட்ட அணிகள் போட்டியிடும் சுப்பர் 9 சுற்று போட்டிகள் நாளை நடைபெறவுள்ளன. இந்தத் தொடரில் திருகோணமலையில் இருந்து கோல்டன் ஸ்டார் அணியும், யாழ்ப்பாணத்தில் இருந்து நோனேமிஸ் அணியும், கிளிநொச்சியில் இருந்து டிசைன் ஸ்டார் அணியும், முல்லைத்தீவில் இருந்து தேலாகல் அணியும், வவுனியாவில் இருந்து அல் அர்பா அணியும் மன்னாரில் இருந்தும் ஜின்னா அணியும், மட்டக்களப்பில் இருந்து பெட்டி கிளாடியேட்டர் அணியும், அம்பாறையில் இருந்து புளூ மௌன்டன் அணியும் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தப்பது.

தொடரில் அகில இலங்கை சம்பியனாகும் அணி எல்.பீ. அபான்ஸ் கிண்ணத்தை வெல்வதோடு பத்து இலட்சம் ரூபா பணப்பரிசையும் பெறவுள்ளது.

# ஸாஹிரா–டி.எஸ். சேனநாயக்க வருடாந்த ரக்பி போட்டி இன்று

ருஸைக் பாரூக்



கொழும்பு ஸாஹிரா மற்றும் டி.எஸ். சேனநாயக்க கல்லூரிகளுக்கு இடையிலான ஆர். ஐ.டி. அலஸ் வருடாந்த ரக்பி வெற்றி கிண்ண போட்டி இன்று (24) சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு ஸாஹிரா கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்று பிரதான போட்டிக்கு முன்னதாக கனிஷ்ட போட்டிகளும் நடைபெறவுள்ளன. இந்த ரக்பி தொடர் 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அடுத்த மூன்று ஆண்டுகளும் கொவிட் தொற்று காரணமாக நடைபெறவில்லை. கடைசியாக நடந்த போட்டியில் ஸாஹிரா கல்லூரி வெற்றியீட்டியது. இந்நிலையில் இன்று நடைபெறும் போட்டியை காண்பதற்கு பழைய மாணவர்கள் உட்பட அனைவருக்கு இரு பாடசாலைகளும் அழைப்பு விடுத்துள்ளன. இது தொடர்பில் விளக்கும் ஊடக சந்திப்பு கடந்த புதன்கிழமை (21) ஸாஹிரா கல்லூரியில் இடம்பெற்றது.

# வேட்பாளர் நியமனத்தை ஏற்றார் கமலா ஹாரிஸ்



அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நியமனத்தை அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொண்டார்.

'அனைத்து அமெரிக்கர்களின் சார்பிலும், கடினமாக உழைத்து, கனவுகளைத் துரத்தி, பிறரின் நலனைக் கருத்தில் கொண்டு நடக்கும் அனைவரது சார்பிலும் நான் ஜனாதிபதி வேட்பாளர் நியமனத்தை ஏற்றுக்கொள்கிறேன்' என்றார் கமலா ஹாரிஸ்.

ஹாரிஸ் உரையாற்றுவதற்கு முன்னர் ஜனாதிபதி ஜோ பைடன் அவரைத் தொலைபேசியில் அழைத்து வாழ்த்துத் தெரிவித்ததாக வெள்ளை மாளிகைப் பேச்சாளர் கூறினார்.

அமெரிக்காவின் சிக்காகோ நகரில் நடைபெற்ற நான்கு நாள் ஜனநாயகக் கட்சி மாநாடு நேற்று (23) நிறைவடைந்தது.

# உலகின் 2ஆவது பெரிய வைரக்கல் கண்டுபிடிப்பு




உலகின் இரண்டாவது மிகப் பெரிய வைரக்கல் ஒன்று பொட்ஸ்வானாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அது 2,492 கேரட் வைரம் என அதைக் கண்டுபிடித்த லுகாரா டயமன்ட் நிறுவனத்தின் தலைவர் கூறினார்.

பொட்ஸ்வானா ஜனாதிபதி அந்த வைரத்தைப் பார்வையிடவுள்ளார்.

உலகில் மிக அதிகமான வைரங்களைத் தயாரிக்கும் நாடாக பொட்ஸ்வானா உள்ளது. இதற்கு முன் அங்கு 2019ஆம் ஆண்டு மிகப் பெரிதாக 1,758 கேரட் வைரம் கண்டுபிடிக்கப்பட்டது. அதற்கு செவேலோ என்று பெயரிடப்பட்டது.

உலகின் ஆகப் பெரிய வைரம் 1905ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டது. அது 3,016.75 கேரட் 'கல்லினன்' வகை வைரமாகும்.

# சைபர் தாக்குதலை தவிர்க்க சீனாவை ஜெர்மனி வலியுறுத்து



சைபர் தாக்குதல்களையும் உளவு பார்ப்பதையும் தவிர்ப்பதற்கும் தடுப்பதற்கும் கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜெர்மனி சீனாவை வலியுறுத்தியுள்ளது.

ஜெர்மனியின் தேசிய உளவு நிறுவனமொன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட சைபர் தாக்குதல் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணையை அடுத்து ஜெர்மனியின் உள்துறை அமைச்சர் நான்சி பேசர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உளவுப் பணிகளை மேற்கொள்ளும் ஜெர்மனியின் தேசிய அலுவலகத்தின் மீது சீனாவுடன் சம்பந்தப்பட்டவர்கள் சைபர் தாக்குதலை மேற்கொண்டுள்ளமை விசாரணைகளில் உறுதியாகியுள்ளது. சைபர் தாக்குதலுக்கு உள்ளான நிறுவனத்தின் வலையமைப்பின் ஒரு பகுதி சீரமைக்கப்பட்டுள்ள போதிலும் மேலுமொரு பகுதி இன்னும் மீளமைக்க முடியாத நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செய்திகள்

# இழுபறிக்கு மத்தியில் கெய்ரோவில் மீண்டும் காசா போர் நிறுத்த பேச்சுவார்த்தை ஆரம்பம்

### மத்திய மற்றும் தெற்கு காசாவில் இஸ்ரேல் படை நடவடிக்கை உக்கிரம்



மத்திய மற்றும் தெற்கு காசாவில் இஸ்ரேல் தனது படை நடவடிக்கையை தீவிரப்படுத்தி உக்கிர தாக்குதல்களை நடத்தி வரும் நிலையில் புதிய சுற்றுப் போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைக்காக இஸ்ரேலிய பிரதிநிதிகள் நேற்று எகிப்து தலைநகர் கெய்ரோவுக்கு திரும்பியுள்ளனர்.

பணயக்கைதிகளை விடுவிக்கும் ஒப்பந்தத்தை முன்னேடுக்கும் வகையில் இஸ்ரேலிய உளவுப் பிரிவான மொசாட்டின் தலைவர் டேவிட் பார்னி மற்றும் உள்ளூர் பாதுகாப்பு சேவை தலைவர் ஷின் பெட் எகிப்து தலைநகர் பயணித்திருப்பதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் பேச்சாளர் ஓமர் டொஸ்ட்ரி ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

10 மாதங்களுக்கு மேல் நீடிக்கும் இந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வர எகிப்துடன் கட்டார் மற்றும் அமெரிக்க மத்தியஸ்தர்கள் முயன்று வருகின்றனர். கடந்த வாரம் பிராந்தியத்திற்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன், காலம் கடந்து செல்வதாகவும் எதிர்வரும் நாட்களில் உடன்படிக்கை ஒன்று எட்டப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி இருந்தார்.

வடக்கு காசா பகுதியில் நேற்று மோதல்கள் நீடித்ததாகவும் மத்திய காசாவில் கடுமையான செல் குண்டுகள் வீசப்பட்டு வந்ததாகவும் தெற்கே ரபாவ நகரில் டாங்கிகள் குண்டுகளை வீசியதாகவும் அங்கிருப்போரை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

இஸ்ரேல் மற்றொரு இராணுவ நடவடிக்கை ஒன்றுக்காக மக்களை வெளியேறும்படி உத்தரவிட்டதை அடுத்து மத்திய காசாவின் டெயிர் அல் பலா மற்றும் தெற்கு நகரான கான் யூனிஸில் இருந்து ஆயிரக்கணக்காக மக்கள் மீண்டும் வெளியேறி வருவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இந்தப் போரினால் காசா மக்கள் தொகையில் 90 வீதத்துக்கும் அதிகமானவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் இடம்பெயர்ந்திருப்பதோடு நோய்கள் பரவும் சூழலில் மக்கள் நீர் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகள் இன்றி அடைக்கலம் பெறுவதற்கு இடம் இல்லாத நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதாக ஐ.நா. குறிப்பிட்டுள்ளது.

காசாவில் அண்மைய வாரங்களில் இஸ்ரேல் தனது இராணுவ நடவடிக்கையை விரிவுபடுத்தி வரும் சூழலில் மக்கள் அடைக்கலம் பெற முடியுமான பகுதி நாளுக்கு நாள் சுருங்கி வருகிறது. இதனால் காசாவில் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வெறுமனே 15 சதுரமைல் பகுதிக்குள் தற்போது நெருக்கப்பட்டிருப்பதாக வோல் ஸ்ட்ரீட் ஜெர்னல் பத்திரிகை வெளியிட்ட அறிவிப்பு ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

'மக்கள் முடிவு இன்றி அழிக்கப்பட்ட ஓர் இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு ஓடியே களைப்படைந்தும் அச்சத்திலும் இருக்கின்றனர்' என்று பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. மனிதாபிமான இணைப்பாளர் முஹன்னத் ஹதி வியாழக்கிழமை குறிப்பிட்டார். 'இப்படித் தொடர முடியாது' என்றும் அவர் வலியுறுத்தினார்.

காசாவெங்கும் இஸ்ரேல் நேற்றுக் காலை நடத்திய தாக்குதல்களில் 12க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டதாக காசா மருத்துவ வட்டாரம், அல் ஜசீரா செய்தி நிறுவனத்திற்கு குறிப்பிட்டது. இதில் கான் யூனிஸ், நுஸைரத் மற்றும் டெயிர் அல் பாலவிலேயே அதிக உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. காசா நகரின் செய்தூன் பகுதியில் இடம்பெற்ற வான் தாக்குதல் ஒன்றிலும் ஒருவர் பலியாகியுள்ளார்.

கான் யூனிஸில் பயங்கர தாக்குதல்களை நடத்தி படை நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்த இஸ்ரேலியப் படை பெரும் அழிவுகளுக்குப் பின்னர் கடந்த ஏப்ரலில் அங்கிருந்து வாபஸ் பெற்றிருந்தது. எனினும் இன்னும் அங்கும் கட்டுப்பாட்டை உறுதி செய்ய முடியாத நிலையில் மீண்டும் தாக்குதல்களை ஆரம்பித்திருப்பதால் அங்குள்ள மக்கள் பெரும் அவலத்தை சந்தித்துள்ளனர்.

'ஒவ்வொரு முறையும் நாம் எங்காவது சென்றடைந்து இரண்டு நாட்களிலேயே புதிய வெளியேற்ற உத்தரவு வந்து விடுகிறது. இங்கே வாழ வழியில்லை' என்று ஹிதம் அப்தலாம் என்பர் குறிப்பிட்டார். காசாவில் ஒரு வருடத்தை நெருங்கும் போரில் கொல்லப்பட்டிருக்கும் பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 40,200ஐ தாண்டியுள்ளது.

இந்தப் போர் பிராந்தியத்தில் பரந்த போர் பதற்றத்தை ஏற்படுத்தி இருக்கும் சூழலில் அதனை தவிர்ப்பதற்கு போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கான இராஜதந்திர முயற்சிகளும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக ஈரான் தலைநகரில் வைத்து ஹமாஸ் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மைல் ஹனியே படுகொலை செய்யப்பட்டது மற்றும் லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் ஹிஸ்புல்ல முன்னணி தளபது ஒருவர் கொல்லப்பட்ட சம்பங்களை அடுத்து இஸ்ரேல் மீது பதிலடி கொடுப்பது தொடர்பில் ஈரான் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்புகள் எச்சரித்து வருகின்றன.

அமெரிக்காவின் சிக்காகோ நகரில் ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நியமனத்தை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண்ட அந்நாட்டு துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ், 'பணயக்கைதிகளை விடுவிப்பது மற்றும் போர் நிறுத்த உடன்படிக்கையை எட்டுவதற்கான நேரமாக இது உள்ளது' என்றார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடந்த மே மாதம் முன்வைத்த திட்டத்தை அடிப்படையாகக் கொண்டே தற்போது போர் நிறுத்தப் பேச்சு முன்னெடுக்கப்பட்டு வருகிறது. மூன்று கட்டங்கள் கொண்ட இந்தத் திட்டத்தின் ஆரம்பத்தில் கைதிகள் பறிமாற்றம் ஒன்றுக்கு வலியுறுத்தப்பட்டிருப்பதோடு இறுதிக் கட்டத்தில் முழுமையாக மற்றும் விரிவான போர் நிறுத்தம் ஒன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் காசாவில் மக்கள் வாழும் அனைத்து பகுதிகளிலும் இருந்து இஸ்ரேலியப் படை வாபஸ் பெற வேண்டும். எனினும் இந்தத் திட்டத்திற்கு இஸ்ரேல் புதிதாக நிபந்தனைகளை விதித்ததோடு காசாவில் இருந்து படைகளை வாபஸ் பெறுவது குறித்து முரணான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருகிறது.

குறிப்பாக காசாவின் எகிப்து எல்லையில் உள்ள பிலடெல்பியா தாழ்வாரம் மற்றும் மேலும் இரு இடங்களில் படைகளை நிலைநிறுத்துவதில் இஸ்ரேல் உறுதியாக உள்ளது. இந்நிலையில் போர் நிறுத்தம் ஒன்றுக்கு உடன்பாட்டை எட்டுவதில் தொடர்ந்து இழுபறி நீடித்து வருகிறது.

முன்னதாக கடந்த வாரம் கட்டார் தலைநகரில் இரண்டு நாள் பேச்சுவார்த்தை இடம்பெற்றபோது அதில் ஹமாஸ் அமைப்பு பங்கேற்கவில்லை என்பதோடு பேச்சுவார்த்தையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் எட்டப்படவில்லை. இந்நிலையிலேயே கெய்ரோவில் மீண்டும் பேச்சுவார்த்தை ஆரம்பமாகியுள்ளது.

காசாவில் போர் வெடித்தது தொடக்கம் இஸ்ரேலின் லெபனான் எல்லை பகுதியில் இஸ்ரேலிய படை மற்றும் ஹிஸ்புல்லா போராளிகள் கிட்டத்தட்ட தினசரி பரஸ்பரம் தாக்குதல்களை நடத்தி வரும் சூழலில் அது முழு அளவில் போர் ஒன்றாக வெடிக்கும் அச்சுறுத்தல் நீடித்து வருகிறது.

இந்நிலையில் லெபனானின் தெற்கிலுள்ள அல்தா அல் ஜபல் என்ற கிராமத்தில் வீடு ஒன்று மற்றும் கார் ஒன்றின் மீது இஸ்ரேலியப் படை நேற்று தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் எழு வயது சிறுவன் உட்பட இருவர் கொல்லப்பட்டதாக லெபனானின் நஹ்ர் செய்தி நிறுவனம் மருத்துவ வட்டாரத்தை மேற்கோள்காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஓகஸ்ட் மாதம் 24ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.